ஸ்ரீ ஸிவாப்யாம் நம:॥

# வர்ணாசிரமதர்மம்.

அந்தணர் ஜாதி

இஃது

மதுரைகாலேஜ் அஸிஸ்டெண்ட்

சம்ஸ்கிருத பண்டிதராகிய

M N சுப்பிரமணிய சாஸ்திரிகளால்

மதுரை தர்ம சாஸ்திர சபையில்

1908 ௵ செப்டம்பர் மீ

உபந்யஸிக்கப்பட்டது

சென்னை, திருவல்லிக்கேணி

"வாணீபூஷணம்" பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

மேமீ ௴

1911

இதன் விலை அணா 6.

Y592
N4
171667

செப்பனிடுபவர் பெயர்

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட நாள்

செப்பனிட்டு முடித்த நாள்

சரிபார்க்கும் ஆராய்ச்சி
மு. யாளர் உதவியாளர்
கையொப்பம் கையொப்பம்

ஸ்ரீ ஸிவாய நம:॥

# வர்ணாசிரமதர்ம

அதனுள் ஜாதி

இஃது

மதுரைகாலேஜ் அஸிஸ்டெண்ட்

சம்ஸ்கிருத பண்டிதராகிய

M N சுப்ரமணிய சாஸ்திரிகளால்

மதுரை தர்ம சாஸ்திர சபையில்

1908 ௵ செப்டம்பர் ௴

உபந்யாஸிக்கப்பட்டது

சென்னை, திருவல்லிக்கேணி

"வாணீபூஷணம்" பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

மே ௴

1911

இதன் விலை அணா 6.

3



# முகவுரை.

ஸர்வலோக நியந்தாவாகிய பரமேசுவரன் சேதனசேதனாத்மகமான பிரபஞ்சத்தை சிருஷ்டித்த பின்னர்? அதிலுள்ள ஆன்மகோடிகள் அவரவர்களுடைய கரணபாடவங்களுக்குத் தக்கவாறு உத்தமகதியை நாடி முயலவும் அதற்கனுகுணமாக ஞானம், உபாஸனை, பக்தி, தர்மம் இவைகளை அனுஷ்டித்து நடக்கவும் வேண்டி அப்யுதயம் நிச்ரேயஸம் என்ற இருமுறையான தர்மங்களைவேதம், ஸ்மிருதி, சூத்திரம் முதலிய ஆக்ஞைகளினால் விதித்திருக்கின்றனர். அந்த இருமுறை தர்மங்களும் அவைகளை அனுஷ்டிக்கவேண்டிய தந்திரங்களும் வர்ணம், ஆசிரமம் என்ற இருவிதநிலைமைகளுக்குத் தக்கவாறு பிரிகின்றன. ஆகவே வர்ணமும் ஆசிரமமும் அப்யுதய நிச்ரேயஸாநுஷ்டானத்திற்குப் பரம முக்கியமான அம்சங்களாய் இருக்கின்றமையால் அவைகளைப்பற்றியும் அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட சகலவிதிகளைப்பற்றியும் முதலில் செவ்வையாய் விசாரித்துத் தெரிந்துகொள்ளவேண்டியதானது சாஸ்திரத்தில் ஆஸ்திக்கிய புத்தியுள்ள எல்லோருக்கும் இன்றியமையாததாகவிருக்கின்றது. ச்ருதிகௌதுகம் என்று நமதுநாட்டில் தொண்டுதொண்டுக்கைக் கொள்ளப்பட்டுவரும் வேதத்தின் பிராமாண்யத்தையும் ஜாதி வர்ணாசிரமத்தையும் அவைகளுக்குரிய தர்மங்களின் பிரயோசனத்தையும் இக்காலத்தில் நவீன தாத்பரியங்களுக்கு ஈடுபட்ட மந்தமதினர்கள் கூசாமல் நிராகரித்தும்வேதவிரோதமான ஆசாரணைகளைக் கைக்கொண்டு நடந்து வருவதையும் தங்களுடைய அறியாமையினால் தாங்கள்மட்டும்கேடுறுவதன்றி தங்களுடைய நியாயாபாஸமான வசன கோஷங்களினால் பிறர்களையும் கெடுக்கமுயற்சித்து வருவது பாபங்களைமேன் மேலாக வளர்த்துத் தோற்றுவிக்கும் கலியுகத்தின் செயலென்று யாம்மிகவியாகூலத்துடன்கருதவேண்டியதாய் இருக்கின்றது. இந்தநிலைமையில் உண்மை

சிரத்தையுடன் அறிய விரும்புகிறவர்களுக்கு வர்ணம் ஆசிரமம் இவைகளுடைய லக்ஷணங்களும் அவைகளுக்கு சாஸ்திரீயமாய் ஏற்பட்டிருக்கும் கடமைகளும் நன்றாகவும் பிரமாண புரஸ்ஸரமாகவும் தெரிந்தால் வர்ணாசிரம விரோதிகளுடைய பிரயத்தினங்கள் ஒருவாறு தௌர்பல்யத்தையடையவும் அவர்களுடைய அசாஸ்திரீயமான போதனையினின்று சாமான்ய ஜனங்களைக் காப்பாற்றவும் உதவியாய் இருக்குமென்று கருதி வர்ணாசிரம தர்மம் என்கிற பெயருடன் இந்த உபன்யாஸமானது எழுதப்பட்டிருக்கிறது. இந்த உபன்யாஸத்தினால் ஆங்காங்கு பிரசவிக்கப்பட்டுவரும் பூர்வபக்ஷங்களை நிராகரித்து சாஸ்திரசம்பந்தமான சித்தாந்தங்கள் விவரிக்கப்பட்டிருக்கிறதேயல்லாது வர்ணாசிரமதர்ம தூஷகமான அன்ய மதங்கள் எதையும் தூஷிக்கவேண்டுமென்கிற பிரதானதாத் பரியத்துடன் இது எழுதப்பட்டதன்று. இந்த உபன்யாஸத்தின் விஷயமானது அப்பிரத்தியக்ஷமும் சூக்ஷ்மமுமான வித்தையாய் இருப்பதாலும் அந்தந்தக்காலங்களில் மனிதர்களுடைய அதிகார பேதங்களுக்குத் தக்கவாறு பற்பல மகான்களால் பற்பலவிதமாகக் கூறப்பட்டிருப்பதாலும் இந்த உபன்யாஸத்தில் அடங்கிய விவரங்களில் ஏதாவது பிழையிருந்தாலும் இருக்கலாம். அப்படி நேர்வதும் மனுஷ்யபுத்திக்கு இயற்கையாய் இருப்பது பற்றி சூக்ஷ்மதர்சிகளான மகான்கள் அனையோர்களும் இதிற்காணப்படும் குற்றங்களைப் பாராட்டாது குணத்தைக் கைக்கொண்டு இந்த உபன்யாஸமானது எல்லோருக்கும் பிரயோசனமுள்ளதாக அமையும்படி செய்து அனுக்கிரகிக்கவேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் பிரார்த்திக்கப்படுகின்றது.

---

இங்ஙனம்

M. N. சுப்பிரமணியசாஸ்திரீ

# வர்ணாசிரம தர்மத்தின் விஷய அட்டவணை.

## பூர்வபக்ஷிகளின் விஷய அட்டவணை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | வர்ணமென்ற சொல்லின் அர்த்தம் | 2. |
| 2. | ஜாதி என்றாலென்ன | ,, |
| 3. | பிராமணன் முதலிய பதங்களின் அர்த்தம் | 4 |
| 4. | பிராமண முதலியஜாதி உண்டென்பதற்கு வேதம் முதலியன இடம் கொடுக்கமாட்டா தென்பது | ,, |
| 5. | ஸ்மிருதிகள் பொய் அல்லது புருஷகர்த்திருகமென்பது | ,, |
| 6. | ஸ்மிருதிகளின்அபிப்பிராயம் பிர்மஞானம் பெற்றவனே பிராமணனென்பது | ,, 5 |
| 7. | கீதையின் அபிப்பிராயமும் அப்படியே என்பது | 6 |
| 8. | வியாஸர் முதலியவர்களின் உற்பத்தி | 8 |
| 9. | ஜனகரிடம் பிராமணர்கள் உபதேசம் செய்து கொண்டார்களென்பது | ,, |
| 10. | சத்திய காமஜாபாலர் சரித்திரம் | 9 |
| 11. | குணங்களே வர்ணபேதத்திற்கு காரணமென்று பௌராணிகர் களபிப்பிராயமென்பது | ,, 10 |
| 12. | தர்மவியாதன் சரித்திரம் | ,, |
| 13. | வஜ்ஜிரசூசி உபனிடத அர்த்தம் | 14 |
| 14. | புருஷசூக்தத்தின் விவரம் | 19 |
| 15. | விசுவாமித்திரர் தவத்தினால் பிராமணியம் பெற்றாரென்பது | ,, 20 |
| 16. | சங்கரபகவத் பாதர்கள் மபிராம் மண்யத்தையே ஏன்றுக்கொண்டாரென்பது | ,, |
| 17. | விதுரனின் சரித்திரம் | 21 |
| 18. | நற்கன்மமுள்ள எல்லோரும் பிராமணனென்பது | 22 |


## சித்தாந்தம்.


| | | |
|---|---|---|
| 1. | பிராமணன் முதலியசொல்லின் உண்மையான அர்த்தம் | 24 |
| 2. | ஸ்மிருதிகளின் அபிப்பிராயம் பிர்மஞானம் பெற்றவன் மட்டிலும் பிராமணனில்லை யென்பது | ,, 30 |

3. ஜனகனின் ஞானனிலை 31

4. ஸ்மிருதிகள் பொய்யல்லவென்பது 33

5. நற்கன்மமுள்ள எல்லோரும் பிராமணனாக ,, மாட்டாரென்பது 35

6. எல்லோரும் ஒன்றுதானென்பது மேலாத்த ,, மதஸ்தர்களுக்குத் தகாதென்பது 37

7. தர்மவியாதர் சரித்திரத்தின் ரகசியம் 38

8. தர்மவியாதரின் பூர்வஜன்ம சரித்திரம் 41

9. சத்தியகாம்ஜாபால சரித்திரத்தின் ரகசியம் 43

10. பௌராணிகர்கள பிப்பிராயம் குணமேகாரண ,, மென்பது மட்டிலும் இல்லையென்பது 44

11. வஜ்ஜிரசூசி உபனிடதத்தின் ரகசியார்த்தம் ,,

12. ஜாதியென்பது சாஸ்திரீயம்தானென்பது 49

13. ஜனகரிடம் பிராமணர்கள் உபதேசம் பெற ,, வில்லை யென்பது 50

14. விசுவாமித்திரர் தவத்தினல் பிராமணியம் பெற வில்லை அவர்பிராமண பிந்துவே என்பது ,,

15. பிராமணபிந்து எங்குவிழுந்தாலும் அதுபிராம ணனே வென்பதற்குச் சமாதானம் 53

16. சங்கரபகவத்பாதருக்கு கன்ம பிராம்மண்யத் ,, தில் அபிப்பிராய மில்லை யென்பது 57

17. கீதையில் [illegible] என்ற சுலோ ,, கத்தின் அர்த்தம் 58

18. வர்ணசிரமதர்மத்தை ஆசாரியர் ஒப்புக்கொண்ட ,, தற்கு சூத்திரபாஷ்யப் பிரமாணம் 60

19. விதுரனின் ரகசியம் அவர் சூத்திரரே என்பது ,,

20. சூத்திரனுக்கு ஞானசாஸ்திரத்தில் அதிகாரம் கிடையாதென்பது 61

பிராமணன் முதலியஜாதி உண்டென்பதற்கு சுருதிப் பிரமாண முண்டென்பது ,,

பிராமணர்கள் சூத்திரர் முதலியவர்களை விரோ ,, திக்கவே இல்லை யென்பது 68

நமது முன்னோர்கள் ஸ்ரீஜாதியில் எவ்விதம்
சகோதரபாவம் க்ராண்பித்தார்களென்பது . 69
அகண்ட பூமண்டலத்தில் அல்பமான விடத்திலா ,,
வர்ணாசிரம தர்ம மென்பது 73
பவிஷ்யத் புராணத்தின் சில ரகசியங்கள் 74
பவிஷ்யத் புராண ரீதியாய் எல்லோரும் ,,
நடக்கவேண்டுமா வென்பது 79
மங்களம் 80

சுபம்.

M. N. சுப்பிரமணியசாஸ்திரீ.

---

## பிழைதிருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 7 | 15 | கூறுயது | கூறியது |
| 9 | 4 | ஹ்ருஹயம் | ஹ்ருஹவயம் |
| 11 | 1 | வன | மன |
| 14 | 8 | ஸ்மிருக்கு | ஸ்மிருதிக்கு |
| 24 | 12 | மாட்டார | மாட்டாரா |
| ,, | 22 | கோடான | கோடானு |
| ,, | 26 | சிற்றறிவுக்குகட்டிய | சிற்றறிவுக்கெட்டிய |
| ,, | 27 | யுத்தி | யுக்தி |
| ,, | ,, | திற்டி | தின்படி |
| 27 | 31 | கேதுவேஎன்று | கேதுவென்று |
| 29 | 4 | கொன்றுதனு | கொன்றதனு |
| ,, | 27 | கும்முள்ள | குமுள்ள |
| 30 | 3 | வெண்டைங்காய் | வெண்டைக்காய் |
| 31 | 16 | மாரக்கத்தில் | மார்க்கத்தில் |
| 35 | 17 | ப்ராஹாணம் | ப்ராஹ்மணம் |
| ,, | 18 | வெகுமணோதி | ணோதி |
| ,, | 19 | க்ஷேமாரணஉஹா | க்ஷேமவெகுமா |

| | | | |
|---|---|---|---|
| ,, | ,, | சிருஷ்தாரோ | சிருஷ்டித்தாரோ |
| 36 | 27 | ஆதல்பற்றி | ஆதல்பற்றியே |
| 40 | 9 | ஸ்வயமெழு | ஸ்வயமேழு |
| 48 | 28 | விட்டார்களே | விட்டீர்களே |
| 49 | 22 | ஒளாஸாவர | ஒளாஸோவர |
| 50 | 19 | சாத்ல் பத்தில் | சாதல்பத்தில் |
| ,, | 24 | மதியில் | மத்தியில் |
| ,, | 29 | வமெணூ | வூமெணூ |
| ,, | 30 | ஷ்ராவிக்ஷம் | ஷ்ராக்ஷம் |
| 52 | 11 | சாப்பிட்டடும் | சாப்பிடட்டும் |
| 53 | 22 | ரென்றெறி | ரென்றறி |
| 56 | 26 | உங்களுபனிட | உங்களுபனிட |
| ,, | 27 | க்ரத | ரக்த |
| 59 | 27 | இன்னு | இன்னும் |
| 60 | 2 | தவ்ஃ | தவ |
| ,, | 11 | ஒவெமரூ | ஒவெமரூா |
| 61 | 13 | இவா | இவர் |
| ,, | 18 | ஜன்மந்ாத | ஜன்மாந்த |
| ,, | 24 | வெளியில் | வெளியில் |
| 62 | 1 | தஒசேவம் | தஒசகம் |
| 63 | 1 | ஸ்ராஹணொணா | ஸ்ராஹூணொா |
| 63 | 17 | காவலி | காலி |
| 64 | 3 | காரியங்களை | காரிகளை |
| ,, | 6 | யத்திய் | யத்தில் |
| ,, | ,, | பட்டபிஷேகம் | பட்டாபிஷேகம் |
| 69 | 22 | வித்தியை | விதியை |
| 70 | 16 | நர்பட்ட | நற்பட்ட |
| 76 | 4 | ஊவா: | ஊசேவா: |
| 77 | 6 | ஸ்ர்சேவசு | சர்சேவசு |
| 78 | 14 | கெடுகின்றவதோ | கெடுகின்றனவோ |
| 79 | 23 | கொண்டிக்கும | கொண்டிருக்கும் |

---

M. N. சுப்பிரமணிய சாஸ்திரீ.

௳

சுபமஸ்து.

# வர்ணாசிரமதர்மம்.

## அதனுள் ஜாதி.

ப்ரஹ்மக்ஷத்ரம் வைஶ்யஶூத்ராஶ்ச ஸ்ருஷ்டா
வர்ணா நாமத: ஸர்வதோஹ்யக்ரஜன்மபி: ।
ஸ சைக: ப்ரஹ்மா ப்ரஹ்மணோ ப்ரஹ்மஜாதா
ஶ்ருதீம் ஸ்ம்ருதீம் யோ வ்யவஸ்தாம் ததீய ॥
ஸம்வித்ஸித்தாம்கரீ ப்ரஹ்மவித்யா
தத்வாவித்யாம் சைவதத்வம்விகாஸ: ।
யஸ்யாஸ்வாம் தத்ஸ்வரூபம் ப்ருவிவாது
ஶ்ருதிஸ்ம்ருத்யோ: வர்ணாஶ்ரமம் ஸம்ப்ரதிவ்ய: ॥

ஆரியர்களே! இன்று இச்சபையின் காரியதரிசி அவர்களால் வர்ணாச்ரம தர்மமென்ற விஷயத்தைப் பற்றி உபன்யசிக்கும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறேன். அதையனுசரித்தும்பெரியோர்களது கிருபையை முன்னிட்டும் ஏதோ எனக்குத்தெரிந்தமட்டில் கொஞ்சம் சொல்லுகிறேன். அதைப் பொருட்டாயெண்ணி என்னை கிருதார்த்தனாகச் செய்யக் கோருகிறேன்.

ஆனால் இப்போது வந்த விஷயம் "வர்ணாச்ரமதர்மம்" என்றிருந்தபோதிலும் யான் இப்போது இது முழுமையும் சொல்ல முன்வரவில்லை. ஏனெனில் "வாக்யார்த்தஜ்ஞானே பதார்த்தஜ்ஞானம் ஹேது:" வாக்கியத்தின் அர்த்தம் தெரிய வேண்டுமேயாயின் பதங்களின் அர்த்தம் முதலில் தெரியவேண்டியது காரணம். உதாரணமாக "ஜ்ஞானம் ஸம்பாதயதி" தடியைக்கையில் வைத்திருக்கும்

மனிதனைக் கூப்பிடு'' என்றால் அங்கு தனித்தனிப் பதத்தினர்த்தம் அறியாத ஒருவன் யாங்ஙனம் அதைச்செய்ய முயல்வான். அது போல் வர்ணாச்ரம தர்மமென்ற விடத்தில், வர்ண—ஆசிரம—தர்ம என்ற பதங்கள் சமாஸத்தினால் ஒன்றாய் நின்ற போதிலும் வர்ண மென்றாலென்ன, ஆசிரமமென்றாலென்ன, வென்பதைத்திருத்திக் கொண்டால் பிறகு தர்மமென்பது இவைகளினதென வறியலாமாதல் பற்றி இன்று முதலில் வர்ணமென்பது என்ன வென்பதை மட்டும் தெரிந்துகொள்ள ஆரம்பிக்கிறேன். இதில் முதலில் வர்ண மென்ற சொல்லின் அர்த்தத்தைக் கவனிப்போம்.

வர்ணமென்ற சொல்லுக்குப்பொதுவாய் நிறம் என்றும் அக்ஷரம் அதாவது எழுத்தென்றும் ஈசுவர சங்கேதத்தினால் பிரசித்தமாய் ஏற்பட்டிருந்தபோதிலும் இவ்விரண்டும் இப்போது நமக்குப் பிரகிருதவிஷயத்திற்கு உதவுகிறதில்லையாதலால் பிரகிருத விஷயத்திற்கமையும் "ஜாதி'' என்பதை எடுத்துக்கொள்வோம். ஆனால் வர்ணசப்தத்திற்கு ஜாதியென்ற அர்த்தமுண்டோவெனில் உண்டென்றேற்றுக்கொள்ளவேண்டும். ஏனெனில் அநேகவிடங்களில் 'சத்வாரோ வர்ணா: ப்ராஹ்மண க்ஷத்ரிய வைஶ்ய ஶூத்ரா:' பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரனென நான்கு வருணங்களுண்டென்று சொல்லியிருப்பதால் ஜாதிவர்ணமென்றஇரண்டும்ஒன்றென்றே ஏற்றுக்கொள்வோம். ஜாதி என்பது பிராமணன் க்ஷத்திரியன் வைசியன் சூத்திரன் என்பதுதான். இனி வர்ணமென்ற பதத்திற்கு ஜாதி என்றும் அர்த்தம் ஏற்பட்டு விட்டபடியால் இதில் இனி அறியவேண்டியது வேறில்லையோவெனில், அங்ஙனமன்று, இதில் விசாரிக்க இறங்கிய விஷயம் எதென்றால் வர்ணமென்ற சொல்லுக்கு ஜாதியென்றீர்களே;

1 ஜாதி யென்றாலென்ன? 2 அது எங்கிருக்கிறது.
பிரும்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்றீர்களே. அவர்களிடத்தில் ஜாதி யென்பது எவ்விதசம்பந்தத்துடனிருக்கிறது?

3 ஒரு பதார்த்தம்போல் அவர்களது தலைமுதலிய அங்கங்களில் ஒட்டியிருக்கிறதா?

4 அதுகாணப்படுமோ?
5 அல்லது அவர்களது தேகத்திற்கு அப்பெயர் வாய்ந்ததா?
6 அல்லது அவர்களது ஜீவனின்பெயரா?
7 ஒரு காலத்தில் அது விலகிவிடலாமா?
8 அல்லது ஒருஜன்மத்திலும் விடாததா?
9 அல்லது ஏதாவது ஒரு போக்கியதையை ஒட்டி அவன் இச் சாதியைச்சேர்ந்தவனெனக்கூறவேண்டுமோ?
10 அல்லது பிராமணனுக்குப் பிறந்தவன் எத்தொழில் செய்தி டினும் பிராமணன்தான்; அதுபோலவே மற்ற மூவருணங்களி லும்என்று ஏற்றுக்கொள்ளவேண்டுமோ?
11 இச்சாதியென்பதை ஏற்றுக்கொள்வதிற் பயன்யாது?
12 பயனை அடைந்தபிறகு விட்டுவிடலாமா?
13 ஒன்றோடொன்று இவைகள் விரோதிக்கும் சுபாவமுள்ளதா? என்று பற்பலவிதமாய் ஏற்படும் ஆசங்கைகளை விலக்கிக்கொண் டால், அதன் பிறகு அதனை ஒட்டிவரும் ஆசிரமமென்பதிலேறலாம் என்றுகொண்டே நியாயமாய் இதொன்றில் இப்போது இறங்குகி றேன். இவ்விஷயத்தில் இக்காலத்திய சில பண்டிதர் ஏற்றுக்கொள் ளும்சில விஷயங்களை இங்கு யான் பூர்வபக்ஷஸ்தானத்திலிறுத்திப் பேசப் புகுந்தமைபற்றி முதலில் அவர்களது சித்தாந்தத்தை நிரூபித்துப் பிறகு எனது சித்தாந்தத்தைக் கூறுகிறேன். அவையாவன—

பூர்வபக்ஷம்

1 வர்ணம் என்றால் ஜாதியென்றும் அது ஒவ்வொருவருக்குப் பிறப்பை பொறுத்துப் பிராமணனென்றும் க்ஷத்திரிய னென்றும் வைசியனென்றும் சூத்திரனென்றும் சொல்கிறதெனச் சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். அது பிசகு. வர்ணம் என் பது முக்கியமாய் அவரவர்களுடைய கன்மத்தைப் பற்றியே உண் டாகிறது. பிராமணனுக்குப் பிறந்தவன் பிராமணனல்லன். இம்மா திரியே மற்ற மூன்றிலும். பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற வகுப்புப்பெயர்கள் எப்போதும் உள்ளனவே யாயினும் அவைகளை அடைபவன் இன்னான் என்ற நிச்சயம் கிடையாது. மற்று யார் அடைவதென்றால் ஞானம் தயை ஜீவகா

ருண்யம் முதலிய சாந்தத்தொழில்கள் பொருந்தியவன் எவனோ அவன் பிராமணனெனப்படுவான். யுத்தவல்லமை ராஜ்யதாரண சாமர்த்தியம் முதலியவையுள்ளவன் க்ஷத்திரியனுவான். வியாபார மூலமான வியவகாரங்களுள்ளவன் வைசியனுவான்; ஊழியவேலை செய்பவன் சூத்திரனெனப்படுவான். ஆனால் இவ்விதம் அர்த்தம் கொள்வதற்குப் பிரமாணம் ஏதாவது உண்டோவெனில்; அதற்கு அவ்வப்பதங்களே இடந்தருகின்றன.

14 அதாவது:—பிராமணனென்றால் பொதுவாய் பிர்மஞானம் பெற்றவனென்றும், க்ஷத்திரியனென்றால் அடியினின்று காப்பாற்றுபவனென்றும் வைசியனென்றால் பிரவேசிப்பவன் அதாவது வியாபாரவிஷயங்களில் பிரவேசிப்பவனென்றும் சூத்திரனென்றால் துக்கமடைபவன் அதாவது ஊழியவேலை செய்பவனென்றும் ஏற்படுகிறது. இவ்விடங்களில் இவ்விதம் தான் அர்த்தம் கொள்ள வேண்டுமென்பதற்கு வேறு பிரமாணங்களுண்டோவெனில் அதற்கு அநேக பிரமாணங்களுண்டு. ஆனால் இச்சாதிப்பெயர்கள் அனாதியாய் ஏற்பட்டிருக்கிறதென்று ஒப்புக்கொள்ளப்படுவது போல் அவைபற்றி நிற்பதும் அனாதியாய் ஒவ்வொரு வகுப்பினரைத்தான் என்று நியாயமில்லாமல் நமது பாட்டன்கள் அபிப்பிராயமென்று விருதாபிமானம் கொண்டு பிடிவாதமாய்க் கூறுவதற்கு வேதம், ஸ்மிருதி, புராணம் இவைகள் இடம் கொடுக்க மாட்டாது என்பதைமட்டும் நன்கு விளக்கிக்காட்டுகிறோம். வேதங்களில் பிராமணஜாதிமேல் என்றும் மற்றஜாதி கீழ் என்றும் ஓரிடத்திலுங் கூறப்படவில்லை. ஆனால் ஸ்மிருதிகளிற் சிலவிடங்களில் பிராமணஜாதியை உயர்த்தியும் மற்றவைகளைத் தாழ்த்தியுமிருக்கிறதே யெனின் அவை நமக்குப் பிரமாணமாகா;ஏனெனில் ஸ்மிருதிகள் எப்போது பிரமாணமாகுமெனில் மூலசுருதிகள் உள்ளவிடத்துத்தான் அவை பிரமாணமாகுமேயன்றி மற்றவிடத்திலேற்கப்படமாட்டா. வேதவசனங்களினபிப்பிராயப்படிதான்ஸ்மிருதிகள் ஒப்புக்கொள்ளப்படும். ஆனால் எல்லாஸ்மிருதி வசனங்களுக்கும்வேதப்பிரமாணம் காண்பிப்பது கஷ்டம்.ஸ்மிருதி வசனங்களுக்கேற்ற சுருதி அகப்பட்டது போக பாக்கி உள்ள வசனங்களைக்கொ

ண்டு சுருதி வசனங்கள் இதற்கு ஆதாரமாய் இருந்திருக்கவேண்டும் என்று அனுமானம் செய்யலாம். அவ்விதமேஜைமினியும்நியாய சூத்திரத்தில் ‘விரோதேத்வநபேக்ஷம் ஸ்யாதஸதி ஹ்யநுமானம்’ சுருதிஸ்மிருதிகளுக்குவிரோதமேற்படும்போது சுருதிவசனத்தைக்கொண்டு அதற்கு விரோதமானஸ்மிருதியைத்தள்ளலாம். ஸ்மிருதிக்குத் தக்க சுருதி இல்லாதவிடத்தில் சுருதி இருந்திருக்கலாம் என்று அனுமானம்செய்யவேண்டுமென்றார். அப்படியே பட்டாசாரியரும் “ஸம்பாவ்யதே சிஷ்டஸ்ம்ருதீநாம் மூலவேதிதா” ஸ்மிருதிகளுக்குதக்கவேதவாக்கியங்கள் காணப்படாவிடினும் அவைகள் இருந்திருக்கவேண்டு மானதால், அந்த ஸ்மிருதியும் பிராமாணமுள்ளதுதா னென்கிறார். ஆனதால் ஸ்மிருதிகள் எவ்விதம் பிரமாண மற்றவைகளாகும் என்று கேட்கலாம். ஆனாலும் இது நியாயமாகாது. ஏனெனில், இப்படி ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் உலகில் நடக்கும் அநேக அதர்மங்கள் சில ஸ்மிருதிகளிற் காணப்படுகின்றன. அப்போது அவை பிராணமாகும். ஆகவே பரமானர்த்த மாய்முடியும். ஆனதால் சுருதிமூலமற்ற ஸ்மிருதி பிரமாணமாகாது.

15 அல்லது ஸ்மிருதிகள் புருஷ கர்த்திருக மாதல் பற்றியும், அந்தந்தக் காலத்தில் அப்போதப்போதுள்ள அரசர்களால் அந்த ரிஷிகள் தூண்டப்பட்டு அக்காலத்திற்குவேண்டிய சௌகரியப் படி சட்டமாய் அவைக ளியற்றப்பட்டமையாலும் அவை அவ் வளவாக இவ்விஷத்திற்குப் பயன்படமாட்டாதென்றே கூறல் வேண்டும். அல்லது அவைகளிலும்

“ப்ராஹ்மண்யாம் ப்ராஹ்மணாஜ்ஜாத: ப்ராஹ்மண: ஸம்ஸ்க்ருதோ பவேத்|
ஏவம் க்ஷத்ரியவிட்சூத்ரா: ஜ்ஞேயாஸ்ஸ்வஸ்வயோநிஜா:”

‘பிராமணஸ்திரீயினிடத்தில்பிராமணனுக்குப்பிறந்துமந்திரங்களால்ஸம்ஸ்காரம் செய்யப்பெற்றவன் பிராமணியத்தைப்பெறுவான். இவ்விதமே க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் இவர்களும்” இம்மாதிரி சொல்லுமிடங்களில் “ப்ராஹ்மண்யாம் ப்ராஹ்மணாத்” என்று

சொன்னதின் கருத்தை நன்கு ஆராய்வோமாயின் முற்கூறிய ஞானம் முதலிய சாந்தகுணம் பொருந்தியவனுக்கு அக்குண முள்ள ஸ்திரீயினிடமுண்டானவன் என்றேற்படுவதால் அம்மகரிஷி களின் உட்கருத்தும் ஞானமுள்ளவன் பிராமணன் என்பதிற்றான் முடிந்திருக்கிறதென்பது தெற்றென விளங்குகின்றது. அதையே இந்த சுலோகத்தில் நன்குவெளியிடும்படியாய் "ஸம்ஸ்க்ருதஃ" என்ற பதத்தையும்மேற்படுத்தி இருக்கிறார். பிராமணனுக்குப் பிறந்தவன் எப்படியும் பிராமணனென்றால் ஸம்ஸ்காரம்பெற்று பிராமணனுவா னென்று சொல்வானேன். மற்றும்—

16 𑌶𑌮𑍋 𑌦𑌮𑌸𑍍𑌤𑌪𑌃 𑌶𑍌𑌚𑌂 𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑌾𑌰𑍍𑌜𑌵𑌮𑍇𑌵 𑌚 ।
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌮𑍍 ॥
𑌶𑍌𑌰𑍍𑌯𑌂 𑌤𑍇𑌜𑍋 𑌧𑍃𑌤𑌿𑌰𑍍𑌦𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌯𑍁𑌦𑍍𑌧𑍇 𑌚𑌾𑌪𑍍𑌯𑌪𑌲𑌾𑌯
𑌦𑌾𑌨𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌭𑌾𑌵𑌶𑍍𑌚 𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌮𑍍 ॥ [𑌨𑌮𑍍 ।
𑌕𑍃𑌷𑌿𑌗𑍋𑌰𑌕𑍍𑌷𑌵𑌾𑌣𑌿𑌜𑍍𑌯𑌂 𑌵𑍈𑌶𑍍𑌯𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌮𑍍 ।
𑌪𑌰𑌿𑌚𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌮𑍍 ॥

சமம், தமம், தபஸ், சௌசம், பொறுமை, வணக்கம், வித்தை, விஞ்ஞானம், ஆஸ்திக்யம் இவை பிராமணனுக்கு இயற்கையான குணங்கள். சௌரியம், வீரியம், தைரியம், சுறுசுறுப்பு, யுத்தத்தில் பின்னிடாமலெதிர்ப்பது, தானம், ஈசுவரத்தன்மை இவை க்ஷத்திரியனுடைய இயற்கை. கிரிஷி பசுபாலனம், வியாபாரம் இவை வைசினுக்குரியன. சுச்ரூஷைசெய்வது சூத்திரனது தர்மம் என்று சர்வபிரசித்தமாய் எல்லா மதஸ் தர்களும் சமரஸமாயும் ஒப்புக்கொள்ளும் கீதையில் அவ்வக் குணமுள்ளவன் அவ்வச்சாதியோன் என்று ஸ்புடமாய்ச் சொல் லியிருப்பது போதாதா?

17 இது போதாதென்று அதே கீதையில் நன்கு விளங்கும் படி பகவான் வாய்விட்டுக் கதறி இருக்கும் ஒரு சுலோகத்தை நீங்கள் கவனித்தீர்களில்லை போலும். அதாவது—

"𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌸𑍃𑌷𑍍𑌟𑌂 𑌗𑍁𑌣𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌭𑌾𑌗𑌶𑌃"

என்றால் குணம் கன்மம் இவைகளை ஒட்டியே நான்கு வர்ணங் களும் சிருஷ்டிக்கப்பட்டன என்கிறார். மற்றும்—

18 ஸ்மிருதிகளினுங் கூட ஒவ்வோரிடத்திலும் ஆழ்ந்தாலோசிப்போமேயாயின் ஒவ்வொன்றிலும் நாங்கள் கூறுகின்ற லக்ஷணமே பிராமணர் முதலியவர்களுக்குக் கூறியிருக்கின்றது.

"ஜந்மநா ஜாயதே ஶூத்ர: ஸம்ஸ்காராத் த்விஜ உச்யதே|
வித்யயா யாதி விப்ரத்வம் ப்ரஹ்மஜ்ஞாநாத் ப்ராஹ்மணோ பவேத்||".

ஒருவன் பிறப்பினால் சூத்திரனாகவே இருக்கிறான், பிறகு ஸம்ஸ்காரத்தினால் த்விஜனெனப்படுவான். வித்தை கற்றபின் விப்பிரனென்றும் பிர்மத்தைபறிந்தபின் பிராமணனென்றும் சொல்லப்படுவான். மற்றும்—

19 "தபோதமோதயாதாநம் ஸத்யம் ஶௌசம் தயா ஶ்ருதம்|
வித்யா விஜ்ஞாநமாஸ்திக்யமேதத் ப்ராஹ்மணலக்ஷணம்"

தபஸ், தமம், தயவு, தானம், சத்தியம், தர்மம், வேதாத்தியயனம், இரக்கம், வித்தை, விஞ்ஞானம், ஆஸ்திக்யமாகிய இவைகளே பிராமணனுக்கு இலக்ஷணங்கள் என்று சாதாதபர் கூறுபதுபோல் கோடானுகோடி பிரமாணங்கள் மகரிஷிகளது வாக்கினின்றும் உண்டான வைகளாய் ஏற்பட்டிருக்க இவ்வளவையும் சற்றேனு முற்று நோக்காமல் பிராமணனிடத்திற் பிறந்து அந்தந்த லக்ஷணங்களை முற்றிலும் தொலைத்துத் தீயத் தொழில் புரிந்தபோதிலும் பிராமணனாவான். மற்று முற்கூறப்பெற்ற நற்குணங்கள் முழுமையும் அடங்கியிருக்கும் மற்ற எவ்வருணத்தவனும் / பிராமணனாகமாட்டானென்று நிச்சயமாய்க் கூற பிரமாணம் எங்கிருக்கிறது? இப்போது இதில் உங்களுக்கு நன்றாய் நம்பிக்கையுண்டாவதற்காக ஓர் சிறு விஷயமெடுத்துரைக்கின்றேன். அதைச் சற்றுக் கவனியுங்கள்.

20 நாம் நமது முன்னோர்களான மகரிஷிகளை திரிகாலஞானம் பெற்றவர்களென்றும் தேவாம்சமுள்ளவர்களென்றும் விசேஷமாய்க் கொண்டாடுகிறோ மல்லவா. அவர்களுள், வசிஷ்டர், வியாசர் சுகர், ருசியசிருங்கர், கணுதர் என்றுபெயருள்ள மகாஞானிகளான மகரிஷிகளைக் கேட்டில ருளரோ. அவர்கள் மகாபிராமணோத்தமர்களென்பது யாருக்குத்தான் தெரியாது. நல்லது, இப்போது இம்மகான்களது உற்பத்தியைக்கொஞ்சம் சொல்லுகிறேன்,

𑌜𑌾𑌤𑍋 𑌵𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌤𑍁 𑌕𑍈𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌾𑌃 𑌶𑍍𑌵𑌪𑌾𑌕𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌪𑌰𑌾𑌶𑌰𑌃।
𑌶𑍁𑌕𑍍𑌯𑌾𑌃 𑌶𑍁𑌕𑌃 𑌕𑌣𑌾𑌦𑌾𑌖𑍍𑌯𑌸𑍍𑌤𑌥𑍋𑌲𑍂𑌕𑍍𑌯𑌾𑌃 𑌸𑍁𑌤𑍋𑌽𑌭𑌵𑌤𑍍।
𑌮𑍃𑌗𑍀𑌜𑍋 𑌋𑌷𑍍𑌯𑌶𑍃𑌙𑍍𑌗𑍋𑌽𑌪𑌿 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍋 𑌗𑌣𑌿𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌃।
𑌮𑌨𑍍𑌦𑌪𑌾𑌲𑍋 𑌮𑍁𑌨𑌿𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍋 𑌨𑌾𑌵𑌿𑌕𑌾𑌪𑌤𑍍𑌯𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇॥
𑌮𑌾𑌣𑍍𑌡𑌵𑍍𑌯𑍋 𑌮𑍁𑌨𑌿𑌰𑌾𑌜𑌸𑍍𑌤𑍁 𑌮𑌣𑍍𑌡𑍂𑌕𑍀𑌗𑌰𑍍𑌭𑌸𑌮𑍍𑌭𑌵𑌃॥

வியாசரென்பவர் வலைச்சி வயிற்றிற் பிறந்தார். பராசரர் சண்டாளஸ்திரீயினிடத்திற் ஜனித்தார். பெண்கிளியின் வயிற்றிற் சுகர் பிறந்தார். கோட்டானிடத்திற் கணாதரென்ற மகரிஷி உண்டானார் ருசியசிருங்கமகரிஷி மான் வயிற்றுப்பிள்ளை. வசிஷ்டர் வேசிமகன் மந்தபாலரென்ற முனிக் கோமான் லாவிகை என்ற பக்ஷியின் பிள்ளையாம். மாண்டேக்யர் என்ற முனிவர் தவளையின் பிள்ளையாம். ஐயா இவர்களெல்லாம் பிராமண சிரேஷ்டர்களானார்களென்பதிலேய முண்டோ? பராசரர் வியாசர் சுகர் வசிஷ்டர் முதலியவர்களுடைய பிரபாவம் உங்களுக்குத்தெரியாதா. இம்மட்டா ?

21 𑌶𑍂𑌦𑍍𑌰𑌯𑍋𑌨𑍌 𑌹𑌿 𑌜𑌾𑌤𑌸𑍍𑌯 𑌸𑌦𑍍𑌗𑍁𑌣𑌾𑌨𑍁𑌪𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌃।
𑌵𑍈𑌶𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌲𑌭𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 க்ஷத்ரியத்வம் 𑌤𑌥𑍈𑌵 𑌚।
𑌆𑌰𑍍𑌜𑌵𑍇 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌮𑌭𑌿𑌜𑌾𑌯𑌤𑍇 ।

சூத்திரயோனியிற் பிறந்து நற்குணங்களை அனுஷ்டிப்பவனுக்கு வைசியத்தன்மைகிடைக்கும். அவ்விதமே க்ஷத்திரியத்தன்மையும் பெறலாம். பிறகு வணக்கமுடனிருந்தால் பிராமணத்தன்மையு முண்டாகுமென்றார். ஆனால் இந்தஸ்மிருதிவாக்கியங்களை ஒப்புக்கொள்வதற்குமட்டிலும் மூலசுருதிவசனம் "வேண்டாமோ" வென்பீர்கள். இதன் மூலசுருதியைப்பின் காண்பிக்கின்றேன். மற்றும்—

22 முதலில் உபனிஷத்துக்களை கவனித்தால் பிர்மஞானத்தில் சிறந்தஞான முள்ளவர்களாய் இருந்தவர்கள் ஜனகன் ஜானசுருதி முதலியவர்கள் தான். இவர்கள் லோகவ்யவகாரரீதியில் க்ஷத்திரியர்களென்று சொல்லப்பட்டபோதிலும் அந்நிலக்ஷியம் செய்யாது எத்தனையோ பிராமணோத்தமர்கள் இவர்களிடத்திலுபதேசம் பெற்றிருக்கிறார்களென்பதை சாந்தோக்யோபனிடதமூலமாய் அறிந்துகொள்ளலாம்.

23 மற்றும்—சாந்தோக்கியோபனிடதத்தில் சத்தியகாமஜாபா லோபாக்கியானமொன்று சொல்லுகிறேன். அதைக் கவனியுங்கள்.

𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑍋 𑌹 𑌜𑌾𑌬𑌾𑌲𑍋 𑌜𑌬𑌾𑌲𑌾𑌂 𑌮𑌾𑌤𑌰𑌮𑌾𑌮𑌨𑍍𑌤𑍍𑌰
𑌯𑌾𑌂𑌚𑌕𑍍𑌰𑍇। 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌂 𑌭𑌵𑌤𑌿 𑌵𑌿𑌵𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌮𑌿 𑌕𑌿𑌂𑌗𑍋𑌤𑍍𑌰𑍋
𑌨𑍍𑌵𑌹𑌮𑌸𑍍𑌮𑍀𑌤𑌿। 𑌸𑌾 𑌹𑍈𑌨𑌮𑍁𑌵𑌾𑌚। 𑌨𑌾𑌹𑌮𑍇𑌤𑌦𑍍𑌵𑍇𑌦 𑌤𑌾𑌤
𑌯𑌦𑍍𑌗𑍋𑌤𑍍𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿। 𑌜𑌬𑌾𑌲𑌾 𑌤𑍁 𑌨𑌾𑌮𑌾𑌹𑌮𑌸𑍍𑌮𑌿। 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾
𑌮𑍋 𑌨𑌾𑌮𑌤𑍍𑌵𑌮𑌸𑌿। 𑌸 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮 𑌏𑌵 𑌜𑌾𑌬𑌾𑌲𑍋 𑌬𑍍𑌰𑍁𑌵𑍀𑌥𑌾
𑌇𑌤𑌿। 𑌸 𑌹 𑌹𑌾𑌰𑌿𑌦𑍍𑌰𑍁𑌮𑌤𑌂 𑌗𑍌𑌤𑌮𑌮𑍇𑌤𑍍𑌯𑍋𑌵𑌾𑌚। 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮
𑌚𑌰𑍍𑌯𑌂 𑌭𑌗𑌵𑌤𑌿 𑌵𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑍁𑌪𑍇𑌯𑌾𑌂 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌮𑌿𑌤𑌿। 𑌤𑌂 𑌹𑍋
𑌵𑌾𑌚। 𑌕𑌿𑌂𑌗𑍋𑌤𑍍𑌰𑍋 𑌨𑍁 𑌸𑍋𑌮𑍍𑌯𑌾𑌸𑍀𑌤𑌿। 𑌸 𑌹𑍋𑌵𑌾𑌚 𑌨𑌾
𑌹𑌮𑍇𑌤𑌦𑍍𑌵𑍇𑌦 𑌭𑍋 𑌯𑌦𑍍𑌗𑍋𑌤𑍍𑌰𑍋𑌽𑌹𑌮𑌸𑍍𑌮𑍍𑌯𑌪𑍃𑌚𑍍𑌛𑌂 𑌮𑌾𑌤𑌰𑌂 𑌸𑌾
𑌮𑌾 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍। 𑌬𑌹𑍍𑌵𑌹𑌂 𑌚𑌰𑌨𑍍𑌤𑍀 𑌪𑌰𑌿𑌚𑌾𑌰𑌿𑌣𑍀
𑌯𑍌𑌵𑌨𑍇 𑌤𑍍𑌵𑌾𑌮𑌲𑌭𑍇 𑌸𑌾𑌹𑌮𑍇𑌤𑌨𑍍𑌨 𑌵𑍇𑌦 𑌯𑌦𑍍𑌗𑍋𑌤𑍍𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿
𑌜𑌬𑌾𑌲𑌾 𑌤𑍁 𑌨𑌾𑌮𑌾𑌹𑌮𑌸𑍍𑌮𑌿 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑍋 𑌨𑌾𑌮𑌤𑍍𑌵𑌮𑌸𑍀𑌤𑌿
𑌸𑍋𑌽𑌹𑌂 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑍋 𑌜𑌾𑌬𑌾𑌲𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌭𑍋 𑌇𑌤𑌿। 𑌤𑌂
𑌹𑍋𑌵𑌾𑌚। 𑌨𑍈𑌤𑌦𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌿𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌤𑌿। 𑌸𑌮𑌿𑌧𑌂
𑌸𑍋𑌮𑍍𑌯𑌾𑌹𑌰 𑌉𑌪 𑌤𑍍𑌵𑌾 𑌨𑍇𑌷𑍍𑌯𑍇 𑌨 𑌸𑌤𑍍𑌯𑌾𑌦𑌗𑌾 𑌇𑌤𑌿.

சத்தியகாமனென்ற ஜபாலை என்பவளுடைய புத்திரன் தன் தாயினிடம் வந்து அம்மா நான் உபனயனம் செய்து கொள்ளவிரும்புகிறேன். நான் என்ன கோத்திரத்திற் பிறந்தவனென்றுகேட்க அதற்கவள் அப்பா நான் கோத்திரத்தை அறியேன். நான் எனது பர்த்தாவுக்குச்சுச்ரூஷைசெய்வதிலேயேஞாபகமுள்ளவளாய் இருந்துவிட்டேன். அப்படியிருக்கும்போது உன்னை யௌவனப்பருவத்திலேயே பெற்றேன். பர்த்தாவும் பரலோகம் சென்றுவிட்டார். அவரைநான் கோத்திரம் கேட்கவில்லை. நான் ஜபாலை என்று பெயர் பெற்றவள். நீ சத்தியகாமனெனப்படுவாய். இவ்வளவு தான் எனக்குத்தெரியுமென்று தாய் சொன்னவார்த்தையைக்கேட்டுத் தாயினிடம்விடைபெற்றுக்கொண்டு ஹாரித்ருமதகௌதமரையடைந்து பகவானே! எனக்கு உபனயனம் செய்தருளவேண்டுமென்று பிரார்த்

திக்க அப்பா! நீ எந்த கோத்திரத்தைச் சார்ந்தவனென அதற்கவன் தாய் சொன்ன வார்த்தையை அப்படியே ஒப்புவிக்க அவர்சந்தோஷப்பட்டு அப்பிராமணன் இப்படிச்சொல்லமாட்டான். நீ சத்தியம் சொன்னதினால் பிராமணன். நான் உனக்கு உபனயனம் செய்து வைக்கிறேன். சமித்தைக்கொண்டுவாவென்றார். இதனால் நமக்கு ஏற்பட்டது என்னவென்றால் ‘‘நைதத³ப்³ராஹ்மணோ விவக்துமர்ஹதி’’. ‘‘அப்பிராமணன் இப்படிச் சொல்லமாட்டா’’னென்று சொன்னதினால் சத்தியம் ஒன்று ஸ்திரமான பிராமணியத்திற்குக்காரணம் என்றேற்பட்டது.

24 மற்றும்—பௌராணிர்களும்குணந்தான் வர்ணபேதத்திற்குக் காரணமேயொழிய ஜாதியில்லை யென்றே சொல்கிறார்கள். ஜாதியே காரணமாயின் பசு முதலான ஜாதியிலிருந்து அவ்வச்சாதி உண்டாவது போல், அந்த ஜாதியைச் சார்ந்தவனிடத்திலேயே அவனவன் உண்டாயிருக்கவேண்டும். அப்படியில்லை யென்று வசிஷ்டர் முதலானவர்களின் கதையைச் சொல்லிவிட்டேன். பிராமணர்கள் மற்ற மூவருடை ஸ்திரீகளையும் விவாகம் செய்து கொண்டு அவரவர்களிடமிருந்து புத்திரர்களை உண்டுபண்ணியிருக்கிறார்கள். ஆகவேஇதனாலும்கன்மத்தைப்பொருத்தே பெயரேற்பட்டதென்று திண்ணமாய்நம்பலாம்.

25 மற்றும் உலகினில் இதிஹாஸரத்தினமென்றும் ஐந்தாவது வேதமென்றும் சகல ஜனங்களாலும் புகழப்படும் மகாபாரதத்தில் ஆரண்ய பர்வாவிலுள்ள தர்ம வியாதோபாக்கியானத்தை இங்குரைக்கின்றேன்.

முன்னொரு காலத்தில் கௌசிகன் என்ற ஓர்மகாதபஸ்வியான பிராமணன் இருந்தார். அவர் ஒரு நாள் வழக்கம்போல் ஓர் மரத்தினடியில் தபஸில் வீற்றிருக்கும்போது மரத்தின் மீதுட்கார்ந்திருந்த ஓர் பெண் கொக்கானது அவர் மேல் எச்சமிட்டது. ஆகா இதென்ன அநியாயம் என்று அவர் நிமிர்ந்து பார்க்கவே அக்கொக்கு எரிந்து சாம்பலாய்விட்டது. அதைக்கண்ட மகரிஷி தபஸின் பிரபாவத்தால் இதைப் பார்த்தமாத்திரத்தி

லேயே அனியாயமாய் எரிந்துவிட்டதே யென்று வனவருந்த முற்றிருந்தார். பிறகு கொஞ்சகாலம் போன பிறகு அம்மகான் அரு காமையிலிருந்த ஓர்கிராமத்தில் பிக்ஷைக்காகப்புகுந்து ஓர்வேதியன் வீட்டேகினுர். அங்கு போய் "𑌭𑌵𑌤𑌿 𑌭𑌿𑌕𑍍𑌷𑌾𑌂 𑌦𑍇𑌹𑌿" என்றுகேட்ட வுடன் அவ்வம்மணி சற்றுப் பொறுக்கச்சொல்லிவிட்டுப் பூஜை பாத்திரங்களை அவசரமாய்த்துலக்க ஆரம்பித்தனள். அவர் அப் படியே சற்றுப் பொறுத்தார். பிறகு கொஞ்ச நேரத்திற்கெல்லாம் வெளியேகியிருந்த அவளது பர்த்தா வந்துவிடவே அவளப்பாத் திரம் துலக்குவதையும் விட்டுவிட்டு அவர் கால்கழுவ ஜலம் கொடு த்து உள்ளழைத்துவந்து, வேண்டியபடி உபசரிக்க ஆரம்பித்தனள், இதை யெல்லாம் பார்த்த அவ்வேதியன் மிகக்கோபங்கொண்டு அடி என்பிரபாவமறியாது என்னை வெகுநேரம் நிறுத்திவைத் தாயா வென்று சொல்லி அவளைக் கடிந்து பார்க்கவே, அதற்கு அவ்வம்மணி ஐயா என்னைக் கொக்கென்று எண்ணிவிட்டீரோ சற்றுப்பொறும் என்றுசொன்னவார்த்தையைக் கேட்டு திடுக்கிட்டு ஆ! ஆ! நாம் செய்த காரியம் ஒருவருக்கும் தெரியாமலிருக்க இம் மாது அறிந்த விதம் யாது என்று ஆலோசித்துக்கொண்டு நின்ற அரை நிமிஷத்திற்கெல்லாம் அம்மாள் பிக்ஷையை எடுத்துக்கொ ண்டு வர அவர் அம்மா தாங்கள் இது சங்கதி யறிந்த விதம் யாதெ ன்று வினவினர். அப்போது அம்மாள் பதிவிருதா தர்மத்தினுல றிந்தேனென்று சொல்லி பிறகு உமக்கு இவ்வளவு அகந்தையும் கோபமும் வேண்டாமென்று காட்டக்கூடிய

𑌕𑍍𑌰𑍋𑌧𑌶𑍍𑌶𑌤𑍍𑌰𑍁𑌶𑍍𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑍋 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮 ।
𑌯𑌃𑌕𑍍𑌰𑍋𑌧𑌮𑍋𑌹𑍌 𑌤𑍍𑌯𑌜𑌤𑌿 𑌤𑌂𑌦𑍇𑌵𑌾𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂𑌵𑌿𑌦𑍁𑌃 ॥
𑌯𑍋 𑌵𑌦𑍇𑌦𑌿𑌹𑌸𑌤𑍍𑌯𑌾𑌨𑌿 𑌗𑍁𑌰𑍁𑌂 𑌸𑌨𑍍𑌤𑍋𑌷𑌯𑍇𑌤𑌚 ।
𑌹𑌿𑌂𑌸𑌿𑌤𑌶𑍍𑌚𑌨𑌹𑌿𑌂𑌸𑌨𑍍𑌤𑌿 𑌤𑌂 𑌦𑍇𑌵𑌾𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂𑌵𑌿𑌦𑍁𑌃 ॥
𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍋 𑌧𑌰𑍍𑌮𑌪𑌰𑌸𑍍𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑌿𑌰𑌤𑌶𑍍𑌶𑍁𑌚𑌿𑌃 ।
𑌕𑌾𑌮𑌕𑍍𑌰𑍋𑌧𑍌𑌵𑌶𑍇𑌯𑌸𑍍𑌯 𑌤𑌂 𑌦𑍇𑌵𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥
𑌯𑌸𑍍𑌯 𑌚𑌾𑌤𑍍𑌮𑌸𑌮𑍋𑌲𑍋𑌕𑍋𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌮𑌨𑌸𑍍𑌵𑌿𑌨𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍇𑌷𑍁 𑌚 𑌰𑌤𑌃 𑌤𑌂 𑌦𑍇𑌵𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥

𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌪𑌯𑍇𑌦𑌧𑍀𑌯𑍀𑌤 𑌯𑌜𑍇𑌦𑍍𑌵𑌾 𑌯𑌾𑌜𑌯𑍇𑌤 𑌵𑌾 ।
𑌦𑌦𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌾𑌪𑌿 𑌯𑌥𑌾𑌶𑌕𑍍𑌤𑌿 𑌤𑌂 𑌦𑍇𑌵𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑍀 𑌵𑌦𑌾𑌨𑍍𑌯𑍋 𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌯𑍀𑌯𑌾𑌨𑍋 𑌦𑍍𑌵𑌿𑌜𑌰𑍍𑌷𑌭𑌃 ।
𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌵𑌾𑌨𑌮𑌤𑍍𑌤𑍋 𑌵𑍈 𑌤𑌂 𑌦𑍇𑌵𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥

ஓ பிராமண சிரேஷ்டரே ? மனுஷ்யர்களுக்குக் கோபமானது சரீரத்திலுண்டான சத்துரு· எவன் கோபத்தையும் மோகத்தையும் தொலேத்தவனே தேவர்கள் அவனேத்தான் பிராமணனென்பார்கள். எவனெருவன் சத்தியத்தையே பேசுவானே, எவன் குருவை சந்தோஷப்படுத்துவானே, எவன் ஒருவன் தன்னே இம்சை செய்தபோதிலும் திருப்பிச் செய்யாமலிருக்கிருனே அவனேயே பிராமணனென்பார்கள் தேவர்கள். எவன் இந்திரியங்களே அடக்கித் தர்மத்திலாசைகொண்டவனுய்ப் பரிசுத்தமாய் அத்தியயனம் செய்துகொண்டு காமம் கோபம் இவைகளே வசப்படுத்தி இருக்கிருனே' தர்மத்தை அறிந்த எந்த தீரனுக்கு உலகமே தன்னேப்போல் பாவிக்கப்படுகிறதோ சர்வதர்மத்தையும் எவன் அனுஷ்டிக்கிருனே, எவன் அத்தியயனம் சொல்லிவைத்து அத்தியயனம் செய்வானே, எவன்யாகம் செய்துவைப்பதுடன் யாகம்செய்வானே; தன் சக்திக்கேற்றவாறு தானம்எவன்செய்கிருனே அவனேயே தேவர்கள் பிராமணனென்கிருர்கள்என்று அநேக விதமான தர்மத்தின் உண்மைகளே எடுத்துரைத்துப் பிறகு உமக்கு தர்மஸ்வரூபம் முற்றிலுமறியப்படவேண்டுமாயின் மிதிலேயில் தர்மவியாதனென்கிற வேடஜாதியிற் பிறந்த ஓர் மகாத்மா இருக்கிருர். அவரிடம் போய்க் கேட்டுக்கொள்ளுமென்று தீய தொழில் புரிந்துகொண்டிருக்கும் வேடனிடத்திலனுப்பவே, அவ்வேதியனுமாங்ஙனமே அங்குசென்று அவனிருப்பிடத்தைச்சேர்ந்து அங்கே சற்று தூரத்திலிருந்து பார்க்கும்போது அவன் மாமிச வியாபாரஞ் செய்துகொண்டிருப்பதையும் ஏராளமான ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் வாங்கிப் போவதையும் அவன் தலேகால் புரியாது வியாபாரஞ்செய்வதையும் அறிந்து பயந்து திகைத்து நின்ற அரைநாழிகைக்கெல்லாம் அவ்வேடன் கூட்டங்களே விலக்கிக்கொண்டு ஓடிவந்து காலில் விழுந்து நமஸ்கரித்து ஸ்வாமி வரவேண்டும். தங்களே அரைநாழிகையாய்

நிறுத்திவைத்தகுற்றத்தைமன்னிக்கவேண்டும். தங்களை அந்தப்பதிவிருதை என்னிடமனுப்பினளாவென்று ஆதரவுடன் கேட்டு நல்லது தாங்களிப்போதிந்த கோரமான விடத்தில் நிற்கவேண்டாம். கிருகத்திற்கு வாருங்கள் எல்லாவற்றையும் ஸவிஸ்தாரமாய்ச் சொல்கிறேனென்று கிருகத்திற்கு அழைத்துப்போய்த்தன் தாய் தந்தையர்களையும் அவர்களுக்குத்தான் செய்யும் சுச்ருஷையின் முறையையும் தர்மத்தையு முபதேசிக்கும்போது அவனைப்பார்த்து வேதியன் புகழ்ந்துபேசி

𑌸𑌾𑌮𑍍𑌪𑍍𑌰𑌤𑌂 𑌚 𑌮𑌤𑍋 𑌮𑍇𑌽𑌸𑌿 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌾𑌤𑍍𑌰 𑌸𑌂𑌶𑌯𑌃।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌪𑌤𑌨𑍀𑌯𑍇𑌷𑍁 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍋 𑌵𑌿𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 ॥

𑌦𑌾𑌮𑍍𑌭𑌿𑌕𑍋 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑌃 𑌶𑍂𑌦𑍍𑌰𑍇𑌣 𑌸𑌦𑍃𑌶𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍।
𑌯𑌸𑍍𑌤𑍁 𑌶𑍂𑌦𑍍𑌰𑍋 𑌦𑌮𑍇 𑌸𑌤𑍍𑌯𑍇 𑌧𑌰𑍍𑌮𑍇 𑌚 𑌸𑌤𑌤𑍋𑌤𑍍𑌥𑌿𑌤𑌃।
𑌤𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌮𑌹𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌨 𑌹𑌿 𑌭𑌵𑍇𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 ॥

𑌕𑌰𑍍𑌮𑌦𑍋𑌷𑍇𑌣 𑌵𑌿𑌷𑌮𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌦𑌾𑌰𑍁𑌣𑌾𑌮𑍍।
𑌕𑍍𑌷𑍀𑌣𑌦𑍋𑌷𑌮𑌹𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌚𑌾𑌭𑌿𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌨𑌰𑍋𑌤𑍍𑌤𑌮 ॥

இப்போதாம் நீஎன்னல் பிராமணனாகவே மதிக்கப்படுகிறாய். அதில் சம்சயமில்லை. பிராமணன் பதிதனைப் போகத்தக்க கெட்ட கன்மங்களைச் செய்து கொண்டு டம்பத்தோடு அயோக்கியனாய் இருந்தால் அவன் சூத்திரனுக்குச்சமானமாவான். எந்த சூத்திரன் தவத்திலும் சத்தியத்திலும் தர்மத்திலும் எப்போதும்முயற்சியுள்ளவனாய் இருக்கிறானோ அவனை நான் பிராமணனென்றே நினைக்கின்றேன். நடத்தையினாலல்லவா த்விஜனாகிறான் என்று புகழ்ந்ததாயும் ஸவிஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் யாமறியவேண்டிய விஷயமிது. உத்தமகுலத்திற் பிறந்தவனாயினும் ஜாதியென்பது மேன்மைபெற்றதில்லை. ஞானமே மேன்மைபெற்றது. ஆதல்பற்றியே நமது தர்ம சாஸ்திரங்களில் ஒருவாறு சூத்திரனுக்குச் சமானமென்று சொல்லப்பட்ட ஸ்திரீயினிடம் போய் ஞானம் வந்தவன்மேலென்ற நியாயத்தை யொட்டி உபதேசம் பெற்றான். அப்போதவள் மேலானாள். பிறகு அதற்கும் எத்தனையோ மடங்கு

கீழான வேடனிடத்தில், இவ்வேதியனுக்கு ஜாதி யென்றேற்பட்டிரு க்கும்அபிமானத்தைமுற்றிலும் தொலைப்பதற்காகவே அனுப்பினான். பிராமணனங்குபதேசம் பெற்றான். அப்போதவனல்லவா மேன்மை பெற்றான். இதனால் ஜாதி யென்று விருதாபிமான முள்ளவர்கள் இனிமேலாவது விட்டுவிடலாமென்பதற்கேது சந்தேகம்? இனி இவ்வளவையும் கேட்டபின்போர் வார்த்தை சொல்லக்கூடும். அதாவது சுருதிப் பிரமாணம் யாதொன்றும் கூறாமல் நாங்கள் சொன்ன ஸ்மிருதிக்கு மட்டிலும் சுருதிப் பிரமாணமில்லாமையால் ஸ்மிருதி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதென்றீர்களே. நீங்களெடுத்துக் காட்டிய சுருதி என்னவென்பீர்கள். இதற்கு முன்னமேயே சாந்தோக்கியோ பனிஷத் முதலிய சுருதிகள் காண்பிக்கப்பட்டபோதிலும் அவை அவ்வளவாய்த் தெளிவில்லையென்பீர்கள். அதனால் இதற்கென்றே கங்கணம்கட்டிப் பிரவர்த்தித்த ஓர்உபனிஷத்தை உங்களுக்குக் காட்டுகின்றேன்.

26 நமக்கு—

ஶிகா௦ யஜ்ஞோபவீத௦ ச ஸூத்ர௦ ஸமயாசாரமேவ ச।

பூர்வைராசரித௦ குர்யாத் அந்யதா பதிதோ பவேத்॥

சிகை, புண்டிரம், சூத்திரம், சமயாசாரம் இவைகளை முன்னோர்களனுஷ்டித்தபடியே அனுஷ்டிக்கவேண்டும். அப்படி இல்லாவிடில் அவன் பதிதனாவான் என்று சொல்லும் நியாயப்படி நமது புண்டிரதாரணத்திற்காக ஏற்பட்டிருக்கு முபனிடத்துக்களில் பஸ்மதாரணம் செய்யும் சைவர்கள் பஸ்மஜாபாலோபனிடதத்தையும் கோபிசந்தனம் தரிப்பவர்கள் வாசுதேவோபனிடதத்தையும் வேதபாகத்திற் சேர்ந்த அனாதியான உபனிடதமென்று சொல்லிக் கொண்டாடுவது போல் ஜாதியின் மேன்மை மேன்மையா, ஞானத்தின் செல்வம் மேன்மையா வென்பதை விளக்கிக்காட்டும் வச்சிரசூச்யுபனிஷத் என்பது மகா பிரமாணக்கிரந்தமாய் அனாதியாய் இருப்பதை இவ்விடம் விளக்கிக்காட்டுகின்றேன்.

ப்ராஹ்மண க்ஷத்ரிய வைஶ்ய ஶூத்ரா இதி சத்வாரோ வர்ணாஸ்தேஷா௦ வர்ணாநா௦ ப்ராஹ்மண ஏவ ப்ரதான

𑌇𑌤𑌿 𑌵𑍇𑌦𑌵𑌚𑌨𑌾𑌨𑍁𑌰𑍂𑌪𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌵𑌚𑌨𑌮𑌪𑍍𑌯𑌸𑍍𑌤𑌿। 𑌤𑌤𑍍𑌰 𑌚𑍋𑌦𑍍𑌯𑌮𑌸𑍍𑌤𑌿। 𑌕𑍋 𑌵𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌾𑌮। 𑌕𑌿𑌂 𑌜𑍀𑌵𑌃 𑌕𑌿𑌂 𑌦𑍇𑌹𑌃 𑌕𑌿𑌂 𑌜𑌾𑌤𑌿𑌃 𑌕𑌿𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂। 𑌕𑌿𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌿𑌂 𑌧𑌾𑌰𑍍𑌮𑌿𑌕 𑌇𑌤𑌿। 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌥𑌮𑍋 𑌜𑍀𑌵𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍 𑌤𑌨𑍍𑌨। 𑌅𑌤𑍀𑌤𑌾𑌨𑌾𑌗𑌤𑌾𑌨𑍇𑌕𑌦𑍇𑌹𑌾𑌨𑌾𑌂 𑌜𑍀𑌵𑌸𑍍𑌯𑍈𑌕𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌤𑍍। 𑌏𑌕𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌕𑌰𑍍𑌮𑌵𑌶𑌾𑌤𑍍 𑌅𑌨𑍇𑌕𑌦𑍇𑌹𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍। 𑌸𑌰𑍍𑌵𑌶𑌰𑍀𑌰𑌾𑌣𑌾𑌂 𑌜𑍀𑌵𑌸𑍍𑌯𑍈𑌕𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨 𑌜𑍀𑌵𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣 𑌇𑌤𑌿। 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌦𑍇𑌹𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍 𑌤𑌨𑍍𑌨। 𑌆𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌾𑌦𑌿𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌪𑌾𑌞𑍍𑌚𑌭𑍌𑌤𑌿𑌕𑌤𑍍𑌵𑍇𑌨 𑌦𑍇𑌹𑌸𑍍𑌯𑍈𑌕𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌜𑍍𑌜𑌰𑌾𑌮𑌰𑌣𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑌿𑌸𑌾𑌮𑍍𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌃 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌃 𑌵𑍈𑌶𑍍𑌯𑌃 𑌪𑍀𑌤𑌵𑌰𑍍𑌣𑌃 𑌶𑍂𑌦𑍍𑌰𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑌃 𑌇𑌤𑌿 𑌨𑌿𑌯𑌮𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍। 𑌪𑌿𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌶𑌰𑍀𑌰𑌦𑌹𑌨𑍇 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌦𑍋𑌷𑌸𑌂𑌭𑌵𑌾𑌚𑍍𑌚। 𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨 𑌦𑍇𑌹𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣 𑌇𑌤𑌿। 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌜𑌾𑌤𑌿𑌰𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍 𑌤𑌨𑍍𑌨। 𑌤𑌤𑍍𑌰 𑌜𑌾𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌜𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌵𑌨𑍇𑌕𑌜𑌾𑌤𑌿 𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍। 𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑍋 𑌬𑌹𑌵𑌃 𑌸𑌨𑍍𑌤𑌿। 𑌋𑌷𑍍𑌯𑌶𑍃𑌙𑍍𑌗𑍋 𑌮𑍃𑌗𑍍𑌯𑌾𑌃। 𑌕𑍌𑌶𑌿𑌕𑌃 𑌕𑍁𑌶𑌾𑌤𑍍। 𑌜𑌾𑌮𑍍𑌬𑍁𑌕𑍋 𑌜𑌮𑍍𑌬𑍁𑌕𑌾𑌤𑍍। 𑌵𑌾𑌲𑍍𑌮𑍀𑌕𑍋 𑌵𑌲𑍍𑌮𑍀𑌕𑌾𑌤𑍍। 𑌵𑍍𑌯𑌾𑌸𑌃 𑌕𑍈𑌵𑌰𑍍𑌤𑌕𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌂। 𑌶𑌶𑌪𑍃𑌷𑍍𑌠𑌾𑌤𑍍 𑌗𑍌𑌤𑌮𑌃। 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌃 𑌉𑌰𑍍𑌵𑌶𑍍𑌯𑌾𑌂। 𑌅𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌃 𑌕𑌲𑌶𑍇 𑌜𑌾𑌤 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍। 𑌏𑌤𑍇𑌷𑌾𑌂 𑌜𑌾𑌤𑍍𑌯𑌾 𑌵𑌿𑌨𑌾𑌪𑍍𑌯𑌗𑍍𑌰𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌾 𑌋𑌷𑌯𑍋 𑌬𑌹𑌵𑌃 𑌸𑌨𑍍𑌤𑌿। 𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨 𑌜𑌾𑌤𑌿𑌰𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣 𑌇𑌤𑌿।

𑌤𑌰𑍍𑌹𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍 𑌤𑌨𑍍𑌨। 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑌯𑍋𑌽𑌪𑌿 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑍋𑌽𑌭𑌿𑌜𑍍𑌞𑌾 𑌬𑌹𑌵𑌃 𑌸𑌨𑍍𑌤𑌿

𑌤𑌰𑍍𑌹𑌿 𑌕𑌰𑍍𑌮 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍 𑌤𑌨𑍍𑌨। 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌰𑌬𑍍𑌧𑌸𑌞𑍍𑌚𑌿𑌤𑌾𑌗𑌾𑌮𑌿𑌕𑌰𑍍𑌮𑌸𑌾𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌾𑌭𑌿𑌪𑍍𑌰𑍇𑌰𑌿𑌤𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑍋 𑌜𑌨𑌾𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍀𑌤𑌿। 𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨 𑌕𑌰𑍍𑌮 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣 𑌇𑌤𑌿

𑌤𑌰𑍍𑌹𑌿 𑌧𑌾𑌰𑍍𑌮𑌿𑌕𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍𑌤𑌨𑍍𑌨 । 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑌯𑍋𑌽𑌪𑌿 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌦𑌾𑌤𑌾𑌰𑍋 𑌬𑌹𑌵𑌃 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨 𑌧𑌾𑌰𑍍𑌮𑌿𑌕𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣 𑌇𑌤𑌿 ।

𑌤𑌰𑍍𑌹𑌿 𑌕𑍋 𑌵𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌾𑌮 । 𑌯𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌜𑌾𑌤𑌿𑌗𑍁𑌣𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍀𑌨𑌂 𑌷𑌡𑍂𑌰𑍍𑌮𑌿𑌷𑌡𑍍𑌭𑌾𑌵𑍇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌸𑌰𑍍𑌵𑌦𑍋𑌷𑌰𑌹𑌿𑌤𑌂 𑌸𑌤𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌨𑍍𑌦𑌾𑌨𑌨𑍍𑌤𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌮𑌶𑍇𑌷𑌕𑌲𑍍𑌪𑌾𑌧𑌾𑌰𑌮𑌶𑍇𑌷𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑌿𑌤𑍍𑌵𑍇𑌨 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌮𑌨𑍍𑌤𑌰𑍍𑌬𑌹𑌿𑌶𑍍𑌚𑌾𑌕𑌾𑌶𑌵𑌦𑌨𑍁𑌸𑍍𑌯𑍂𑌤𑌮𑌖𑌣𑍍𑌡𑌾𑌨𑌨𑍍𑌦𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌮𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌮𑌨𑍁𑌭𑌵𑍈𑌕𑌵𑍇𑌦𑍍𑌯𑌮𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌤𑌯𑌾 𑌭𑌾𑌸𑌮𑌾𑌨𑌂 𑌕𑌰𑌤𑌲𑌾𑌮𑌲𑌕𑌵𑌤𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑍀𑌕𑍃𑌤𑍍𑌯 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑌤𑌯𑌾 𑌕𑌾𑌮𑌰𑌾𑌗𑌾𑌦𑌿𑌦𑍋𑌷𑌰𑌹𑌿𑌤𑌃 𑌶𑌮𑌦𑌮𑌾𑌦𑌿𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑌃 𑌭𑌾𑌵𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌯𑌤𑍃𑌷𑍍𑌣𑌾𑌶𑌾𑌮𑍋𑌹𑌾𑌦𑌿𑌰𑌹𑌿𑌤𑌃 𑌦𑌮𑍍𑌭𑌾𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑌸𑌂𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌚𑍇𑌤𑌾𑌃 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑌲𑌕𑍍𑌷𑌣𑍋 𑌯𑌃 𑌸 𑌏𑌵 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌪𑍁𑌰𑌾𑌣𑍇𑌤𑌿𑌹𑌾𑌸𑌾𑌨𑌾𑌮𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑌃 । 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌹𑌿 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌤𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑍇𑌵 । 𑌸𑌚𑍍𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌭𑌾𑌵𑌯𑍇𑌤𑍍 ॥ 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑌚𑍍𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌭𑌾𑌵𑌯𑍇𑌦𑌿𑌤𑍍𑌯𑍁𑌪𑌨𑌿𑌷𑌤𑍍 𑌇𑌤𑌿 ।

பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், என நான்கு வர்ணங்கள். அவைகளுள் பிராமணன் பிரதானனென்று வேதங்கள் சொல்வது போல ஸ்மிருதிகளிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதிற் கொஞ்சம் விசாரிக்க வேண்டியதுண்டு. பிராமணன் என்பவன் யார். ஜீவனா, தேகமா, ஜாதியா, ஞானமா, கன்மமா, தர்மசிந்தையுள்ளவனா? அதில் முதலில் ஜீவன் பிராமணனென்போமென்றால் அது ஏற்காது. இது வரைகழிந்தது, இன்னும் வராமலிருப்பது முதலிய அநேக தேக பேதங்களிலும் ஜீவன் ஒரே ரூபமுடையவன்தான். ஒரே ஜீவனுக்குக் கன்ம வசத்தால் அநேக தேகமட்டு மேற்படுமே யொழிய அவன் மாறமாட்டான். எல்லா சரீரங்களிலும் ஜீவன் ஒரே ரூபமுடையவன் தான். ஆதல் பற்றி ஜீவன் பிராமணனல்லன்.

-14-



ஆனால் தேகத்தை பிராமணனென்போமெனிலதுவுமாகாது. ஏனெனில் சண்டாள பரியந்த முள்ள மனிதர்களது சரீரம் பஞ்ச பூதங்களின் ஒரே மாதிரியான திரிபே தவிரவேறல்ல. கிழத்தனம், சாவு, தர்மம், அதர்மம் முதலியவைகள் எல்லாவற்றிலும் ஒரே மாதிரிதான். பிராமணன் வெள்ளை நிறமுடையவன், சிவப்பு வருணம் பெற்றவன் க்ஷத்திரியன், மஞ்சள் நிறமுடையவன் வைசியன், சூத்திரன் கறுப்பாயிருப்பானென்ற நியமமோ கிடையாது. தகப்பன் முதலியவர்களின் சரீரத்தைத் தகனம் செய்யும் காலத்துப் பிள்ளைக்கு அப்போது பிர்மஹத்தி முதலான தோஷங்கள் சம்பவிக்கலாம். ஆகையால் தேகம் பிராமணனல்லன்.

ஆனால் ஜாதியை பிராமணனெனக் கூறுகிறோமென்றாலதுவு மொவ்வாது. அதில் வேறு ஜாதியிலிருந்தும் அநேக ஜாதி உண்டாயிருக்கிறது. அவ்விதமநேக மகரிஷிகளிருக்கிறார்கள். ரிசியசிருங்கர் மானின்வயிற்றிற் பிறந்தார். கௌசிகரென்பவர் குசத்தினுதித்தார். ஜாம்பூகரென்ற மகரிஷி நரி வயிற்றிற் பிறந்தார். வால்மீகி மகரிஷி புத்திலிருந்துண்டானார். வியாசர் வலைச்சிவயிற்றுப்பிள்ளை. கௌதமர் முயல் வயிற்றிற் பிறந்தார். வசிஷ்டர் ஊர்வசியென்ற தாசிவயிற்றிற் பிறந்தார். அகஸ்தியர் குடத்தினுதித்தார் என்றிருப்பதனாலும் இவர்கள் ஜாதியபேக்ஷையில்லாமலே பிறகு ஞானத்தினால் பிரசித்தர்களாய் ஏற்பட்டார்கள். ஆனது பற்றி ஜாதி பிராமணனென்பது பிசகு. ஆயின் ஞானம் பிராமணனென்போமெனின் அதுவுமன்று. ஏனெனில் க்ஷதிரியர்களிலநேகர் பரமார்த்த தர்சிகளாய் இருந்திருக்கிறார்கள்.

ஆனால் கன்மத்தை பிராமணனென்கிறோமென்றாலதுவு மல்ல. எல்லாப்பிராணிகளுக்கும் பிராரப்தம், ஆகாமி, சஞ்சிதம்என்றகன்மம் சமானமாயிருக்கிறது. கன்மத்தினால் தூண்டப்பட்டு ஜனங்கள் கன்மத்தைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனது பற்றி கன்மம் பிராமணனில்லை.

ஆனால் தர்மகிந்தையுள்ளவனை பிராமணனென்கிறோமென்றாலதுவும் கரையேறாது. அநேக க்ஷத்திரியர்கள் தங்கத்தை வாரிக்

கொடுத்திருக்கிறார்கள். ஆனது பற்றித் தர்ம சிந்தையுள்ளவன் பிராமணனாகான்.

ஆனாலினி எவனை பிராமணனெனக்கூறுகிறதென்றால், எவனொருவன் ஆன்மா ஒருவன்தானென்றும், ஜாதிகுணம், கிரியை முதலியவையற்றதென்றும், ஷடூர்மி ஷட்பாவம் முதலிய தோஷமற்றதென்றும், தான் விகற்பமற்றவனென்றும், சமஸ்தகற்பங்களுக்குமாதாரமென்றும், ஸமஸ்த பிராணிகளிடத்து முள்ளிருப்பவனென்றும், உள்ளும் வெளியு மாகாயம்போல் நிறைந்த பொருளென்றும், அகண்டானந்த ஸ்வபாவனென்றும், அளவிட முடியாதவ னென்றும் அனுபவத்தினால் மட்டிலும் அறியத்தக்கவனென்றும், அபரோக்ஷமாய்ப் பிரகாசிப்பவனென்றும் நினைத்து அப்படிப்பட்ட ஆன்மாவைப் பிரத்தியக்ஷமாய் உள்ளங்கை நெல்லிக்கனி போல் கண்டு கிருதார்த்தனாய் காமம் குரோதம் முதலிய தோஷமற்றவனாய், சமாதி குணங்களை யடைந்தவனாய், பாவம் மாத்ஸர்யம், திருஷ்ணை, ஆசை, மோகம் முதலியவைகளில்லாதவனாய், டம்பம், அகங்காரம், முதலியவைகளுக்கிடம் கொடுக்காத மனதோடு எவனிருக்கிறானோ அவன்தான் பிராமணனென்று சுருதி ஸ்மிருதி புராணம் இதிகாஸம் முதலியவைகளின் சம்மதம். இவை இல்லாமற் போனால் பிராமணனாகவே மாட்டான். என்று சொல்லி விட்டு அப்படிப்பட்ட இரண்டற்ற பிரம்மத்தையே தியானம் செய்யவேண்டும். அப்படிப்பட்ட பிர்மம்தான் பாவனை செய்யப்படவேண்டுமென்று முடித்திருக்கிறது.

ஆகையால் ஆஸ்திக புத்தி உள்ளவர்களாயிருப்பவர்களும் வேதசாஸ்திரமரியாதைகளிற் கட்டுப்பட்டவர்களுமான பெரியோர்களுக்கு இவ்வளவே போதுமென்று இதனை இத்தோடு நிறுத்துகிறேன். ஆனால் பூர்வபக்ஷிகள் இந்த இன்னொரு விஷயம் நினைக்கக்கூடும். அதாவது—

பிராமணன் முதலிய ஜாதி உயர்ந்தது தாழ்ந்தது என்பதை விளக்கிக் காண்பிக்கும் வேதவாக்கியங்களில்லை. அதுகொண்டு ஸ்மிருதி மூலம்நிர்மூலம் தான். புராணமும் கிடையாது என்றுவீண் வாதம் செய்துகொண்டு ஏராளமான பேச்சுப்பேசின இவர் சர்வப்

பிரத்தியக்ஷமாய் ஜயபேரிபோல் முழங்கி நிற்பதும் பிராமணன் முதலான ஜாதியின் மகிமையை அழகாய் எற்றிக் காண்பிக்க வந்ததுமான புருஷசூக்தத்தை மறந்தாரா? மறைத்தாரா? தெரியவில்லை. அதில்:—

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌸𑍍𑌯 𑌮𑍁𑌖𑌮𑌾𑌸𑍀𑌤𑍍 । 𑌬𑌾𑌹𑍂 𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑌃 𑌕𑍃𑌤𑌃 ।
𑌊𑌰𑍂 𑌤𑌦𑌸𑍍𑌯 𑌯𑌦𑍍𑌵𑍈𑌶𑍍𑌯𑌃 । 𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑍋 𑌅𑌜𑌾𑌯𑌤 ।

இந்த விராட் புருஷனது முகமாக பிராமணனுனன். அதாவது பிராமணன் முகத்திலிருந் துதித்தான். கைகளிலிருந்து க்ஷத்திரியன் உண்டானுன். துடைகளிலிருந்து வைசியனும், கால்களிலிருந்து சூத்திரனும் தோன்றினன் என்ற இந்த வாக்கியத்தைக்காதிற் கூடக்கேட்டிராரோ? இதில் முகம் பிராமணரது உற்பத்திஸ்தானமென்றதனுலேயே பிராமணன் மேலென்றும் அதற்குக் கீழானகைகளிலிருந்து உண்டானது பற்றி க்ஷத்திரியன் ஒரு படி இறங்கியவனென்றும் இவ்விதமே வைசியனும் அதிலும் சூத்திரனென்றும் நன்கு விளங்கவில்லையோ. இப்படிப் பிரகாசமான சுருதியை நன்ருய் மறைத்தார் என்று என்பேரிற் குற்றஞ்சாட்டக் கூடும். இதற்கு இப்போது சமாதானம் கூறுதவரை யான் வஞ்சகனுவேனுதல் பற்றி ஒரு சமாதானமிங் குரைக்கின்றேன்.

ஐயா! ஓர் விஷயத்தைப்பற்றி நம் வேதங்கள் கூறுவதாயின் பற்பல விடங்களிற்பன்முறை கூறும் வழக்கம். அம்முறையை ஒட்டிப்பார்க்கும்போது இந்த வரிசைபோல் மற்றெவ்விடத்திலுமில்லை.

மற்றும் இது எங்களுக்கே சாதகமென்றே சொல்லிவிடுகிறோம். அதாவது இந்தமந்திரத்தாலும் நாங்கள் சொன்ன லக்ஷணமுடைய பிராமணன் முதலியவர்கள்தான் ஜனித்தார்களென்று சொல்லிவிடுகிறோம்.

மற்றும் இந்தப் புருஷசூக்தமென்பது வயிற்றுத்திரத்தைத் தீர்த்துக் கொள்ளவிரும்பிய சில பிராமணர்களென்பவர்களால் ருக்வேதத்திற் சேர்க்கப்பட்டிருக்கிறதே தவிர இது நித்தியமாயுள்ள வேதபாகங்களிற் சேர்ந்ததில்லை யென்று ஒருவர் சொல்லியிருப்ப

தைப்பார்த்தால் அதனுண்மை விளங்குமாதல்பற்றி அதன் விஷயத்தில் விரித்துரைப்பது அவ்வளவு மேன்மையில்லையென்றுமட்டிலும் விடுகிறோம். இன்னும் இதனை விரிக்கிற் பெருகுமாதலாற் கடைசியாய் நன்கு நம்பக்கூடிய ராமாயணத்திலுள்ள ஓர் சிறிய உபாக்கியானத்தைக் கூறி முடித்துவிடுகிறேன்.

க்ஷத்திரிய வம்சத்திற் பிறந்த விசுவாமித்திரரென்றவோர் அரசன் ராஜ்யபரிபாலனம் செய்து கொண்டிருந்து ஒரு நாள் வேட்டையாடுவதற்காக சைனியங்களுடன் வனமேகி வேட்டையாடிக்களைத்துத் தனது குருவான வசிஷ்டரது ஆசிரமமடைந்து அங்கு அவராலளிக்கப்பட்ட அன்னத்தை யுண்டு இவ்வளவு அன்னமளிக்கும் தன்மை இவருக்கெவ்விதம் வாய்ந்ததென்று எண்ணிப் பிறகு காமதேனுவின் பிரபாவமென வறிந்து அதைத் தனக்கு வேண்டிப்பிறகு அதன் மூலமாயது வராத கோபத்தால் வசிஷ்டரின்மேல் பாணப்பிரயோகம் செய்ய அப்பாணங்கள் யாவும் அவர் முன்வைக்கப்பட்ட தர்ப்பைப்புல்லுக்கே ஆகாரமாய்ப்போக உடனே விசுவாமித்திரர் "திக்பலம் க்ஷத்ரியபலம் ப்ரஹ்மதேஜோபலம் பலம்" "க்ஷத்திரிய பலத்தைச்சுடவேண்டும். பிர்மதேஜஸ்ஸின் பலம்தான் பல"மென்று அப்படியே சைனியங்களை நகருக்கனுப்பிவிட்டு உடனே தபஸ் செய்து பிர்மரிஷிப்பட்டம் பெற்றாரென்பதைப்பற்றி சவிஸ்தாரமாய்ச் சொல்லியிருக்கிறது. இதனாலும் நற்சொழுகில் புரிபவன் சூத்திரனேயாயினும் மேன்பதவி பெறுவான். பிராமணனாயினும் அக்கிரமம் செய்தால் க்ஷத்திரிய ஜன்மத்திலிருந்து அக்கிரமமாய்க் குருவை அவமதித்து அதே ஜன்மத்தில் சண்டாளத்தன்மையை அடைந்த திரிசங்குபோல் ஈன ஜன்மத்தையும் பெறுவானென்பதைத் திண்ணமாய் நம்புங்கள். மற்றும்,

நமது அத்வைத மதத்தை பிரதிஷ்டை செய்து துர்மதங்களைக் கண்டிக்க வேண்டுமென்றே அவதரித்த பரமகருணாமூர்த்தியான ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யரவர்களுங் கூட காசியாத்திரை போகும்போது நடுவழியில் வந்த புலையனைப்பார்த்து விலகிப்போவென்று சொல்லவே அவனப்போது:—

அந்நமயாதந்நமயமதவா சைதந்யமேவ சைதந்யாத் ।
யதிவர தூரீகர்தும் கிம் ப்ரூஹி கச்ச கச்சேதி ॥

உமது அன்னமயகோசமும் எனது அன்னமயகோசமும் ஒன்றுதானே. உமது சைதன்னியத்திற்கும் எனது சைதன்னியத்திற்கும் பேதமுண்டோ. ஆகவே ஓ யதியே விலகுவிலகென்று எதைப்பார்த்துச் சொன்னீர் என்று ஒரு வார்த்தை சாதாரணமாய்ச் சொல்லவே அவனிடத்தில் ஞானமிருக்கிறது அதனால் அவன் உத்தமன் அவன் சண்டாளனாயினும் ஞானவலிமையினால் எனக்கு குரு என்று அர்த்தங்கொடுக்கக் கூடிய [ஶ்லோ:

கிம் கங்காம்புநி பிம்பிதேऽம்பரமணௌ சண்டாலவாடீ
பயஃபூரே வாऽந்தரமஸ்தி காஞ்சநகடீம்ருத்கும்பயோர்வாம்பரே ।
ப்ரத்யக்வஸ்துநி நிஸ்தரங்கஸஹஜாநந்தாவபோதாத்மக—
ஸ்வஜ்ஞாநோऽஸ்து ஸதா த்விஜோऽஸ்து ஶ்வபசோऽஸ்த்வித்யேஷ
மநீஷா. ௨]

கங்கை ஜலத்தில் பிரதிபலிக்கும் சூரியனுக்கும் சண்டாளன்து பானைத் தண்ணீரில் பிரதிபலிக்கும் சூரியனுக்கும் வித்தியாசமுண்டா. தங்கக்குடத்திலிருக்குமாகாயத்திற்கும் மட்குடத்திலிருக்குமாகாயத்திற்கும் பேதமுண்டா. பிரத்தியக் வஸ்துவினிடத்தில் யாதொரு கிரியாம்சமுமில்லாத ஆனந்த சுவபாவத்தையுடையவன் சண்டாளனயினும் வேதியனயினும்அவனே எனக்குக் குரு என்று நமஸ்கரித்ததாய்க் கேட்டதில்லையா.

மற்றும் பாரதத்தில் மகாப் பிரசித்தரும் மகாத்மாவுமான விதுரரின் சரித்திரம் கேட்டதில்லையோ. அம்மகான் சூத்திரஸ்திரீயினிடத்திற் பிறந்த வராயினும் ஞான விஷயமான வியவகாரங்களில் பாண்டவர்களும் திருதராஷ்டிரனும் அவரை முன்னிட்டு எவ்வளவோ மரியாதையாய் நடத்தியிருக்கிறார்கள். அவருக்கு நடத்திய உபசாரம் அவரது ஞானத்திற்கா ஜாதிக்கா என்பதை ஆலோசியுங்கள்.

ஆரியர்களே! இனி வீணாய் வளர்ப்பதிற் பிரயோஜனமென்ன. மீண்டுமிங்கு சுருக்கிச் சொல்லுகிறோம். பிராமணன் முதலான பெயர்கள் ஜாதியைப் பொருத்தமெதென்பது உங்களது வீணான அபிமானம். எங்களது அபிப்பிராயமதன்று. மற்றும் அவனவனிடத்திலிருக்கும் கன்மத்தைப்பொறுத்து அப்பெயர் வாய்ந்ததேயொழிய வேறில்லை. இது தான் சுருதி, சாஸ்திரம், மகாரிஷிகளது அபிப்பிராயம் இவைகளை ஒட்டி நிற்கும் என்பதை நன்கு கவனித்து இனிமேலாவது ஞானத்தையடையமுயன்று அது தங்கியிருப்பவர்களையே மகானென்று வணங்கி விருதாபிமானத்தை தொலைக்க வேண்டுமென்பது தான் எமது கோரிக்கையே தவிர மற்று கேவலதூஷணமட்டிலும் எமது எண்ணமில்லையென்பதை நிச்சயமாய் நம்புங்கள். சுபம். சுபம்.

## சித்தாந்தம்

ஆரியர்களே! இந்தப் பூர்வ பட்சிகளது பூர்வ பட்சங்களுக்குக் கிரமமாய் யான் சொல்லப்புகும் சமாதானம் முற்றிலும் சரியாகவேயிருக்குமென்று நான் நினைத்தபோதிலும் அது போலவே மற்றவர்களும் நினைப்பார்கள் என்று நினைப்பது முற்றிலுமொவ்வாதாயினும் ஒருவாறு வைதிக சிரோமணிகளான பெரியோர்கள் எவ்விதமும் சந்தோஷப்படுவார்களென்று எண்ணி இப்போது ஆரம்பிப்பதில் பொதுவாய்ச் சில விஷயங்களைத் தெரிவிக்கிறேன். அதில் அவர்களது பிரச்னத்திற்கு உத்தரம் கொடுக்கப்பட்டதுபோக மீந்த விஷயங்களை விவரமாய்ப்பின்புதெரிவிக்கின்றேன். அதாவது:-

பூர்வ பட்சிகளே! நீங்கள் பிராமணன் முதலிய சொற்கள் ஞானம் முதலிய தொழில்களை ஒட்டி ஏற்பட்டனவே யொழிய இயற்கையாய் அமைந்ததில்லை யென்று சொல்வது முழுமையும் அறியாத்தன்மை யென்றே முடியும்.

ஏனெனில் நீங்கள்சொன்ன 1-வது விஷயத்தில் கூறியவிஷயத்திற்குஅனுகூலமான சுருதி ஸ்மிருதிகள் எங்கிருக்கின்றன. சுருதி ஸ்மிருதிகளினுதாரமின்றியுக்தியாய்க் கூறுமர்த்தத்தை யாரும்நம்பமாட்டாரல்லவா? அனேக விடங்களில் வர்ணதர்மத்தை வெளியிடும்

போதெல்லாம் நமது ரிஷிகள் பிராமணனுக்கு ஆறுகன்மங்களைவிதித்தார். அதுபோல் மாறி மாறி மற்றிருவர்களுக்கும் விதித்திருக்கின்றார்கள். இந்த அர்த்தமும் அவ்விடங்களில் சொல்லவேண்டுமென்று அவர்களுக்குத் தோன்றாமற் போய் விட்டதோ? இது நிற்க.

இப்படி அர்த்தத்தை ஸ்தாபிப்பதில் உங்களுக்குத் தான் கிடைத்த அனுகூலம்யாது. நமது முன்னோர்களின் மகிமையை விளக்கி அவர்களைப்போல் நாமும் மேம்பதமடையவேண்டுமென்பது தானா? அவ்விதம் உங்களுக்கு உண்மையான அபிப்பிராயம் தோன்றியிருப்பின் நீங்கள் செல்லவேண்டிய வழி இதல்ல. அதைச் சொல்லுகின்றேன்.

நீங்கள் நமது உபநிஷத்துக்களில் கூறப்படும் லட்சணத்துடனிருந்து வழங்கும் சத்குருக்கள் எவ்விடமிருக்கின்றார்கள். அவர்களை யாம் அடையும் முறையாது, யாங்ஙனமவர்களின் நல்ல உபதேசங்களைப்பெறுவோம், எவ்விதம்நம்து தர்மம் முன்போல்தழைத்தோங்கும், எவ்விதம் நமது வேதா சாஸ்திரங்கள் முற்காலம்போல் அச்சமின்றி நடைபெறும். எவ்விதம் நமக்கு ஏற்பட்டிருக்கும் துற்புத்தி விலகும் என்று ஏங்கித்தயங்கி அப்படிப்பட்ட சத்குருவை அடைந்து அம்முறையைக்கற்று அதையல்லவா வெளியிடயத்தனித்திருப்பீர்கள். இப்போது அதை முற்றிலு மொழித்து உங்களது மனதுக்குத்தோன்றியபடி இக்கால மகா ராஜனை கலியின் ஆக்ஞைக்குக் கொஞ்ச .மேனும் துரோகம் நினையாமல் ராஜ விசுவாசிகளாயிருந்துகொண்டு வெளுத்ததெல்லாம் பாலென்பது போலக் கண்டவனையெல்லாம் குருவெனப்பாவித்து இஷ்டம்போல் நடக்கிற உங்களது இப்போதிய எண்ணம் முற்காலத்திய நமது முன்னோர்களின் ஆசாரத்தின் வழியை நிமிர்ந்துபார்க்கக்கூடச் சக்தியற்றதென்பதை யான் திண்ணமாயுரைப்பேன். ஏனெனில் உங்களதெண்ணம் முற்றிலும் அதற்கு விரோதமென்பதை நன்கு இதனடியிற் கூறப்படும் மொழிகளால் அறிந்துகொள்ளலாம்.

இவ்வுலகத்தை அநாதிகாலமாய்ச்சிருஷ்டித்துவரும் பரமகருணாமூர்த்தியான பரமேசனுக்கு ஜாதியொன்று இருக்கவேண்டுமெ

ன்று அபிப்பிராயமேற்பட்டு அங்ஙனமே சிருஷ்டித்திருக்கிறாரென்பதை உண்மையாய் ஆராய்வோரறிவாரின்றி மற்றவரறியார்? இதில் நீங்களே முதலாவது யோசியுங்கள்.

பிராமணனென்ற பதத்திற்குப் பிர்மஞ்ஞானம் பெற்றவன்தான் பிராமணனென்று வெளிப்படையாயும் எளிதாயும் அறிந்துகொள்ளும்படி ஏற்பட்டது போல் க்ஷத்திரியனென்ற சொல்லுக்கும் ஒருசமயம் க்ஷதாத் த்ராயதஇதி க்ஷத்ர: அடியினின்று காப்பாற்றுகிறவன் க்ஷத்திரியனென்றும் அர்த்தம் கொள்ளலாம். அதற்குமேல் வைஸ்ய: ஸூத்ர: என்ற இரண்டு பதங்களுக்கும் சுகமாய் போத முண்டாகும்படி அர்த்தமேற்படுகிறதா? உங்களது அபிப்பிராயமே ஈசனது சம்மதமெனின் முன்னிரண்டு பதங்களைப்போல் பின்பதங்களையு மமைத்திருக்கமாட்டாரா? அப்படியியற்றாததனாலேயே அவ்விதமர்த்தம்செய்வது பிசகென்றேற்படுகிறது. வியாபாரம் முதலிய வியவகாரங்களிற் பிரவேசிப்பவன் வைசியனென்றேமேயெனில் அவ்விதம் அர்த்தம் கொள்ள விஸ் என்ற பதத்திற்கு பிரவேசிக்கிறது என்பது அர்த்தம். இதைக்கொண்டு அதற்குமேல் வியாபாரம் முதலியவைகளில் பிரவேசிப்பவனென்றீர்களே. அதுஎந்தப் பதத்தினர்த்தம். அல்லது இப்படித்தான் அர்த்தம் கொள்ளவேண்டுமென்று எந்த மகரிஷியின் மூலக்கிரந்தத்தை ஆதாரமாய் வைத்துச்சொல்லுகிறீர்கள். இவ்வளவர்த்தத்திற்கும் வேதத்தில் எந்த வாக்கியம் இடங்கொடுத்தது. உண்மையாய்ஈசனது கட்டளையிருக்குமிடத்து சிரமமின்றிக்கோடானகோடி பிரமாணமேற்படலாம். இதுநிற்கட்டும். பிறகு சூத்திரனென்ற பதத்திற்கு எவ்விதம் வழி விடுவீர்கள் ஆனால் நாங்கள் கேட்கும் வினாக்களுக்கு விடையின்றி வீண்வாத மிதுவென்றெண்ண வேண்டாம் அதில் ஒவ்வொன்றிற்கும் என் சிற்றறிவுக்கு கட்டிய வரை பின்னால் உத்தரமளிக்கின்றேன். அதற்கு முன் யுக்தி நியாயத்திற்கு இது ஒட்டி நிற்குமா என்பதை மட்டிலும் இருவரும்கலந்து பார்ப்போம் பிறகு ஸ்ருதியில் புகுவோம்.

பாருங்கள் உலகினில் ஞானம் முதலிய தொழில்களைப் பற்றி பிராமணன் முதலிய விபாக மேற்பட்டிருப்பின் அந்நான்குடனிற்

பானேன். தொழில்களை ஒட்டிப் பெயர் ஏற்படுவதால் ஞானம் முதலிய சாந்த குணம் பொருந்தியவன் பிராமணனெனப்படுவனென்பது போல், ஞானம் முதலிய குணங்களுடன் ராஜ்யபரிபாலனம் செய்யும் திறமையும் பொருந்திய ஜனகன்போன்ற அனேகரிருப்பின் அவர்களைப்பிராமண க்ஷத்திரியர்களென்றும் பிராமணகுணத்தோடு வியாபாரத்தொழிலுள்ளவன் பிராமணவைசியனென்றும் முன்னேடு சச்ருஷைத் தொழில் பொருந்தியவன் பிராமண சூத்திரனென்றும் இவ்விதமே இன்னுமனேக அவாந்தர பேதங்கள் ஏராளமாய்ச் சொல்லலாமே? இந்தத் தொழில்களுள் யாதொன்று மில்லாமல் வீண்போக்குப் போக்குகிறவர்கள் அல்லது வியவகார சாமர்த்தியமுள்ளவர்கள் எவ்வகுப்பிற்சேர்வார்கள். இதற்கு ஏதாவது உங்கள் குருக்கள் உபதேசஞ் செய்திருக்கிறார்களா? இவைகளுக்கு வேதம் தர்மசாஸ்திரமிவைகள் இடம் கொடுக்கமாட்டா. இன்னென்று இங்கு ஆலோசியுங்கள். ஜனகன் ஜானசுருதி முதலியவர்கள் பிரம ஞ்ஞானத்திற் சிறந்தவர்களல்லவா? இவர்களை எங்கேயாவது யாராவது பிராமணனென்று அழைத்திருக்கிறார்களா. இவர்கள் ராஜ்ய வியவகாரங்களிலும்சிறந்தவர்களாதல் பற்றி பிராமணக்ஷத்திரியனென்றாவது சொல்லியிருக்கிறார்களா? இதுநிற்க. எங்களை ஒருகேள்வி கேட்குமிடத்து புருஷ சூக்தத்தில் சொன்னது உண்மையாயின் அதுபோற் பலவிடங்களில் பன்முறையாய்ச் சொல்லும் வழக்கம் வேதத்திற்குண்டு. அதுபோல் வேதத்தில் மற்ற விடங்களில் சொல்லப்படாததால் அது பொய்யென்றீர்களே! இப்போது நீங்கள் இப்படியெல்லாம்அர்த்தம் கொள்வதற்குப் பிரமாணம்பற்பலவிடங்களிற்கூறப்பட்டிருக்க வேண்டாமா; இருந்தால் அதை வெளியிடுங்கள். ஆனல் நாங்கள் சொன்ன வேத விஷயம்போல் அனேக மகரிஷிகள் அனேக விடங்களிற் கூறியிருக்கிறதே ஏராளமான பிரமாணமென்பீர்கள். ஆனலும் அதற்காதாரமான ஸ்ருதி எங்கே? இதற்கும் நீங்கள் கொள்ளுமபிப்பிராயம் ஏற்காதென்பதைக்காண்பிக்கிறேன். இவ்விடங்களில் யாம் அர்த்தங்கொள்ளவேண்டிய வழி என்னவென்றால் ஜஹதஜஹல்லக்ஷணம் என்று பேரிட்டிருக்கும் வாக்கியத்தைநன்கு கவனிக்கவேண்டியதே. அதாவது ஜஹல்லக்ஷணம

ப்ராஹ்மணஸ்ய லக்ஷணம், ப்ராஹ்மண லக்ஷணம், பிராமணனுடைய லட்சணமென்று அர்த்தமேற்படுகிறது. பிராமணனென்பவன் ஓர் வகுப்பினன். அவனுக்கு இது லட்சணம். மற்று க்ஷத்திரியன் முதலானவர்களுக்கு இதல்ல, வேறு உண்டு; மற்றும்--

இவை பிராமணனுக்கு லட்சணம். அழகைக் கொடுக்கக் கூடியது என்று எற்படுகிறது. இதனால்பிராமணனென்பவனியற்கையாய் ஒருவனிருக்கிறானென்றும். அவனுக்கு இவை லட்சணமென்றும் சொன்னதாய் எற்படுகிறது.

உங்களதபிப்பிராயப்படி அர்த்தமேற்பட்டிருப்பின் இதனை இத்தோடு நிறுத்தாமல் இவைகளல்லாதவன் பிராமணனல்லனென்றும் சொல்லி யிருக்கவேண்டும்; மற்றும் இந்த மாதிரி யுத்த வலிமை முதலியது பொருந்தியவன் தான் க்ஷத்திரியனென்றும் வியாபார வியவகாரங்களுள்ளவன்தான் வைசியனென்றும்சி ச்ருஷை செய்பவன்தான் சூத்திரனென்றும் இவைகளல்லாதவன் இன்னவனென்றும் ஒரு போக்கு நன்றாய்க் கூறியிருக்கவேண்டாமா? அப்படி எங்கேயாவதுண்டா? ஓரிடத்திலுமில்லையே! மற்றும்—

அத ப்ராஹ்மண லக்ஷணம் என்றதுபோல் அத க்ஷத்ரிய லக்ஷணம் அத வைஶ்ய லக்ஷணம் அத ஶூத்ர லக்ஷணம் என்றும் கூறாமல் அது ஒன்றோடு நிறுத்தியதின் காரணம் இதற்கென்று தெரியவில்லையா? அது எதற்கென்றால்உலகில் ஸர்வப்பிரசித்தமாய்ப் பாமரஜனங்களும் எளிதிலறிந்திருக்கும் விஷயமேதென்றால் உலகில் ஜாதியென்று எற்பட்டிருப்பதில் உயர்ந்தஜாதி பிராமண ஜாதியென்பதே? அதை அனுவாதம் செய்துகொண்டே ஞானகாண்டத்திலேற்பட்டிருக்கும்சுருதி வாக்கியங்கள். அவைகளையனுசரித்த ஸ்மிருதி புராணங்களும் ஞானத்தைப் புகழ்வதற்காக ஞானமுள்ளவன்தான் உத்தமன். மற்று பிராமணன் மேலில்லையென்று ஞானத்திற் கொரு மேன்மையைக் காட்ட அவ்விதங் கூறியதேதவிர வேறல்ல. ஆனால் அத்தகைய ஞானத்தை உண்மையாயடைந்தவன் உண்டானால், அவன் எச்சாதியோனாயினும் மகிமைபொருந்தியவனென்பதில் தடையில்லை. ஆனால் இங்கு கவனிக்கத்தக்கது

ஒன்றுண்டு. இவ்விதம் தாழ்ந்த ஜாதியிற் பிறந்து வாஸ்தவமாய் உத்தமஞானத்தை யடைந்தவன், கர்மகாண்டப்படி வர்ணாசிரம ரீதியாய் அவன் மேலல்ல. பிர்மஞானத்தில் அவன் சிறந்தவனாதல்பற்றி அவன் நமதுசிரார்த்த போஜனத்திற்குத் தகுந்தவனில்லை. பிராமண ஜாதியால் நமஸ்கரிக்கத் தக்கவனில்லை. இதற்குத் திர்ஷ்டாந்தம் ஜனகர்தான். இதன்விஷயம் விரிக்கிற் பெருகுமாதலால் இப்போது இதனை இத்தோடு நிறுத்திக்கொள்வோம். வாஸ்தவமான ஞானம் ஒருவனுக்குக் கிடைத்து அது ஒரு துர்யுக்திகளாலு மசைக்கப் பெறாது வேரூன்றுகிறவரை அவனவன் தன் ஜாதி ஆசாரம் முதலியவைகளைக் கைவிடவே கூடாது. அது வாஸ்தவமாய் வந்ததின் பேரில் அவன் அவ்வாசாரங்களை விடுவதற்காக முயற்சி செய்யவேண்டாம். இயற்கையாக அவைகளி லவனுக்குப் பற்றுக் குறைந்து மறைந்துவிடும். [illegible] இவனுடைய கன்மங்கள் தூங்குபவனது கையிலிருக்கும் புஷ்பம் நழுவுவதுபோல் மறைந்து விடுமென்றார். இதற்கனுபவமான ஒரு திர்ஷ்டாந்தத்தைப் பார்ப்போம். நம்முள் அநேகமாய் இக்காலத்தில் இங்கிலீஷ்ப்படிப்பினல்உயர்ந்த வேலைக்குவந்துசுகமாய் வாழ்ந்திருப்போ மென்றெண்ணுகிறார்கள். அதனால் கிடைக்குமுத்தியோகமும் பி. ஏ. முதலிய உயர்ந்த படிப்பில் தேறினவனுக்குத்தானென்று நிச்சயமா யறிந்திருந்தபோதிலும் நாம் அதற்குச் செய்து வரும் முறையென்ன ? நாம் முதலில் சிறு வகுப்பிற் சேர்ந்து அதில் விசேஷக் கவலையுடன் படித்துத்தேறி இவ்விதமே ஒவ்வொன்றிலும் நன்று யுழைத்து பி ஏ வகுப்பையு மடைந்து தேறி உத்தியோகம் பெறுகிறோம். அப்படி அடைந்ததின்பேரில் அவனுக்கு அந்தக் கீழ் வகுப்புகளால் ஏதேனுமுபயோகமுண்டா? பி ஏ யால்தான் பிரயோசனமுண்டா? இல்லை. அதுபோல் நாமிருக்கும் கன்ம மார்க்கத்தில் ஏற்பட்டிருக்கும் ஜாதி வகுப்பை நன்கு அபிமானித்து அதன் கன்மங்களிலிருந்து கொஞ்சமேனும் வழுவாதிருந்தால் பிறகு நற்கதிப்பெறலாம். அதை முற்றிலும் தொலைத்து நாம் கொஞ்சமேனும் கன்மங்களைச் சரிவர அனுஷ்டியாதிருந்துவிடுவதுடன் இது மறுபிறப்புக்குக் காரணமென்றும், பந்தத்திற்கேதுவெனன்று

இதிற்கொஞ்சமேனும் பயனில்லையென்றும் உபநிடதங்கள் கூறுகின்றன வென்றும் நாம் பேசி இதைவெறுத்தால் பிற தேறினல்தான் வேலை கீழ் வகுப்புகளிலேதேனும் பிரயோசனமில்லை. ஆனதால் நமக்கு அவை வேண்டாமென்று கூச்சலிட்டுக் குதிக்கும் புத்திசாலிக்கும் நமக்குமேதாவது பேதமுண்டோ? உலகத்தில் நமது முன்னோர்களது வழக்கம் ஒன்றைப்புகழவேண்டுமாயின் மற்றொன்றைத் தாழ்த்தித் தான் பேசுவார்கள். அதுதான் சாஸ்திர சம்மதமும் அதனல் தாழ்த்தப்பட்ட பொருளினிந்தையானது கவனிக்கத்தக்கதல்ல, நஹிநிந்தா ந்யாயஃஎன்றுஒருநியாயமுமிங்குரைக்கப்படும். அதாவது நஹி நிந்தா நிந்த்யம் நிந்திதும் ப்ரவர்த்ததே அபிது விதேயம் ஸ்தோதுமேவ நிந்தையென்பது நிந்திக்கத்தக்க பொருளின்நிந்தையைக் கூறவந்ததல்ல. மற்று ஸ்தோத்திரம் செய்யத்தக்க பொருளை ஸ்தோத்திரம் செய்ய வந்தது என்பதுதான். அதிலும் நிந்திக்கப்பட்ட பொருள் சாதாரணமாய் இராது. அதுவே ஸர்வப்பிரசித்தமாயும் மேலானதாயுமிருக்கும். அத்தகைய வஸ்துவை இறக்கிப்பேசி அதற்குமேல் ஒன்றைப் புகழ்ந்தால் தான் அதற்கு வலிமை ஏறும். சாதாரணமான வஸ்துவை நிந்தித்தால் அதனல் மற்றொன்றிற்கு ஸ்துதி ஏறாது. உதாரணமாக சாதாரணமா யபோக்கியனுப் நடந்துகொண்டிருந்த தேவதத்தனை யெக்ஞதத்தன் கொன்றானென்றால் இதில் வியப்புக்குக் காரணமில்லை. மூன்று லோகங்களையும் தன் ஆளுகையில் வைத்து அஷ்டதிக்பதிகளையும் தனது கோட்டைவாயிற்காவலர்களா யேற்படுத்தி, பிர்மாதிதேவர்களையுங்கதறவடித்துக் கைலாயத்தைப் பூச்செண்டு போற்றூக்கத்திறமை பெற்று பிர்மாவிடமிருந்து அளவற்ற வரம்பெற்று பத்து முகங்கள் இருபது கரங்கள் பெற்ற ராவணனென்ற ஓர் ராட்சசராஜனை வாலியென்ற ஓர்குரங்கு அலட்சியமாய்த் தன்வாலினற் கட்டிக்கட்கத்தில்வைத்துக்கொண்டு நான்கு சமுத்திரங்களிலும் ஸ்நானஞ்செய்து பிறகுவீடுவந்து அந்த ராவணனைத் தன் குழந்தையின் தொட்டிலின் மேல் பத்துத்தலைப் பூச்சியென்று கட்டினன். அத்தகைய வாலியையும்ஸ்ரீராமர்கொன்றாரென்றால் இவ்வளவுதூரம் சத்துருவைச் செய்தஸ்தோத்திரமெங்கு முடிந்ததென்று பாருங்கள். இதனல் ராமரின் கீர்த்தி எவ்வளவு?

இது ராவணன் வாலி முதலியவர்களைத் திட்ட எழுந்த வாக்கியமில்லை. ராமனுடைய ஸ்தோத்திரத்திற்றான் தாத்பரியம். இதனால் ராவணன்வாலி இவர்கள் நம்மிலும் அற்பபலமுள்ளவர்கள். ஏனெனில்ராமர் அலட்சியமாய்க்கொன்றுதனாலென்று சொல்ல முடியுமா? இவ்விதமே நிந்தா ஸ்துதி உள்ள விடங்களிற் கண்டுகொள்க. ராமர் தாடகையைக் கொல்லும் காலத்தில் ஐயோ! அற்பமான ஸ்திரீஜாதியைக் கொல்லச்சொல்கிறீரே என்றுபரிதபித்துக் கொன்றுரென்றதைக்கொண்டு வாஸ்தவமாய்த் தாடகை அல்ப பலமுள்ளவள்தான். ஏனென்றால் ராமரே அவளுடைய சம்ஹாரகாலத்தில் சொல்லியிருக்கிறார் என்று நாம் சொல்லக்கூடுமா. ராமருடைய பலத்தை உத்தேசித்து எத்தனையோமடங்கு கீழென்று அவர் சொன்னார் என்று நாமும் அதைப் பிரமாணமாய்க்கொண்டு சொல்கிறதென்றால் நம்முடைய புத்திசாலித்தனம் எம்மட்டாகும். அதுபோல் பிர்ம ஞானத்தை ஸ்திரமாய்ப் பெற்ற ஓர் மகான் 𑌨𑌾𑌹𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍋 𑌨 𑌚 𑌦𑍇𑌵𑌯𑌕𑍍𑌷𑍌 𑌨 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌵𑍈𑌶𑍍𑌯𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌃। 𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑍀 𑌨 𑌗𑍃𑌹𑍀 𑌵𑌨𑌸𑍍𑌥𑍋 𑌭𑌿𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌨 𑌚𑌾𑌹𑌂 𑌨𑌿𑌜𑌬𑍋𑌧𑌰𑍂𑌪𑌃 நான் மனிதனில்லை; தேவனில்லை; யக்ஷனில்லை; பிராமணனில்லை; க்ஷத்திரியனில்லை; வைசியனில்லை; சூத்திரனில்லை; பிர்மசாரியில்லை; கிருகஸ்தனில்லை; வானப்பிரஸ்தனில்லை; சன்னியாசி இல்லை; ஆனால் நான் ஆத்ம ரூபன். உலகமெல்லாம் மித்தை. அதாவது மாயையின் தோற்றம். உலகத்தில் வாஸ்தவமாய் உள்ளது யாதொன்றுமில்லை யென்று அனுபவத்தோடு கூறினால், ஆம் அது வாஸ்தவந்தான். ஜாதி என்பது ஏது? மகா ஞானிகளான மகான்களே இவ்வண்ணம் கூறுகின்றனரே என்று நாமும் சொல்லத்தகுமோ. அதற்காக அம்மகான்போல் கன்மபந்தமின்றி வர்ஜியாவர்ஜியமின்றி சுத்தாசுத்த மின்றி இருப்பது தான் நமது கடமை என்றிருக்கலாமா? ஞானபாகத்திற்கும் கன்மபாகத்திற்கும் இருட்டிற்கும் வெளிச்சத்திற்கும் முள்ள பேதமென்பது தெரியாதா. அவ்விதமிருக்க, ஞானவிஷயத்திலிருக்கிற வாக்கியங்களைக் கன்மபாகத்திற்குப்பிரமாணமாய்க் கொண்டுவந்தமைப்பது பச்சை மண்ணுக்கும் சுட்ட மண்ணுக்கும் ஏற்படும் ஒட்டுதல் தானேற்படும். ஒருவன் தித்திப்பு என்றரசம் மிகவும் மேலானு

தென்று கேட்டு அதை அறியவேண்டுமென்று அது இருக்குமிடம் கற்கண்டு, சர்க்கரை முதலிய தென்றறியாமல் பாகக்காய், எட்டிக் காய், வெண்டைக்காய், கொத்தவரைக்காய், இன்னும் இவ்விதம் பல காய்களையும் தின்று ஒன்றிலும் காணாது. பிறகு பகிரங்கமாய் சபை கூட்டி ஜனங்களை தித்திப்பு ரசமென்று இருக்கிறதாயும் அதுசிரேஷ்டம் என்றும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அது கிடையவே கிடையாது. நான் பாகற்காயைச் சோதித்தேன். எட்டிக்காயைச் சோதித்தேனென்று சொன்னது போல் கன்மகாண்டத்தில் அழகாய் உயர்த்திப் பூஜித்திருக்கும் ஜாதிமுறையை அதன் மூலமா யறியாது ஞானகாண்டத்தில் போய்ப் பார்த்து அங்கு அதை நிந்தித்திருக்கிற தென்றால், நம் புத்திசாலித்தன்ம் எவ்வளவு காரியத்திற்கு சாதகமாகும். இவைகளெல்லாம் நன்கு வெளிப்படையாய் இருந்தும் இவைகளை யனைத்தையும் மறைத்து யாரை வஞ்சிப்பதற்காக வீண் பிரமாணங்கள் கூறுகின்றீர்கள். இதனால் நீங்கள் நியாயமாயும், சாஸ்திர சம்மதமாயும் உலகப்பிரசித்தமாயும் ஈசனது கட்டளையாயுமிருக்கிற ஜாதிக்கட்டு என்பது அநாதிதானென்றும் அது எத்தகைய குணங்களாலும் குன்றாதென்றும் தாழ்ந்தவன் கன்மத்தினால் மேன்பதவி பெறவேமாட்டானென்றும் ஞானத்தைப் புகழ்வதற்காக ஏற்பட்ட வாக்கியங்கள் இவ்விஷயத்தில் பிரமாணமாகாவெனவும் நிச்சயமாய் நம்புங்கள். இதனால் 19-வது கேள்வி வெளியாயிற்று. இவ்வளவு சொன்னதினாலேயே நீங்கள் கொண்டுவந்த பிரமாணங்கள் நிர்மூலமாய் [illegible]னவாயினும் கிரமமாய் ஒவ்வொன்றிற்கும் சரியான பதிற்சொல்வதுடன் நீங்கள் செய்த அபிப்பிராயமே பிசகென்பதையும் நன்கு விளக்கவேண்டி இப்போது அதிலிறங்குகின்றேன்.

உங்களது ?வது விஷயத்தில் [illegible] ॥ என்றவிடத்தில்பிராமணன் பெற்றவனுக்கு அத்தகைய ஸ்திரீயினிடத்திலுண்டாய் சம்ஸ்காரம் செய்யப்பெற்றபின் பிராமணனென்றீர்களே? இதில் எங்களுக்கு ஏதோ பிரதிகூலமாய் ஸம்ஸ்கிருத என்று ஒருபத மிருப்பதாயும்

சொல்லிவிட்டீர்கள். நல்லதிப்போது ஒரு சந்தேகத்தைக் கேட்டுத் தெளிகிறேன்: இந்த ஸம்ஸ்கிருத என்ற பதமானது உங்களுக்கு ரொம்ப அனுகூலத்திற்காக நிற்கிறதோ; இதனால் ஸம்ஸ்காரம் செய்யப்பெற்று உடனே அக்குழந்தை பிர்மஞானியாய் ஆய்விடும்போலிருக்கிறது. இன்னொன்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உங்களது மதப்படி பிர்மஞானம் பெரிது சிறிதென இருவகைப்பட்டிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. ஏனெனில் நீங்கள் சொல்லுகிற வாக்கியத்தின்படி ஞானமென்பது வாஸ்தவமாய் நிலைபெற்றவனுக்குப் பெண்டாட்டி எது பிள்ளை எது. எல்லாமொன்றுதானென்றேற்படுகிறது. இப்படியிருக்க இப்போது பிர்மஞானம்பெற்றவனுக்கு அத்தகைய ஸ்திரீ யென்று சொல்வதைப் பார்த்தால் இது சின்ன ஞானம் உள்ளவனை குறித்ததாயிருக்கவேண்டும். ஐயா அப்படியுமுண்டோ? ஆனால் சாஸ்வத ஞானம் பெற்றவனாயினும் லோகவியவகாரத்திலிருப்பது விரோதமன்று. ஜனகன் ஞானத்துடனும் கன்மத்துடனு மிருக்கவில்லையா வென்பீர்கள். அவர்ஞானமார்க்கத்திலிருக்குங் காலையில் கர்மபந்தமில்லாமலே அதிலாழ்ந்த மனதையுடையவராயிருந்தார். பிறகு கன்ம காலத்தில் மகா கர்மடராயிருந்து ஆசாரங்களிலிருந்து கொஞ்சமேனும் வழுவாதிருந்திருக்கிறார். இதற்கு ஒரு உபாக்கியானஞ் சொல்லுகிறேன்.

யாஞ்ஞவல்கியர் என்ற ஓர் மகரிஷி அனேக ரிஷிகளுக்கும் ஜனகனுக்கும் வேதாந்த பாடம் சொல்லுவது வழக்கம். அப்படி அவர் ஒரு சமயம் பாடஞ்சொல்லிக் கொண்டிருக்கும்போது சிஷ்யர்களான மகரிஷிகளுக்கு குருவினிடத்தில் ஒரு அதிருப்தி உண்டாயிற்று. அதாவது இவர் மகா குருவாய் அபேட்சையில்லாதவராயிருந்தும் பிரதிதினம் பாடஞ் சொல்லும்போதெல்லாம் ஜனகனுடைய முகத்தைப்பார்த்தே சொல்லுகிறார். ஜனகன் ஒரு நாள் வராமலிருந்தால் அன்று நமக்குப் பாடம்கிடையாது. அவர் வந்து நாம் வராமலிருந்தால் அன்று பாடத்தை நடத்தி விடுகிறார். ஆசையற்ற இவர் நாம் ஒன்றுமில்லாதவர்களென்றும் ஜனகன் சக்கரவர்தி யென்றும் எண்ணிப் பட்சபாதமாய் அவரிடத்தில் பிரியமாயிருக்கிறாரென்று சொல்லிக் கொள்ள ஆரம்பித்தார்கள்.

அவ்வசனம் பரம்பரையாய் குரு காதிற் கெட்டவே ரிஷிகளுக்குண்டாயிருக்கும் கெட்ட எண்ணத்தை மாற்றுவதற்காக மாயையினுல் ஒரு நாள் பாடஞ் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது மிதிலையின் நான்கு பக்கங்களிலும் பயங்கரமான தீப்பற்றி எரிவது போல் உண்டுபண்ணிவிட்டார். அப்போது ரிஷிகளதைக் கண்டு திடுக்கிட்டு ஐயய்யோ நமது ஆச்சிரமம் போச்சுதே, தண்டம் போய்விட்டது. வஸ்திரம்போய்விட்டது. கௌபீனம் போய் விட்டது. என்றலறிக்கொண்டு நான் முந்தினேன் நீ முந்தினு யென்று ஓடி விட்டார்கள். அப்போது ஜனகனைப் பார்த்துப் பட்டணம் தீப் பற்றி எரிகிறது. நீ பேசாமலிருக்கிறுயே யென அதற்கவன் "மிதிலாயாம் ப்ரதீப்தாயாம் ந மே கிஞ்சித் ப்ரதஹ்யதே" மிதிலையெரிந்தால் எனக்கென்ன! எது யாருடையது! எல்லாம் ஒன்று தானென்றும் பேத ஞான மில்லாதவனுய் ஞானத்திலேயே மூழ்கினவனுப் குருவின் முக கமலத்திலிருந்து தன் முகத்தைத் திருப்பாதிருந்தான். பிறகு ஓடிப்போன ரிஷிகள் திரும்பி வந்துபார்க்கவே ஜனகன் யாதொருசலனமின்றி இருப்பதையும். பிறகு அந்தத்தீ மாயை யென்பதையும் நாம் எண்ணினதற்காக குரு செய்த கூத்தென்றும் தெரிந்து வெட்கித் தலை குனிந்து நின்றுர்கள்.

இப்படி ஞான பாகத்தில் மூழ்கினது போல் பகிர் வியாபாரத்தில் பிரவர்த்தித்து ராஜ்ய தந்திரத்திலும் கொஞ்சமேனும் வழுவாது தனது கன்மங்களை நடாத்திபிருக்கிறுர். ஆனுல் தான் ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையில் கன்மத்தாலும் சித்திபெறலாம் என்று சொல்லி அதற்கு உதாரணமாய் "கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய:" கன்மத்துடனிருந்தும் ஜனகன் முதலியவர்கள் சித்தி பெற்றுர்கள். என்று அவனைப் புகழ்ந்தார். அது போல் நாமும் இருக்கிறேமென்றால் நமக்கு அப்போது யாதொரு ஆக்ஷேபணையு மில்லை. ஞானம் வந்த பிறகுகன்மத்துடனிருப்பதும் க்ஷத்திரிய ஜாதிக்கு உறியது என்பது ஓர் ரகசியமாதல்பற்றி அவ்விதம் பிராமண ஜாதி இருக்கிற தென்பதும் பிசகு தான்.

ஆகவே இவ்வித மில்லாது கேவலம் பிர்ம ஞானம் பெற்றவனென்றுமட்டிலும் அர்த்தங்கொள்பவர்களுக்கு இந்த சுலோகம்

போலேற்பட்டிருக்கும் கோடானு கோடி வசனமும் **பிரயோசனத்** திற்குதவாதென்றெண்ணுங்கள்.

இன்னும் நீங்கள் உங்களுடைய ஆதாரம் நிறைவேறுவ தற்காக வேதங்களில் பிராமணன் மேலென்றும் மற்றவர்கள் கீழென்றும் ஆதாரம் கூறப்படவில்லை யென்று சொல்லிவிட்டுப் பிறகு ஸ்மிருதிகளிருக்கிறதே என்றவாசங்கையை நீங்களே கிளப்பிக் கொண்டு அதற்கு ஸ்மிருதி ஆதாரமில்லை யென்றும் அதனாலது பிரமாணமாகா தென்றும் ஒரு விஷயம் சொல்லிப் பிறகு அது மகரிஷிகளால் அரசர்களுக்குக் கட்டுப்பட்டு இயற்றப் பட்டமையாலும் அவ்வக் காலத்திற்குத் தக்கபடி இயற்றப்பட்ட சட்டமென்றும் அதனால் அது அவ்வளவாக இவ்விஷயத்திற் பயன்படாதெனவும் பிறகு அவர்கள் நல்ல ஞானிகளானதால் அவர்களது வாக்கு வீணாகாதென்று அவர்களின் மரியாதையைக் காப்பாற்றவேண்டி அதிலும் பிர்ம ஞானம் பெற்றவனே பிராமண னென்ற தாத்பர்யத்தை அடக்கி வைத்திருக்கிறார்களென்றும் சொன்னீர்கள்.

ஆகா! முதலில் சுருதி ஆதாரமில்லை யென்று சொல்லி விட்டுப் பிறகு அரசர்களுக்குக் கட்டுப்பட்டுச் செய்தார்க ளானதால் அவர்களது வசனம் பிரமாணமாகா தென்று சொல்லி விட்டீர்கள். பிறகு தயவு வந்து அவர்களைத் தூக்கியும் வைத்தீர் கள்.

நமது முன்னோர்களிடத்தில் உங்களுக்கு எவ்வளவு தயவு அவர்களுடைய குற்றத்தை முதலில் தடபுடலாய்ச் சொல்லிவிட்டு உடனே மறைத்து விட்டீர்களே! நல்லது இங்கு ஒரு சமாதானஞ் சொல்லி உங்கள் சிரமத்தை நீக்குகிறேன்.

நமது முன்னோர்களிடத்தில் நீங்கள் கட்டின முட்டாள் தனம் வராது: ஏனெனில் உங்களுடைய அபிப்பிராயப்படியே பாருங்கள்; அவர்கள் அரசர்களுக்குக்கட்டுப்பட்டுச் செய்திருந்தால் அப்போதவர்கள் அரசனை உயர்த்தியும் தங்களைத் தாழ்த்தியுமே கூறியிருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் கட்டுப்பட்ட

வர்களென்று சொல்லமுடியாது. அந்த ரிஷிகளோ தாங்கள் தான் மேலென்றும் தங்களையே எல்லோரும் வணங்கவேண்டு மென்றும் எழுதி விட்டார்கள். அப்படி அரசர்களும் கீழ்ப்படிந்து நடந்து கௌரவத்தை அடைந்திருக்கிறார்கள். இன்னும் அரசர்களது ஆக்ஞையாகச் செய்திருக்கும் பக்ஷத்தில் இன்ன மகா ராஜாவின் கட்டளைப்படி நான் இந்த ஸ்மிருதியைச் செய்யப்போகிறேன்; அல்லது செய்தேனென்றாவது சொல்லவேண்டாமா? அப்படி நிபந்தனக்கிரந்த மென்று சொல்லப்படுகிற ஸ்மிருதிகளில் அனேகமாய்க் கிடையாது.

மற்றும் அவ்வக்காலங்களுக்குத் தக்கபடி ஏற்பட்ட சட்டம் என்றீர்கள்? நீங்கள் பார்த்த தர்மசாஸ்திரங்களெவை? அவைகளின் பெயரென்ன? ஒன்றிலாவது அந்தந்தக்காலங்களை மட்டும் குறித்துச் சொல்லப்படுகின்றதா? அப்படி இல்லை; மற்று? வெகு கற்பகாலமும் நீடித்திருப்பதாகப் பரமகருணையுடன் வரப்புகும் கலிமகாராஜனின் ஆக்ஞையையும் அதிலவதரிக்கப்புகும் ததீசி மகரிஷியின் சாபத்தைப்பெற்ற மகாபிராமணர்களின் அவதாரமகிமையையும் பற்றிச் சவிஸ்தாரமாய்க் கூறியிருக்கிறார்கள். அவர்கள் எதிர் பார்த்த ஒரு காரியங் கூடத் தப்பி நடக்கவே யில்லை. அதில் முதன்மையாய்.

"ஸர்வே ப்ரஹ்மவதிஷ்யந்தி ஸம்ப்ராப்தே து கலௌ யுகே।
நாநுதிஷ்டந்தி மைத்ரேய சிஸ்நோதரபராயணா:"

கலியுகம் வந்துவிட்டால்எல்லோரும்வேதாந்தம்பேசுவார்கள். ஆனால் அப்பேச்சு வயிற்றுத்திரத்திற்காகவும் இன்னொன்றிற்காகவுமேதவிர அனுஷ்டானத்தி லிருக்க மாட்டாது என்று விஷ்ணு புராணத்தில் சொன்ன ஒருசுலோகம் நமக்குப் போதாதா? நாம் இப்போது அதை விட்டுக் கொஞ்சமேனும் வழுவி நிற்கிறோமா? பாருங்கள்; இப்படியெல்லாம் கலி மகிமையை விசேஷமாய் ஒவ்வொன்றிலும்கூறியிருக்க, அக்காலத்திற்குத்தக்கபடி ஏற்பட்ட சட்டமென்று ஒருபோதும் சொல்ல முடியாது. அவர்களுடைய அபிப்பிராயம்

அனேக காலங்களுக்கு ஒத்திருக்குமே தவிர கேவலம் அற்ப காலத்தை உத்தேசித்துச் செய்திருக்மாட்டார்கள் என்பதை நிச்சயமாய் நம்பவேண்டும்.

லோகோபகாரத்திற்காகவே ஒவ்வொருமகரிஷியும் ஒவ்வொரு ஸ்மிருதியை வெவ்வேறிடங்களிலிருந்து இயற்றியிருந்தும் அது மாறுமல் ஒரே அபிப்பிராய முள்ளதாய் இருக்கும் காரணத்தைச் சற்று நிதானியுங்கள்: அவர்களுடைய ஞானம் ஒருகாலமும் குன்று தாகையாலும் "[illegible]" சுருதியை பகவானது அனுக்கிரகத்தால் பார்க்கிறார்கள் அதில் கண்டஅர்த்தத்தை அப்படியே நினைத்து எழுதுகிறார்கள் என்றும் சொல்லியிருப்பதால், எக்காலத்தும் குன்றாத தர்மங்களை ஈசனது கட்டளையால் மட்டும் அடைகிறார்களே தவிர தனது புத்தியினால் அவர்கள் ஒருவனுக்குக் கட்டுப்பட்டுச் செய்தார்களென்று ஒருபோதும் எண்ணவேண்டாம். சுதந்திரர்களான அம்மகான்கள் ஒருவனுக்குங் கட்டுப்படார்கள். தனது ஆஞ்ஞையை எவனுவதொருவன்மீறினால் அவனைப்படுத்தும்பாடு யாரால்சொல்லமுடியும் യോ ബ്രഹ്മാണം വിദധാതി പൂർവം യോ വൈ വേദാംശ്ച പ്രഹിണോതി തസ്മൈ തം ഹ ദേവമാത്മബുദ്ധിപ്രകാശം മുമുക്ഷുർവൈ ശരണമഹം പ്രപദ്യേ॥ எவர் முதலில் பிர்மாவைசிருஷ்த்தாரோ எவர் அவர்க்கு வேதங்களை முதலில் கொடுத்தாரோ என்ற உபநிடதப்படி இவரது முகத்திலிருந்து வருவதுதான்பின்றொடர்ந்து வருகிறதே தவிர ஒன்றும் ஸ்வதந்திரப்ரவர்த்தியுள்ளதல்ல ஆனதால், இதிலும் உங்களுக்கனுகூலமில்லை. இதனால்15வதுகேள்விக்கு பதில் ஏற்பட்டது.

பிராமணன் என்ன தீய தொழில் செய்தவனாயினும் அவன் பிராமணனென்றும் மற்று நற்றொழில்களையே செய்பவன் எச்சாதியோனாயினும் அவன்சூத்திரனென்றும்10வது கேள்வியொன்று கேட்டீர்கள். இதில் வேதியன் அநியாயமாய்த் தீயத்தொழில்களையே செய்தால், அவன் பதிதனாவான் என்று நமது சாஸ்திரங்களிற் கூறியவாறு அவனையாம் நமது வியவகாரங்களிலிருந்து விலக்கிவிடு

கிறோம். ஆனால் அவன் பதிதனென்றும் சண்டாளசமனென்றும் வைததே தவிர அவனைச் சண்டாளர் தெருவில் சேர்த்து விடவேண்டுமென்றும் அவர்களுடன் அவன் சம்பந்தங்களும் செய்து கொள்ளலாமென்றும் சொல்லாமல் அவனுக்குக் கிராமத்திற்கு வெளியே ஒரு தனிவசதியேற்படுத்தி அதில் வைக்கும்படிதான் சொல்லியிருக்கிறது. அப்போதும் அவனை மனந்துணிந்து சண்டாளனோடு சம்பந்தம் செய்துகொள் என்று சொல்லவே யில்லை. அவன் பிராமணன்தான். அவன் என்ன கெட்டாலும் ஐயோ! இவன் பிராமணனாய்ப் பிறந்தும் கெட்டகன்மங்களாற்கெட்டானேயென்று கூறுவார்களே தவிர, இவன் சண்டாளன்தான் என்று சொல்லவேமாட்டார்கள். ஆதல்பற்றியே ஔவையும், "கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே" என்றாள். இதற்கு திருஷ்டாந்தம் ஒன்று பாருங்கள்.

நற்சாதிக்குதிரையை ஒருமனிதன் சம்பாதித்தான். அதைக் கிரமமாய் வைத்துக்கொள்ளவேண்டியரீதியில்வைத்துக்கொள்ளாததினால் அடிக்கடி வியாதிநேரிட்டது. அப்போதைக்கப்போது ஔஷதங்களால் சுகப்படுத்தினான். இப்படியிருக்கும்போது அதற்குப்பெரு வியாதி நேரிட்டது. ஔஷதத்தினாலும் சாந்தப்படவில்லை. குதிரையும் வரவர மெலிந்தது. அப்போததைப் பார்த்து ஒருவன் பரிதாபத்துடன் ஐயோ! இது முன்னிருந்தநிலைமை யென்ன? இப்போது நாயாய்ப்போய்விட்டதே என்றான். ஐயா! இந்த நாய் வீடுகாக்க உபயோகமாகுமா? வேட்டைக்குத்தான் உதவுமோ? ஒருபோதுமது நாயாகாது. குதிரை குதிரைதான். ஆனால் அது ஈனதசையை மட்டிலுமடைந்தது. அதுபோல் பிராமணன் என்ன கெட்டாலும் பிராமணன்தான். கன்மத்தைத்தான் விட்டான். உத்தமமான கன்மங்களைச் செய்தால்பிராமணோத்தமனாவான். அதமத்தொழில்களைச் செய்தால் பிராமணாதமனாவான். ஆதல்பற்றிபிராமணியத்திலிருந்து வழுவி க்ஷத்திரதர்மத்தைக்கைக்கொண்டபரசுராமர்முதலியவர்களை நாடகங்களில் நிந்தையாய்ப் பேசுமிடங்களில் பிராமணாதமனென்ற அர்த்தமுள்ள "பிர்மபந்து" என்ற பதத்தினலழைத்திருக்கிறார்கள். பாரதம் ஆதிபர்வத்தில் 142 வது அத்தியாயத்தில் பீஷ்மரிடம்

தனது விருத்தாந்தத்தைச் சொல்லுங்காலத்தில் துரோணசாரியார் தாம் பிராமணனுயிருந்து க்ஷத்திரியதர்மம் பூண்டதால் பிராமணர்கள் தன்னைத் தள்ளிவிட்டார்கள் என்று அவிவாஹோ வம்ராவி வெஹ்ரவ்ஜிஜிஹேதாமஹிஜிவிதாவலெ முற்காலத்தில் நான் பிராமணர்களால் தள்ளப்பட்டும், நிந்திக்கப்பட்டும் வசிக்கிறேனென்கிருர். ஆனல் அப்போதும் அவர் பிராமணன்தான். அதனுல்தான் அரசர்கள் அவரை பிராமணனுகவே உபசரித்திருக்கிருர்கள். ஆதல் பற்றியேதர்மசாஸ்திரத்தில், வித்யா தபோஹ்யாம் ஹீநஸ் ஜாதிப்ராஹ்மண உச்யதே வித்தை தபஸ் இவைகளில்லாத பிராமணன் ஜாதி பிராமணன்; அதாவது ஜாதியினுல் மட்டும்பிராமணன் என்றுர். அப்போதும்; அவன் பிராமணனில்லையென்று சொல்லவில்லை. இது போல் தன் தன் ஜாதிப்படி அனேக நற்குணங்களையே செய்யும் சூத்திரனை யாம் உபசரிக்கலாம். மரியாதை செய்யலாம். இவன் சூத்திரனுகிலும் இவனதாசாரத்திற்கு விரோதமின்றி அனேக நற்குணங்களை அனுஷ்டிக்கிருன். இவனது குணங்கள் பிராமணனிடத்திலுமில்லையே அவனெல்லாம்பிராமணனு? இவன்தான்பிராமணன் என்று ஒருசமயம் வாயால்சொன்னபோதிலும் அவனை நமதுபந்தியில்வைத்துச்சாப்பிடும்படியும் நமது புத்திரியை விவாகஞ் செய்துகொடுக்கும்படியும்நமது பிதுருதினத்தில் அவனைநிமந்திரணபோஜனத்திலிருக்கும்படியும், செய்வது நியாயமா? எல்லாமொன்று தானென்று மனந்துணிந்து கதறும் நீங்களும் அப்படிச்செய்ய முயலுவீர்களா? அப்போது நமது முன்னேர்களினிரத்தம் கொஞ்சமேனும் நம்தேகத்திலிருக்குமாதலால், அதுசகிக்குமா? ஆனதால் இந்த வீண்வாதத்தை இனியேனும் பேசாமல் உண்மையை அறிய முயல வேண்டியாதலால் நியாயவழியில் வழிபடுங்கள்.

இன்னென்று உங்களை விசாரிக்கின்றேன். நமது வேதங்கள் கர்மகாண்டம், ஞானகாண்டமென இருவகைப்பட்டதில் உங்களுக்குச் சந்தேகமில்லையே? அதில் முதற்பாகமாகிய கர்மகாண்டத்தில் அழகாய்ப்புகழ்ந்து கூறுவதும் பிராமணனுக்கு முக்கியமாயும் சர்வோத்தமுமான யாகத்தைச் செய்வதில் கொலையென்றும் பிசகென்றும் அப்படி யாகத்தைச்சொல்லும் வாக்கியங்கள் பிசகு அல்

லது அதற்கு அர்த்தம் அப்படியில்லை யென்றும் பௌத்தமதத்தில் முழுமையும் முழுகிக்கொண்டு ஏராளமாய்ப் பேசும் நீங்கள், எவ்விதமாக ஜாதி எல்லாம் ஒன்று என்று சொல்லத் துணிந்தீர்கள்? பிரதிதினமும் ஆயிரக்கணக்கான ஆடு முதலிபவைகளைக் கொன்று தின்னும் சூத்திரர்களோடு கலந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறீர்களோ? இது நீங்கள் தலைபிட்டுக்கொண்ட மதத்திற்கேற்குமா? இதனால் நீங்கள் வேண்டுமென்றுஜாதியைக்காரணமின்றித்தொலைக்கவந்தவர்களே தவிர வேறில்லை. 𑌅𑌹𑌿𑌂𑌸𑌾 𑌪𑌰𑌮𑍋 𑌧𑌰𑍍𑌮𑌃 ஹிம்சைசெய்யாமலிருப்பதேமேலான தர்மம் என்று இதொன்றையே நீங்கள் பிரமாணமாய்க்கொண்டவர்களில்லையா? இதை மனதில் எப்போதும் வைத்துக்கொண்டீர்களானால் ஸ்வப்பனத்திலாவது மாமிசம் தின்று ஜீவிக்கும் சூத்திரர்களோடு சேரத்தலைப்படுவீர்களா? ஆரியகுலத்திற் பிறந்தவர்களே! இவைகளெல்லாம் நமது குலப்பெயருக்கடுக்கா. ஆதல்பற்றி இனிமேலாவது நீங்கள் இம்மார்க்கத்தில் பிரவேசியாமல் நமது முனனோர்களது மகிமையைச் சற்றுச் சிந்தியுங்கள். இனி உங்களுக்கு ஆதாரமாய்ச் சொல்லிக்கொண்ட 25வதான தர்மவியாதன் சரித்திரத்தைச்சற்றுக் கவனிப்பாம். நீங்களே தர்மவியாதனது சரித்திரத்தை அநேகமாய் உரைத்துவிட்டபடியால், யாமும் அதைத்திருப்பவேண்டாம். அதிலுள்ள முக்கியாம்சத்தை மட்டிலும் கவனிப்பாம்.

கௌசிகனென்ற ஓர் பிராமணன் தன் தபோ மகிமையினால் தனக்கு அபசாரம் செய்த கொக்கை எரித்துப்பிறகு பிக்ஷைக்காக வேதியனகத்திற் புகுந்து பிக்ஷை வாங்கப்போய் அம்மாதினிடமுபதேசம் பெற்றானென்றீர்கள். பிறகு அம்மாது அவனுக்குப் பிராமணனென்று ஏறியிருக்கும் அகங்காரத்தைத் தணிக்க விரும்பியவளாய் வேடனிடத்திலனுப்பினாளென்றும் சொன்னீர்கள். இதனுண்மை இவ்விதமல்ல; இதை அறியவேண்டிய வழி இது.

இந்த ரிஷி அந்த ஸ்திரீயினிடத்தில் உபதேசஞ்செய்து கொள்ளவேண்டுமென்றும் பரமகுரு இவளென்றும் குருகுலத்தையடைவோமென்றும் போனாரில்லை; அவளும் இவருக்குத்தெரி

யாத தர்மங்களைச் சொல்கிறேனென்று சொன்னாளுமில்லை. அவள் சொன்ன தர்மத்தின் நுட்பத்தைக் கண்டு ரிஷி வியந்தாருமில்லை. மற்று; இவர் அம்மாதைக் கடிந்து பார்த்ததற்காகநானுங்கொக்கில்லை யென்று திடீரென்று சொன்னஓர் வார்த்தையைக்கேட்டு மட்டிலும் இந்த ஸ்திரீ ஜாதிக்கு இந்த ரகஸ்ய சமாசாரம் தெரிந்த காரணம் யாதென வியப்படைந்தார். பிறகு அவள் சொல்ல ஆரம்பிக்கும் போது இவருக்குக் கோபம் வேண்டாமென்று சொல்வதற்காகமட்டிலும் க்ரோதஹ் ஸ்ரீரஸ்ஸ்தஹ் என்று ஆரம்பித்தாள். இது உபதேசமா கவனியுங்கள்.

லோகத்தில் ஓர் மகா பிராமணன் ஒருபாமரனை பார்த்துக் கடிந்து கோபித்தால் அப்போதவன் ஐயா! தாங்கள் பிராமணோத்தமராயிருந்தும் இப்படிக் கோபிக்கலாமா என்று மிகவும் வணக்கமாய்க் கேட்டு அவர் கோபத்தைத் தணித்தால் இதுஒரு உபதேசமா? அதுபோல் பிரகிருதத்திலும். பிறகு ஸ்திரீயைப்பார்த்துநீஎவ்விதம் இவ்விரகஸ்யத்தை அறிந்தாயென்றுகேட்டதில்அப்போதவள் தான் வேதசாஸ்திரங் கற்றதாகவாவது தபஸ் செய்ததாகவாவது எல்லாரும் ஒன்றுதானென்று பிர்ம்மஞானம் பெற்றதாகவாவது கூறினளில்லை. மற்று?நான்என துபர்த்தாஒருவரைத்தானறிகிறேன். எனக்கு அவரே தெய்வம். அவருக்கும் மேலான தெய்வம் உலகில் ஒன்றிருப்பதாய் நான் மூக்காலங்களிலும் கண்டேனில்லை. அதனால் அந்தப்பதி தெய்வத்தின் அனுக்கிரகத்தினாலேயே எல்லா மறிய வல்லமையுண்டு என்று தனக்கு ஏற்பட்ட தர்மத்தைச்சிரத்தையாய் நடத்துவதாய்ச் சொல்லிப் பிறகு எவனொருவன் அவனவன் ஜாதிக்கேற்பட்ட தொழிலை மட்டிலும் யாதொரு குறைவின்றி நடத்துவானோ அவனுக்குத்தான் சகல பாக்கியங்களும் கிடைக்குமென்பதை நன்கு விளக்கிக் காட்டவேண்டி, அவள் அந்தத்தர்மவியாதனிடத்திலனுப்பினளே தவிர அவனிடமும் உபதேசத்திற் கனுப்பினளில்லை. அங்கு போனவுடன் அவன் இந்த பிராமணனை உடனே அடைந்து நமஸ்கரித்து தனக்குத் தர்மநுட்பத்தின்விஷயம் தெரிய வந்த காரணத்தை அறிவிக்கிறவனாய்த் தனது ஜாதித்தொழிலை விடவேயில்லை; ஆனதால்தான் எனது பிதா பிதாமகன் முதலாயி

ஞோர் தொன்று தொட்டு நடாத்தியகன்மமே நமக்கும் மேலானது என்று ஜாதியாசாரத்தைப்பற்றி விசேஷமாய்ச் சொல்லியும் அந்த மகரிஷி ஐயா! எப்படியாயினும் உனக்கு இந்த ஹிம்சைத்தொழில் வேண்டாமெனவே அதற்கவன் ஐயா? இம்சை என்பது எதில்தான் இல்லை, பார் என்று எடுத்து விஸ்தாரமாய் உரைக்கும் விஷயத்தைக் கண்ணோக்குங்கள். அப்புறம் இதிலுள்ள சம்சயம் வெளியேறும். அப்படி எல்லாம் அவன் விசேஷமாய் எடுத்துச்சொல்லி ஜாதி முறைமையை விடவே கூடாது என்று வற்புறுத்தி 𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍋𑌵𑌿𑌗𑌣𑌃𑌪𑌰𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍇 𑌨𑌿𑌧𑌨𑌂 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 𑌪𑌰𑌧𑌰𑍍𑌮𑍋𑌭𑌯𑌾𑌵𑌹𑌃॥ 𑌸𑌹𑌜𑌂𑌕𑌰𑍍𑌮𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯𑌸𑌦𑍋𑌷𑌮𑌪𑌿𑌨𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍। 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌹𑌿 𑌦𑍋𑌷𑍇𑌣𑌧𑍂𑌮𑍇𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌰𑌿𑌵𑌾𑌵𑍃𑌤𑌾𑌃 ॥ தனது ஜாதிக்கேற்பட்டுள்ள தர்மம் கெட்தாய் இருந்தாலும் அதை அனுஷ்டிப்பதுதான் மிக்க நலம். தனது தர்மத்திலிருந்து உயிர் துறப்பது நலம். இதர தர்மம் பயத்தை விளைவிக்கும். ஓ அர்ஜுனா! தனக்கேற்பட்ட கன்மம் தோஷத்தோடு கூடியதாயிருந்தாலும் அதை விடக்கூடாது. எல்லாக் காரியமுமே புகையினால் அக்னி மூடப்பட்டிருப்பதுபோல் தோஷத்தினால் மூடப்பட்டிருக்கும் என்று கீதையில் கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்த வாக்கியத்திற்கு ஒரு பாஷியம் செய்ததுபோல் சொல்லி முடித்திருப்பதைப் பாருங்கள்; அவ்வளவு தர்மத்தைச் சொன்னது போதாதென்று பிறகு அந்த மகனை வேடன் அந்த பிராமணனை தன்னகத்திற்கிட்டுக்கொண்டு போய்த் தன் தாய் தகப்பனையும் அவர்களுக்குத் தான்செய்யும் சுச்ரூஷையின் முறைமையையும் விசேஷமாய் எடுத்துச் சொல்லிப்பிறகு, நீர் இவ்வளவு ஞானியாயிருந்தும்தபசும் வேதாத்தியயனமுமே பிராமணதர்மத்திற்குப்பெரிதென்றுநினைத்துத் தாங்கள் வெளியேறியீது நியாயமே யாயினும்எல்லா ஜாதியாருக்கும் பொதுவான தர்மமாயும் மகா மேன்மை பொருந்தியதுமான தாய் தகப்பன்மாருடைய சுச்ரூஷைதான் முதன்மையானதென்பதைக் கொஞ்சம் மறந்துஅவர்களது அனுமதிஇல்லாமல் வெளியேறிவிட்டீர்கள். அக்குற்றத்திற்காகத்தான் நீங்கள் ஸ்திரீயினிடத்திலும் என்னிடத்திலும் இருப்பிடம் வந்து தர்மம் கேட்

கும்படி ஆயிற்று. ஆனதால் தாங்கள் இந்த க்ஷணமே உங்களுடைய இருப்பிடம் போய்த்தாய் தகப்பனுக்குவேண்டிய சுச்ருஷையை முறையாய்ச் செய்து அவர்களின் மனதைக் குளிரச் செய்ய வேண்டுமென்று மிகவணக்கத்துடனும் மரியாதையுடனும் போகச் சொல்லும்போது, அவ்வேதியன் வேடனின் சாமர்த்தியத்தைக் கண்டு வியப்படைந்து, நீ வேட ஜாதியானென்று நான் நம்பவேமாட்டேன். உனது உண்மை இன்னதென்று விளக்கிச் சொல்லவேண்டும். உண்மையாய் நீ வேடஜாதியிற் பிறந்தோனாயின் உனக்கு இவ்வளவு நுட்பமான தர்மமும் சாமர்த்தியமும் கிடைக்க நியாயமில்லை. ஆனதால் உண்மையைச் சொல்லென்று கேட்க, வேடன் சொன்னதாவது, —

ஓ பிராமணோத்தமரே! நான் முற்காலத்தில் வேதியகுலத்தில் பிறந்து சமஸ்த வேதசாஸ்திரங்களையும் கற்றுணர்ந்து அதன் முறை வழுவாது கர்மத்தை நடாத்திக்கொண்டு வந்தேன். அக்காலத்தில் அத்தேசத்தரசனிடத்தில் எனக்கு விசேஷநேசம் ஏற்பட்டது. அவனதனால் என்னை விட்டு அரை நிமிஷமும் பிரிந்திருக்கச் சகியாமலிருந்தான். அப்படியே நான் அவன்பக்கத்திலிருந்து வரும்போது அவனுடைய பழக்கத்தினால் அஸ்திரவித்தை ஒன்றுமட்டிலும் தெரியாதிருப்பானேன் என்று அதையும் கற்றுக்கொண்டேன். பிறகு ஒருநாள் அவன் வேட்டைக்குப் புறப்படும் காலையில் என்னையும் கூட அழைத்துச் சென்றான். அப்போது நான் "இரும்பெடுத்தவன் கையும் துரும்பெடுத்தவன் கையும் சும்மா இராது" என்ற பழமொழிக்கிணங்க சும்மா இராமல் அஸ்திரத்தை எடுத்து ஒரு மானை யடிக்கிறேன் பாரென்று வெகுதூரத்தில் குனிந்து குடத்தில் நீரெடுக்கும் ஓர் மகரிஷியை அறியாமல் மானென்று அடித்துவிட்டேன். உடனே அவரும் அடியினால் கீழேவிழுந்துவிட்டார். நானும் சந்தோஷத்துடன் நான் அடித்த மான் கீழே விழுந்துவிட்டதென்று அருகில் போய்ப்பார்த்தேன். அங்குபாணத்தாலடிபட்டுப் பதைத்துக்கொண்டிருக்கும் மகரிஷியைக் கண்டேன். உடனே நடுக்கமுற்று ஒன்றும் தோன்றாதவனாய்க்கைகட்டி நின்றேன். அப்போது அம்மகான் வெகு கோபத்துடன் அடே பாபி! நிரபராதி

யான என்னை அடித்தாயே? நீ பிராமணனாயிருந்து இக்கொடுந்தொழில் புரிந்ததனால் ஈனஜாதியான வேடஜாதியிற் பிறக்கவேண்டும் என்று சபித்தார். நானும் அஞ்ஞானத்தினால் செய்த குற்றத்தை மன்னித்தருளவேண்டுமென்று வணங்கவே அவரும் இரக்கமுற்று அப்பா! நான் சொன்ன வார்த்தை வீண் போகாது. ஆனதாற் கொஞ்சகால மதிலிருந்து பிறகு உத்தமஜாதிக்கு வா. உனக்கு அவ்விடத்திலும் இந்த ஜாதியிலுள்ள ஞானமும் ஞாபகமுமிருக்கட்டும் என்று சொல்லி உயிர் துறந்தார். ஆனதால் இந்த ஜாதியை யடைந்தபோதிலும் அதே ஞானத்துடனுமிருக்கிறேன் என்று சொன்ன வார்த்தையைக்கேட்டு அவ்வேதியன் அப்பா வேடனே! நீ பிராமணன்தான். உன்னிடத்தில் ஞானம் முதலிய குணங்களிருக்கின்றன. எவனிடத்தில் இக்குணங்கள் இல்லையோ அவன் சூத்திரன் தானென்று நான் நினைக்கிறேன் என்றான். இவ்வசனத்தைக் கேட்ட சர்வஞ்ஞனான அந்த வேடன் ஆம்இருக்கட்டும்; நான் இந்த ஜாதியில் தான் நிற்பேன். இதுதான் நியாயமென்று சொல்லிவிட்டு அவன் அதிலேயே நின்றானே தவிர பிராமணியத்தில் தாண்டினதாய்ச் சொல்லப்படவில்லை. மற்றும் இதில் ஒரு நுட்பம் கவனிக்கத்தக்கது. அம்மாது அவனுக்கு தர்மத்தைச் சொல்லி அடிக்கடி நமஸ்கரித்து வணக்கத்துடனிருந்தாளென்று கூறப்பட்டிருக்கிறது. அப்படியே அவ்வேடனும் அனேக நமஸ்காரங்களுடன் உபசரித் திருக்கிறான். இதினாலேயே பிராமண ஜாதி மேலானதென்று ஏற்படவில்லையா?

உங்களது சித்தாந்தப்படி கர்மமே மேல் கீழென்பதற்குக் காரணமாயிருப்பின் அவ்வளவு தர்மங்களை யறிந்த ஸ்திரீயும் வேடனும் இவனை வணங்கியிருக்கமாட்டார்கள். அப்படி அவர்கள் வணங்கினபோதும் பிராமணனாவது தடுத்திருப்பான். இரண்டுமில்லை.

இன்னொன்று கவனியுங்கள். ஜாதியில் மேல் கீழ்படி கிடையாதென்பது உண்மையாயிருந்தால் சபித்த மகரிஷி வேடஜாதியிற் பிறவென்று சபிப்பானேன்? ஞானமொன்றிருந்தால் எல்லாமொன்று தானென்பது ரிஷிக்குத் தோன்றாமல் போய் விட்டதா? அந்தப்பிரா

மணனும் நான் நினைக்கிறேனென்றானே தவிர அப்படியே செய்ய வேண்டுமென்றும் அதற்கு சாஸ்திரமிருக்கிறதென்றாவது சொன்னனா? அதுவுமில்லையே? முற்காலத்தியதும் வேத சம்மதமுமான குரு சிஷ்யக்கிரம மின்னதென்றும், உபதேசக்கிரம மின்னதென்றும் அதைச்செய்பவனுடைய யோக்கியதை இன்னதென்றும் அதைப் பெற்றுக்கொள்பவன் நிலைமை இன்னதென்றும் கொஞ்சமும்தெரிந்து கொள்ளாமலிருக்கிறீர்களென்பதை இந்த உபாக்கியானத்தில் வியக்தமாய்க் காண்பித்து விட்டீர்கள். ஆகவே உங்கள் சித்தாந்தம் இதிலெல்லாம் கரையேறுதென்றே நம்புங்கள்.

இனி உபநிஷத் பிரமாணம் கூறுவதாய் 23 வதான சாந்தோக்யோபநிடதத்தில் ஓர் விஷயம் சொன்னீர்களே ? அதை ஆராய்வோம். இந்த சத்திய காம ஜாபாலோபாக்கியானத்தினல் சத்தியத்தினல் பிராமணியம் பெற்றானென்றீர்கள். நல்லது இந்த உபாக்யானத்திலாவது இதற்கு முந்தி எங்கேயாவது இவன் சூத்திர ஜாதியிற் பிறந்தானென்றாவது அல்லது இதர எந்த ஜாதியிலாவது பிறந்தானென்றாவது கூறப்பட்டிருக்கிறதா? அல்லது குருவாவது நீ எந்த ஜாதியிற்பிறந்தவனானலென்ன; சத்தியம் ஒன்று சொல்லி விட்டதனல் உனக்கு உபநயனம் நடத்துகிறேனென்றாரோ? இரண்டுமில்லை. அவன் ஜாதியைப் பற்றிச் சம்சயப் படவில்லை. மற்று அப்பா! உனது கோத்திர மென்ன வென்று தான் கேட்டார். அப்படியே அவனும் கோத்திரம் தெரியாதென்று தாயார் சொன்னபடியே சொன்னன் என்றிருக்கிறது. அதைக் கேட்ட குருவும் நல்லது நீ சிறுவனாயினும் சத்தியம் சொன்னய். நீ யோக்கியனன சிஷ்யன். உனக்கு நான் உபநயனம் செய்கிறேனென்று சொன்னர். இதில் இவன் சத்தியம் சொன்னதினல் அந்த ரிஷியானவர் இவன் பிராமணன் தானென்று தீர்மானித்தாரென்றீர்களே அதில்லை. மற்று இவனை உபனயனத்திற்கு அருகமில்லாத சூத்திர ஜாதியாய் இருப்பானே என்ற ஓர் சம்சயத்தைமட்டிலும் அடைந்து அவனைக்கேட்டதில் அவன் உண்மைசொல்லவே இவன் அப்பிராமணன் இல்லை. உபனயனத்திற்கு யோக்கியமான ஜாதிதான்; ஏனெனில் பொய் சொல்வதென்பது சூத்திரஜாதி தர்மமென்று

தர்மசாஸ்திரங்களின் இருதயம். வஞ்சகமாய் ஒருவன் வந்திருப்பானாயின் அவன் ஏதாவது ஒரு கோத்திரத்தையும் சொல்லி விடலாம். அப்படிச் சொல்லாததனுலும் உபனயனர்கமான ஜாதிதானென்று தீர்மானித்தார். ஆகவே இதிலும் உங்களுக்குச் சௌகரியம் கிடையாதென்றே விடுங்கள்.

இன்னும் 24வதில் பௌராணிகர்கள் அபிப்பிராயம் கன்மமே மேலென்று ஒப்புக்கொள்ளுகிறார்களென்றும் பசு முதலான ஜாதி போலிருக்கும் பட்சத்தில் பிராமணன் அதே ஜாதியில்விவாகம் செய்து சந்ததி உண்டுபண்ணவேண்டுமென்றும் அப்படி இல்லையென்றும் சொன்னீர்கள். இதற்குச் சமாதானம்.

பிராமணன் மற்ற ஜாதிகளிலும் விவாகம் செய்துகொள்ளுகிறனென்றது . ஒரு பிரமாணமாகாது; பிராமணன் தனது கன்மத்திற்குத் தக்கபடி பிராமணஜாதி ஸ்திரீயைத்தான் விவாகம் செய்கிறன். அவளுக்குப் பெயர்தான் பத்நீ என்று வரும். அவளுக்குத்தான் கர்மாதிகாரம் உண்டு. பிறகு காமமிருப்பின் மற்ற மூவருணத்திலும் விவாகஞ் செய்யலாம்: அதிலுண்டாகும் புத்திரன் ஒருகாலத்திலும் பிராமணனுகான் என்று தான் அபிப்பிராயமே தவிர பிராமணன் மற்ற மூவருணத்திலும் விவாகஞ் செய்யத்தான் வேண்டுமென்ற தீர்மானமில்லை. ஆகவே பௌராணிகர்களபிப்பிராயம் இவ்விதமில்லையென்று இதையும் விடுங்கள்.

இனி உங்களது பிரமாணத்திற்கு ஜீவாதாரமான தாயும் மகா மேன்மை பொருந்தியதும் வேதபாகத்திற் சிறந்த உபநிஷத்துக்களிலொன்றுனதும் 26வது கேள்வியுமான வஜ்ஜிரசூசி உபனிடதத்திற்கு யான் சரியான பதில் கூறவேண்டும். இதைச் சரிவரக்கூறினல் மட்டும் தான் யான் சொன்ன கிழ்வாக்கியங்களும் வேரூன்றும். இல்லாவிடில் எல்லாம் பயனற்றதாகும். ஆனதால் இதிலும் என் புத்திக்கெட்டியவரை கூறுகின்றேன். இதில் பொறுமையுடனும் மத்யஸ்த புத்தியுடனும் சொல்லும்விஷயங்களை சரிவரக் கவனிப்பீர்களானல் அப்போது உங்களுக்கு எனது சொல் நியாயமெனப்புலப்படும். ஆதல்பற்றி சொல்லும் விஷயத்தைச் சற்று கவனிப்பீர்களாக.

அறிஞர்களே! ஓரிடத்தில் அர்த்த நிச்சயம் செய்யவேண்டு மாயின் முதலில் உபக்கிரம நியாயமென்பதைக் கவனிப்பார்கள். அதாவது ஆரம்பமும் முடிவும் ஒன்றாயிருக்க வேண்டுமென்பது தான். இது ஞாபகத்திலிருக்கட்டும்.

முதலில் இவ்வுபநிடதம் ஆரம்பத்தில் பிராமணன் க்ஷத்திரியன் வைசியன் சூத்திரன் என நான்கு வர்ணங்களுண்டு; அவைகளுள் பிராமணன் தான் மேலானவனென்று வேதங்கள் சொல்வது போல் ஸ்மிருதிகளாலும் சொல்லப்பட்டது என்றும் முடிவிலும் சுருதி, ஸ்மிருதி, புராணம், இதிகாசம் இவைகளுக்கு இதுதானபிப்பிராயம் என்றும் முடித்துவிட்டது.

இதில் உங்களதெண்ணம் இந்த பிராமணன் முதலியவர்ணங்களுள் பிராமணன் மேலானவனென்று எண்ணுகிறன். அது பிசகு என்பதை விளக்குவதற்காகவே இவ்வுபநிடதம் வந்ததென்று கூறுகிறீர்கள். இது முற்றிலும் பிசகு. ஏனெனில் இவ்வுபநிடதம் பிராமண ஜாதியை நிந்திக்க ஆரம்பித்ததா? பிர்ம விஷயமான பிரஸ்தாபத்திற் காரம்பித்ததா? இதுபூர்வகாண்டத்தைச்சார்ந்ததா? ஞான காண்டத்தைச்சார்ந்ததா என்பதை ஆராயவேண்டும்.— மற்றும்,

உபநிடதமென்பதே வேதங்களில் ஓர் பாகம்தான். அதுவேதங்களுக்கு விரோதமாய் ஒரு விஷயத்தையும் எடுத்துக்காட்டாது. அப்படி விரோதமாயிருந்தால் அது உபநிடதமாகாது. பிரகிருதத்தில் இது வேத விஷயத்தை நிந்திக்க வந்ததாய் எண்ணுகிறீர்கள். அது இல்லை; வேதங்களையே நிந்தித்தால் அது நமக்கு பிரமாணமாகுமா வென்று எண்ணுங்கள். இதுவோ வேதத்தைநிந்திக்கவந்ததில்லை. இப்படி இல்லாவிடில் வேத வசனங்களுக்குத் தக்கபடியே ஸ்மிருதிகளாலும் சொல்லப்பட்டது என்று அனுவாதம் செய்யமாட்டாது. மற்று, வேதங்களுக்கு விரோதமாய் இது ஏற்பட்டது என்று ஏற்றுக் கொண்டாலொழிய இதனுல் உங்களுக்கு உபயோக மேற்படாது. அப்படியாயின் எப்படி ஆரம்பிக்கவேண்டுமென்றால் வேதங்களும் ஸ்மிருதிகளும் பிராமணனை உயர்த்திச் சொல்கின்றன; அது பிசகு. அதை நம்பவேண்டாம். பிராமணனென்பவன் அடியில் வரும் லக்ஷணமுள்ளவன் தான் என்று சொல்லு

வேண்டும்.'' அப்படிச் சொல்லவோ இல்லை. ஆனால் ''அங்கு விசாரிக்கவேண்டும் என்று அடுத்தவாக்கியமிருப்பதினாலேயே வேதம் சொல்வது நியாயமில்லை யென்று சொன்னதுபோலாயிற்றென்பீர்களோ? அப்படியுமில்லை. இப்படி இருப்பின் முடிவில் 'சுருதி, ஸ்மிருதி, புராணம், இதிகாஸம் இவைகளுக்கு இதுதான் அபிப்பிராயமென்று முடிக்கமாட்டாது. முதலில் சுருதியையும் ஸ்மிருதியையும் பொதுவாய் நிந்தித்துவிட்டுப் பிறகு சுருதி ஸ்மிருதி புராணேதிகாஸங்களுக்கு இதுதான் அபிப்பிராயமெனக் கூறுதல் யாங்ஙனமொவ்வும்? ஆகவே இது பிராமணன் மேலென்பதை நிந்திக்க வந்ததென்று அர்த்தம் கொள்வது நியாயமில்லை. இது ஞானபாகத்திற் சேர்ந்ததால் அதைப்புகழ வந்ததென்று மட்டிலும் கொள்ளுங்கள். இப்படி அர்த்தம் செய்யும் போது நான் முந்திக் கூறியபடி க்ஷீரநீர ந்யாயத்தை ஒட்டிப்பார்த்தீர்களானல் எல்லாம் தெற்றெனவிளங்கிவிடும். இது ஞான்பாகத்திற் சேர்ந்ததென்பதற்கு ஓர் அடையாளம் பாருங்கள். முதலில் கிம் ஜீவ: கிம் தேஹ: கிம் ஜாதி: என்றிருக்கிறது. இது ஞானபாகத்தின் வழியென்றறியுங்கள். இவ்வளவினால் இவ்வுபனிடதத்தின் யோக்கியதை இதைச் சார்ந்ததென்று விளங்கி இருக்கும். ஆனாலும் உள்ளும் நுழைந்து அவ்வாக்கியங்களுக்கும் நீங்கள் கிரகித்த தாத்பரியம் முழுமையும் பிசகென்பதையும் காண்பிக்கிறேன்.

இப்போது இந்த உபனிடதமானது பிராமண ஜாதியை நிந்திக்கவரவில்லை யென்றும் இது வேதத்தை ஒத்ததென்றும் ஒப்புக்கொள்ளவேண்டி நேரிட்டது. ஆகவே'' சத்வாரோ வர்ணா: தேஷாம் வர்ணானாம் ப்ராஹ்மண ஏவ ப்ரதான இதி வேதவசனானுரூபம் ஸ்ம்ருதிபிரப்யுக்தம்'' என்று ஆரம்பித்ததினால் பிராமணஜாதி முதன்மையானதென்பதற்கு வேதத்தில் ஏராளமான பிரமாணமிருக்கிறதென்றும் அதை யொத்த ஸ்மிருதி ஒன்றும் பொய்யாகாதென்றும் பிரதிவாதியால் வாதிக்கு ஐயம் கூறப்பட்டது போல் நீங்களே ஒப்புக்கொள்ள நேரிட்டதென்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். இனி மற்றவாக்கியங்களைக் கவனிப்போம்.

இவ்வுபநிடதத்தின் கடைசிவாக்கியங்களை உற்று நோக்கின். இது ஞானபாகத்திற் சேர்ந்ததுதானென்று நன்றாய் விளங்குகிறது.

அறிஞர்களே! இதன் கடைசியில் சொல்லப்பட்டிருக்கும் லக்ஷணங்கள் முற்றுப்பெற்ற மகான்களை எத்தனைபெயர்களை தரிசித்திருக்கிறீர்கள். இத்தகைய லக்ஷணங்களையெல்லாம் கூறி இவைகளை இப்படியே அறிந்தவன்தான் பிராமணன். மற்றவன் பிராமணனில்லவே இல்லையென்கிறதே? இப்படியாகும்போது ப்ராஹ்மணோ த்யேதவ்ய: பிராமணன் வேதமோதல் வேண்டும், என்றிருக்கிறதே இத்தகைய ஞானி பிறகும் அத்தியயனம் செய்யவும் வேண்டுமோ? இன்னொன்று இங்கு கவனியுங்கள்.

உங்களெண்ணப்படி கீழ் கூறப்பட்ட லக்ஷண முள்ளவன்தான்பிராமணனெனில் இவ்வுபநிடத நடுவில் கௌசிகர் குசத்தினுதித்தார். வியாசர் தாசி மகன்என்பதாகவெல்லாம் சொல்லி இவர்கள் ஞானத்தால் பிராமணியத்தை அடைந்தார்களென்றீர்களே. அவ்வாக்கியத்திற்கு முற்றிலும் விரோதமேற்படாதா? ஏனெனில் வியாசர் வசிஷ்டர் முதலானவர்களுக்கும் இத்தகைய ஞானம் கிடையாது. அவர்கள் லோக வியவகாரத்திலுழன்று ராஜ்பதந்திரத்தையும் கவனித்திருக்கிறார்கள். இவர்களுக்கே இதிற் கூறப்பட்டபடி பிராமணியத்தில் சந்தேகமேற்படும்போது நம்மவர்களுக்குக் கேட்க வேண்டுமா. இத்தகைய ஞானத்துடனேற்பட்ட பிராமணனை உத்தேசித்தா சர்வேசுவரனது முகத்திலிருந்து வேதத்தின் பூர்வபாகமாகிய கன்ம காண்டமும் அதனை யொட்டிய ஸ்மிருதி புராணங்களும் பிரவர்த்தித்தன. இவைகளையெல்லாம் ஆழ்ந்தாலோசிப்போமேயாயின் இக்கலியின் மகிமையை விளக்க அவதரித்த இக்கலி மகாராஜனின் உத்தியோகஸ்தர்கள் செய்யும் மோசமே தவிர வேறல்லவென்பது சொல்லாமலே விளங்கும். இன்னொன்று இங்கு ஆலோசிக்கவேண்டும்.

பிராமணன் முதலிய ஜாதி யேற்றத்தாழ்வு உள்ளதாய்ஏற்படவில்லையென்பதல்லவா உங்களது கொள்கை. அப்படியாயின் இன்

னுக்கு பெயர்கள் ஏற்படக் காரணம் யாது? எல்லாம் ஒன்றாகவே இருக்குமென்றால் பிராமணனென்பவன் மேல் என்று வேதம் கூறு கிறது என்று உங்கள் உபனிடதம் முதலில் எடுத்துச்சொல்வா னேன். அதைச்சொல்லாமலே ஞானம் வந்தவன் பிராமணனென்றே சொல்லிவிட்டுப்போகலாமல்லவா. வேதங்களில் ஏற்றத் தாழ்ச்சிஇவ் விஷயத்திற்கூறப்படவில்லையென்று வேதம் முழுமையும் ஆராய்ந்து பார்த்த மகானுப் பேசுகின்ற உங்களுக்கு உங்கள் உபனிஷத்தே வேதங்களிலிருப்பதாய் ஒப்புக்கொண்டிருப்பதால் அவ்வாக்கியங் களிருக்கலாமென்று இனிமேலாவது நம்பக்கூடாதா? இதனால் அநாதி காலமாய் ஈசுவரனின் ஆக்ஞையினால் மேலான ஜாதியென்றும் கீழான ஜாதியென்றும் ஏற்பட்டிருப்பதை யனுசரித்து வேதங்கள் சொன்னதை நினைத்து உங்கள் உபனிடதம் தன் காரியத்தை நிலை நிறுத்துவதற்காக அதையே அனுவதித்துக்கொண்டு சொன்னதாய் அறியுங்கள்.

இன்னொன்று பாருங்கள். "தர்ஹி ஜ்ஞானம் ப்ராஹ்மண இதி சேத் தந்ந க்ஷத்ரியாதயோபி பரமார்த்ததர்சினோ அபிஜ்ஞா பஹவஸ்ஸந்தி" என்று சொன்னதினால் அப்படிப்பட்டவனும் பிராமண னென்றேற்றுக் கொள்ளப் படவில்லை யென்பதை நன்கு கவனி யுங்கள். அப்படிப்பட்ட ஞானமுள்ள ஜனகன் முதலியவர்களை பிராமணனென்று யாராவது சொல்லி இருக்கிறார்களா? அல்லது பிராமண ஜாதி நமஸ்கரித்து வணங்கினதாய்த்தான் சொல்லப்பட் டிருக்கிறதா என்று வேதங்களை ஆராய்ந்த நீங்களே சொல்லுங் கள்.

சர்வப்பிரசித்தமாய் மேலான பிராமண ஜாதியை உத்தமமெ ன்றெண்ணி யிருந்தோமே; அதற்குமேலு மொன்றிருக்கிறதாமெ ன்று தீவிரபக்தி உண்டாகவேண்டுமென்று பிராமணனை இறக்கிய துபோல் பேசின இவ்வுபனிடதத்தை உங்களுடையதென்று தட புடலாய் ஸ்தாபிக்க வந்து விட்டார்களே!

ஆனால் கிம்ஜீவ꞉ கிம்தேஹ꞉ என்றெல்லாம் கேட்கிறதே. அதன் பிகாரம் இப்போது, எதை பிராமணனெனக் கூறுகிற, தென்றொரு சம்சயம் உண்டாகலாம். இப்படியாயின் ஞானம் வந்த பிற்பாடு

எதைச் சொல்கிறீர்களென்று உங்களையே திருப்பிக் கேட்கிறேன். இது இருக்கட்டும்; நமது வீட்டில் நாம் பசுவென்று ஒரு மிருகத்தைக்கட்டிப்பால்கறக்கிறோமே. பசுவென்றாலெது. அதனது ஜீவனா? தேகமா ? ரத்தமா ? மாமிசமா ? காலா? முகமா? எல்லாம் கழுதை முதலிய மற்ற மிருகங்களுக்கும் சமானமாகவே இருக்கிறதே? இதற்குச் சரியான பதில் கூறுவீர்களானால் அப்போது பிராமணன் இன்னதென்று விளங்கிவிடும். இங்கு முக்கியமாய் ஒரு விஷயம் சொல்கிறேன். அதாவது பிராமணியம் என்பது சாதாரணமாய் இருவகைப்படும். ப்ரஹ்ம வேத்தீதி ப்ராஹ்மண: பிர்மத்தை அறிந்தவன் பிராமணனென்று கிரியையையொட்டிவந்ததொன்று. ப்ராஹ்மணோஜாதௌ என்று வியாகரணசூத்திரப்படி ஜாதிபிராமணியமொன்று. அதில் ஜாதி? பிராமணியத்தைப்பற்றி கர்மகாண்டம் முழுதும் கணக்கில்லாமல் புகழ்ந்தது. பிறகு கர்ம பிராமணியம் ஞானகாண்டத்தில் சேர வேண்டுமாதல் பற்றி ஞானத்தைத் தனியாய்ப்புகழ வந்த வஜ்ஜிரசூசியும் ஜாதி பிராமணியத்தையே அனுவாதம் செய்துகொண்டு அது மேலில்லை. இதுதான் மேலென்று அம்மட்டும் சொன்னது. இன்னொரு விஷயம் இப்பொழுது சொல்கிறேன். பிருகதாரண்ய கோபனிடதத்தில் கார்க்கியரென்ற பிராமணன் அஜாத சத்ருவென்ற ஓர் க்ஷத்திரியனுக்கு உபதேசம் செய்யும்போது பிறகு அவனுடைய சாமர்த்தியத்தைக் கண்ட பிராமணன் நீர் எனக்கு உபதேசம் செய்யவேண்டுமெனவே? அஜாத சத்ருவானவர் திடுக்கிட்டு. ப்ரதிலோமைவாவான தத்யத்ப்ராஹ்மண: க்ஷத்ரியமுபேயாத பிராமணன் க்ஷத்திரியனை அடைவதென்பது தலைகீழ் வியாபாரம் என்று சொல்லியபிறகு வ்யேவத்வாஜ்ஞபயிஷ்யாமி என்றார். அதாவது ஸ்நேகபாவத்திலிருந்து சொல்கிறேனென்றார். இதனால் பிராமண ஜாதிக்கு வைத்த மரியாதை எவ்வளவு என்பதைக்கவனியுங்கள். ஞானம் வந்தும் அஜாத சத்ருவானவர் அதே ஜாதி மாறாதென்பதையும் இதில் காண்பித்தாரென்பது தெரிகிறது. அறிஞர்களே! இவ்விஷயத்தில் யாதும் பயனில்லையாதலால், அனுசிசித்தமாய் இருக்கும் ஜாதியென்பதை ஏன் இல்லையென்று ஸ்தாபிக்க முயல்கிறீர்கள். இதெல்லாம் கரையேறாதாதலால் இதைத் தள்ளவே

ண்டும். இதனால் 26வதுக்கு பதிலளிக்கப்பட்டது. இனி 22வதில் ஜனகனிடத்தில் எத்தனையோ பிராமணோத்தமர்கள் உபதேசம் செய்துகொள்ளவில்லையா வென்றீர்களே அதை விசாரிப்போம்.

பிராசீனசாலர் முதலிய ஆறு பிராமணர்கள் ஞானவிஷயமான விவாதம் செய்து அதன் மூலமாய் விஷயமறிந்தார்களென்றால் அது உபதேசமாகுமோ? இதைக்கொண்டு கீழ் ஜாதியோன் ஞானியாயிருந்தால் அவனிடம் மேற்சாதி உபதேசம் பெறலாமென்று செய்துகொண்டுவிட்டீர்களோ? ஜனகன் சுருதி ஸ்மிருதிகளில் அதிகாரமற்றவனில்லை. சுருதி ஸ்மிருதிகளில் கொஞ்சமும் அதிகாரமில்லாத சூத்திரனிடமிருந்து உபதேசம் பெற்றிருந்தால், அப்போது உங்களுடைய சித்தாந்தம் முடிவு பெறும். இவ்விடம் அப்படி உபதேசமுமில்லை. இது இத்துடனிருக்கட்டும். இனி 28வதிலுள்ள விசுவாமித்திரோபாக்கியானத்தைக் கவனிப்போம்.

இவர் க்ஷத்திரிய ஜாதியிற் பிறந்து தவத்தினால் பிராமணியம் பெற்றாரென்று உங்களது எண்ணம். இது முற்றிலும் பிசகு. விசுவாமித்திரர் க்ஷத்திரியனில்லை யென்பதைக் கீழ் வரும் உபாக்கியானத்தாலறியுங்கள். இம்மகரிஷியின் சரித்திரம் பாரதம் ஆநுசாஸனிகபர்வம் 3வது 4வது அத்தியாயங்களிலிருக்கிறது. பீஷ்மர் அடிபட்டு சாதல் பத்தில்படுத்து பிராண யாத்திரைக்குத் தயாராய் இருக்கும்போது சமஸ்தலோக வியவகாரங்களையுமொழித்து உத்தராயண காலத்தை எதிர் பார்த்துக் கேவலம் தர்மமே கதியென்று அதை 'உள்ளது உள்ளது போல் சொல்ல சங்கற்பம் செய்து தர்ம புத்திரர் தீவிர பக்தியுடன் கேட்கும் கேள்விகளுக்கு விடையளிக்கும் அனேக விஷயங்களின்' மதியில் நடுநாயகம் போல் விளங்கும் விஷயம் இதொன்று. இதில் முதலில் தர்ம புத்திரர் பிராமண ஜாதியை மற்ற மூவருணத்தாரும் ஒரு விதத்தாலும் அடையவே முடியாதென்று கீழ்ச்சொன்ன உபாக்கியானங்களைக் கேட்டுவிட்டுப் பிறகு இயமுற்றுக் கேட்கிறார்.

ஓ பிரபுவே? ப்ராஹ்மண்யம் யதி³ து³ஷ்ப்ராப்யம் த்ரிபி⁴ர்வர்ணை:

நராதி⁴ப | கத²ம் ப்ராப்தம் மஹாராஜ க்ஷத்ரியேண மஹாத்மநா

விஶ்வாமித்ரேண யத் ப்ராப்தம் ப்ராஹ்மண்யம் நரர்ஷப [illegible] [illegible] தத்வேந ஹி விதாம்வர॥ ஓ தர்மாத்மாவே! பிராமணியமென்பது மற்ற மூவருணத்தவர்களாலும் அடைய முடியாதென்றால் க்ஷத்திரியனான மகாத்மா விசுவாமித்திரர் அதை யாங்ஙனமடைந்தார்? இந்த சம்சயத்தை எனக்கு விலக்கவேண்டும். அவர் பிராமணியத்தில் செய்ய முடியாத அநேக அற்புதங்களைச் செய்திருக்கிறாரே என்று கேட்டதற்கு பீஷ்மர் கூறுகின்றார்.

ஓ தர்ம புத்திரா! விசுவாமித்திரர் பிராமணியம் அடைந்த விஷயம் கூறுகின்றேன் கேள்.

பாதனுடைய வம்சத்தில் காதி என்றோர் மகானிருந்தார். அவருக்கு வெகுகாலமாய்க் குழந்தை இல்லாமலிருந்ததனால் மனவருத்தத்துடன் பத்னியோடு காடுபோய்ச்சேர்ந்தார். அங்குசத்தியவதியென்றோர் பெண்மணி உண்டானாள். அவள்மிக்க ரூபவதியாய் இருந்ததைப்பார்த்து,சியவனருடையபுத்திரரான ரிசீகரென்ற ஓர்மகரிஷி தனக்குஅந்தப் புத்திரியை விவாகம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டார். அவர், ஏழையான இந்தப்பிராமணனுக்கு என்பெண்ணைக் கொடுக்கக் கூடாது. கொடுக்க மாட்டேனென்றாலும் ஒருசமயம் சபிப்பார். ஆனதால் இவருக்கு ஒருபோக்குச் சொல்லி யனுப்புகிறேனென்றெண்ணங்கொண்டு அவரைப் பார்த்து ஓ மகரிஷியே! நான் என் குழந்தையைக் கொடுக்க யாதொரு ஆக்ஷேபணையும் சொல்லவில்லை. ஆனால் இந்தக் குழந்தையை விவாகம் செய்துகொள்கிறவன் 1000குதிரைகள் எனக்குக் கொடுக்கவேண்டும். அந்தக் குதிரைகளுக்கு ஒரு காது வெளுப்பாயும் ஒன்று கறுப்பாயும் மற்ற தேக மெல்லாம் சந்திர வர்ணம் போலும் வாயுவேகமுள்ளதாயும் இருக்கவேண்டும். அப்படிக் கொடுத்தால் பெண்ணைக்கொடுக்கத் தடையில்லை யென்று சொன்னதைக் கேட்ட ரிசீகர் வருணனை ஸ்தோத்திரம் செய்து கங்கையின் கரையில் அத்தகைய குதிரைகளை அடைந்து காதியினிடத்தில் கொண்டு வந்து நிறுத்தவே, அவர் திடுக்கிட்டு இனி இல்லை யென்று சொல்லத்தகாதென்று எண்ணிப்புத்திரியைக்கொடுத்துவிட்டார். உடனே அவளை விவாகம் செய்து கொண்டு காட்டுக்குப் போய் விட்டார்.

அங்கு அவள் சுச்ருஷையினால் அவரிடமிருந்து அநேக வரங்களைப் பெற்றாள். உடனே இந்த சந்தோஷங்களைத் தன் தாயினிடம் வந்து சொல்லவே, தாயானவள் அம்மா உனக்கும் குழந்தை இல்லை எனக்கும் புத்திரனில்லை. ஆகையால் நம்மிருவருக்கும் வரம் கேள் என்று சொல்லி யனுப்பவே, அவளும் அவ்விதம் கேட்க, அதற்கவர் சந்தோஷத்தோடு சொன்னதாவது, ஓ ஸ்திரீயே! உனக்கும் புத்திரனுண்டாவான். உன் தாய்க்கும் உண்டாகும். அதற்காக நீங்கள் செய்யவேண்டிய காரிய மென்ன வென்றால்; இருவரும் ருதுஸ்நானம் செய்த தினத்தில் பக்தியுடன் நீ அத்திமரத்தையும் உன் தாய் அரசமரத்தையும் கட்டிக்கொள்ள வேண்டும். பிறகு இந்த ஹவிஸ்ஸை நீ சாப்பிடு. உன் தாய் இதை சாப்பிட்டடும். என்று குறிப்பிட்டு இரண்டு ஹவிஸ்ஸையும் கொடுத்தார். இந்த ஸ்திரீயும் தாயினிடத்தில் வந்து அப்படியே சொல்லவே தாயார் அம்மா, உனது பர்த்தா உன்னிடம் நல்ல புத்திரன் ஜனிக்கவேண்டு மென்று விசேஷ அனுக்கிரகம் செய்திருப்பார். ஆதல் பற்றியே மரத்தையும் ஹவிஸையும் குறிப்பாய் மாற்றி இருக்கிறார். ஆகையால் உன் ஹவிஸை எனக்குக்கொடு. உன் மரத்தை நானே கட்டிக்கொள்ளுகிறேன். உன் வயிற்றில் சிரேஷ்டமான குழந்தை ஜனித்து நீ பிள்ளை யென்று பார்ப்பதைக் காட்டிலும் என் வயிற்றிற் பிறந்து நீ தம்பி யென்றழைப்பது மகிமை இல்லையோ வென்று கேட்கவே அதற்கு அவளும் சம்மதித்து அப்படியே கொடுத்து விட்டாள். பிறகு இருவரும் கருத்தரித்தார்கள். இப்படியிருக்க ஒரு நாள் அம்மகரிஷி பத்னியைப் பார்த்து ஐயோ! நான் கொடுத்த ஹவிஸையும் மரத்தையும் மாற்றி விட்டாயே. நான் உன் வயிற்றில் மகா ஞான முள்ள ஓர் பிர்ம தேஜஸ் உண்டாக வேண்டு மென்றும் உன் தாய் வயிற்றில் சர்வலோகவீரனானஓர் க்ஷத்திரியக் குழந்தை உண்டாக வேண்டுமென்றும் அபிமந்திரணம் செய்திருந்தேன். அதை மாற்றிவிட்டபடியால் இப்போது உன் வயிற்றில் மகா பராக்கிரமசாலியானக்ஷத்திரியன் ஜனிக்கப்போகிறான். அவள் வயிற்றில் பிராமணக் குழந்தை ஜனிக்கப்போகிறது என்று சொன்ன வார்த்தையைக்கேட்டு அலறிவிழுந்து ஐயோ நான் செய்த அபராதத்தை மன்னித்தருளவேண்டும், என் வயிற்றில் க்ஷத்திரியக் குழந்தை உண்டாகவே

கூடாது. எனக்கு அது வேண்டாம் என்று கதறவே, அப்போது தயவுடன் ரிசீகர் சொன்னதாவது:— அம்மாநல்லது. இப்போது உன்வயிற்றில் பிராமணக்குழந்தையே ஜனிக்கும்படி அனுக்கிரகம் செய்கிறேன். ஆனாலும் உன் பேரன் க்ஷத்திரியனுய்த்தான் உண்டாவான் என்றார். அப்படியே ரிசீகரது பத்னிக்கு ஜமதக்னி யென்ற மகரிஷியும் அவள் தாய் வயிற்றில் பிர்மதேஜஸுடன் விளங்கும் விசுவாமித்திரரும் ஜனித்தார். அவர் கொஞ்சக் காலம் க்ஷேத்திர தோஷத்தினால் க்ஷத்திரியனாய் ராஜ்யபாரம் சுமந்தார். பிறகு சொந்த தேஜஸ்ஸைத் தபசினால் அடைந்தார் என்று பீஷ்மர் சொல்லி முடித்தார்.

அறிஞர்களே! இதனால் நீங்கள் என்ன தாத்பரியம் கொண்டீர்கள். இனியும் விசுவாமித்திரரை க்ஷத்திரியனென்றுரைப்பீர்களா? ஒருபோதும் முடியாது. இதனால் விசுவாமித்திரோபாக்கியானமும் உங்கள்பட்சத்திற்கு விரோதமாய் முடிந்ததென்றெண்ணி இதையும் தொலையுங்கள். ஆனால் உங்களுக்கு இங்கு ஒருஆசங்கையுண்டாகலாம். பிராமணபிந்து எந்த ஜாதியில் ஜனித்தபோதிலும் அவன் பிராமணனுவனே? அப்படியாயின் நம்மவர்களுள் வெகு பெயர்களுக்கு வேசியினிடம் உண்டாகும் குழந்தைகளுக்கு நல்லகாலம் பிறந்ததென்பீர்கள். அது ஒருபோதுமாகாது. இவர் அனேகம் ஆயிரம்வருஷங்கள் தவஞ்செய்து பிறகு பிர்மரிஷியானதாய்ச்சொல்லிப்பட்டிருக்கிறது. தவிரவும் முற்காலத்தில் பீஜத்திற்குப் பிரதானம் இருந்தது. அதுபற்றி அவ்விதமானுரென்றெறியுங்கள். தவிரவும்ரிஷிகளது பீஜம் சாதாரணமானதென்றெண்ணுதீர்கள். மகாதீவிரமுள்ளதால்அவ்விதமானுரென்றும் எண்ணுங்கள். இதனால்வீஜம்ஹயாநம்யயாவொகெபீஜத்திற்குத்தான்பிராதான்யமுண்டு. அப்படியேஉலகத்திற்காணலாமென்ற ஓர் நியாயம் இங்கு தோன்றுகிறது. இதனால் க்ஷேத்திரதோஷத்தை மட்டிலும் தபசினால் விசுவாமித்திரர்விலக்கினுரென்று சொன்னதுபோல பீஜதோஷத்தை விலக்கியவராய் ஒருவர்இருந்தாரென்றுஒரிடத்திலும் உபாக்கியானம் கிடையாதென்றே அறியுங்கள். அனேகமாய் க்ஷேத்திரத்திற்குப்பிராதான்யம்கிடையாதென்பதை உலகில் பாருங்கள். நாம்துவரையோ அல்லதுஉளுந்தோ

ம்ற்ற எந்த வித்தையாவது எந்த இடத்தில் விதைத்தாலும் அது அதுவரையாகவும் உளுந்தாகவும் உண்டாகுமே தவிர அது வேமுென்ருய் ஒருபோதும் பலிக்காது. க்ஷேத்திரத்தின்மேன்மைக்குத் தக்கபடிரூபத்தையும் குணத்தையும் மாற்றிக்கொள்ளவே மாட்டாது. க்ஷேத்திரத்தை எதிர்பாராமலே சிலவிதைகள் முளை கொள்வதையும் கண்டிருக்கிறோம். இதனாலும் க்ஷேத்திரம் பிரதான மில்லையென்றேற்பட்டிருக்கிறது. இவ்விதமே ஸ்மிருதிகளும் கூறுகின்றன. மனு பீஜஸ்ய சைவ யோந்யாஶ்ச பீஜமுத்க்ருஷ்டமுச்யதே। ஸர்வபூதப்ரஸூதிர்ஹி பீஜலக்ஷணலக்ஷிதா ॥ யாத்ருஶம் தூப்யதே பீஜம் க்ஷேத்ரே காலோபபாதிதே। தாத்ருக்ரோஹதி தத்தஸ்மின் பீஜம் ஸ்வைர்வ்யஞ்ஜிதம் குணை:। பூமாவப்யேககேதாரே காலோப்தாநி க்ருஷீவலை:। நாநாரூபாணி ஜாயந்தே பீஜாநீஹ ஸ்வபாவத:॥ வ்ரீஹய: ஶாலயோ முத்கா: திலா மாஷாஸ்ததா யவா:। யதாபீஜம் ப்ரரோஹந்தி லஶுநாநீக்ஷவஸ்ததா। அந்யதுப்தம் ஜாதமந்யதித்யேதந்நோபபத்யதே ॥ பீஜத்திலும் யோனியிலும் பீஜந்தான் மேன்மையுள்ளதாய்க் கூறப்படுகிறது. சமஸ்தப்பிராணிகளின் உற்பத்தியும் பீஜத்தின் லக்ஷணத்தோடே காணப்படுகின்றன. நல்லகாலத்தில் ஒரு வயலில் எவ்விதமான விதை விதைக்கப்படுகிறதோ அப்படியே அந்தவிதையானது தன்னுடைய குணங்களையே பிரகாசப்படுத்திக் கொண்டு உண்டாகின்றது. ஒரே வயலில் சரியான காலத்தில் விதைக்கப்பட்ட நெல், பயறு, முதலிய பலதான்யங்கள் அப்படி யப்படித்தான் உண்டாகின்றன. ஒரே விடத்தில் உள்ளிப்பூண்டும், கரும்பும் தன்னுடைய குணத்தோடுதான் உண்டாகும். அவரை போட்டுத் துவரை முளைப்பது ஒருபோதுமில்லை யென்றார். அப்படியே இன்னொரு ஸ்மிருதியிலும் க்ஷேத்ரபூதா ஸ்ம்ருதா நாரீ பீஜபூத: ஸ்ம்ருத: புமாந்। க்ஷேத்ரபீஜஸமாயோகாத் ஸம்பவ: ஸர்வதேஹிநாம் ॥ ஸ்திரீ என்பவள் க்ஷேத்திரம் புருஷனென்பவன்விதைக்குச் சமானம். இவ்விருவர்களின் சேர்க்கையே எல்லாப் பிராணிகளுடைய உற்பத்திக்கும் காரணமென்று க்ஷேத்திரமென்றும் விதை

யென்றும் வியவகாரம் செய்திருப்பதாய் மட்டிலும் ஒப்புக்கொள்ளுங்கள்.

இத்தகைய பிரமாணங்களால் உங்களுக்கு முன் உண்டான சம்சயம் நன்றாய் வேரூன்றுமே தவிர வேரறாது. அதாவது இந்த நியாயங்களால் இக்காலத்திய பிராமணனுக்கு வேசியினிட முண்டாகும் குழந்தை அதே ரூபம் அதே குண முள்ளவனையும் காணப்படுவதால் இவனையும் பிராமணனென்று ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதுதான். இதுமட்டிலும் ஆகாதென்றே சொல்வேன். ஏனெனில்.

ஸத்யஸ்ய வ்ருத்திர்யாவத் பீஜம் தாவத் ப்ராதான்யதே' எவ்வளவுகால பரியந்தம் சத்தியம் நிலைபெற்று நிற்குமோ அவ்வளவு பரியந்தந்தான் பீஜத்திற்குப் பிராதான்யமுண்டு என்றுசொல்லும் ரீதியாய்க்கலியுகத்திற்குபீஜம் க்ஷேத்திரம் இரண்டும் சரியாய்இருக்கவேண்டுமே தவிர ஏற்றத்தாழ்ச்சியுள்ளதாய் இருக்கக் கூடாது. ஆனால் முற்காலத்திற்கு ஒரு நியாயம் இப்போது ஒன்று என்றால் பக்ஷபாதமாகாதோ வென்பீர்கள். அதுவுமல்ல ஏனெனில், முற்காலத்தில் பீஜத்திற்குப் பிராதான்யம் வைத்ததானது அதன் சக்தியைப் பொறுத்து வைக்கப்பட்டது. இக்காலத்தில் சக்தியே இல்லாததால் இரண்டும் வேண்டுமென்றார். இதை உங்களுடைய பிரமாணவாயிலாக நன்கு விளக்கிக் காட்டுகிறேன்.

உலகில் இப்போதுள்ள காமப்பிரவர்த்தி போல் முற்காலத்திலுள்ளோர்களுக்குக் கிடையாது. அதிலும் மகரிஷிகளென்பவர்கள் இந்திரியங்களை நன்றாய் அடக்கி ஸ்வாதீனத்தில் வைத்தவர்கள். எப்படிப்பட்ட காமியாயினும் மனிதன் மனுஷ்ய ஸ்திரீயினிடத்தும் மாடு தன்னினத்திலும் இப்படி ஒவ்வொன்றும் தன் தன் ஜாதியினிடத்தில் காமம் கொள்வது சகஜம். இப்படி இருக்க வஜ்ரசூசியுபனிடதத்தில் பெண் மானிடத்திலிருந்து ரிசிய சிருங்கரும், நரியினிடத்தில் ஜாம்பூகரும், முயலிடத்தில் மாண்டூக்கியரும், கிளியினிடத்தில் சுகரும் ஜனித்தார்களென்றீர்களே. இந்த இந்தஸ்திரீ ஜாதியினிடத்தில் அந்த அந்த புருஷஜாதி பிரவர்த்தித்து இவர்கள் ஜனித்ததாய் நினைத்தீர்களானால் அந்த எண்ணத்தை விட்டு

விடுங்கள். இவைகளிடத்தில் ரிஷி பீஜம் தான் உண்டாயிருக்க வேண்டுமென்று எண்ணுங்கள். இப்படியாயின் இவ்விதமான திர்யக்ஜாதியில் அவைகளின் ரூபலாவண்யத்தைக் கண்டு மோகித்து மகரிஷிகள் கூடியிருப்பார்களா. அப்படியிருந்தாலும் மனிதனால் பிரவேசிக்க முடியுமாவென்பதையும் சற்று நிதானியுங்கள். இதன் நியாயத்தை யான் வெளியிடுகிறேன் கேளுங்கள்.

மகாதபஸ்வியாய்த் தபோ நிஷ்டையிலிருந்து உலகத்தையே மறந்திருக்கும் மகான்களுக்கு ஒரு சமயம் ஓர் புத்தி தோன்றும் அதாவது இந்த நிமிஷத்தில் நம்முடைய பீஜம்வெளியேறி முளைக்குமேயாயின் அவன் சர்வலோகப்பிரசித்தனும் சமஸ்தலோகோபகாரியாயு மாவான் என்று எண்ணுவார்கள். அச்சமயமவர்கள் பரிதாபத்துடன் இதைத் தரிக்க யாருமில்லையா வென்று அலைவார்கள். அப்போது எந்த ஸ்திரீஜாதியானாலும் பாதகமில்லை யென்றுமெண்ணுவார்கள். அப்படிக் கிடைத்தால் போச்சுது. இல்லாவிடில் அப்போது அந்த ரேதஸ்ஸைத் தரையிலோ தண்ணீரிலோ விட்டோடுவார்கள். அக்காலத்தில் அதை நரி சாப்பிடுமோ பக்ஷிசாப்பிடுமோ நீரிலிருந்தால் தவளை சாப்பிடுமோ எது சாப்பிட்டாலும் சரி அங்கிருந்து யாதொரு யோக்கியதையாலும் குன்றாதவர்களாய் உண்டாகிறார்கள். அப்படி ஒன்றும் சாப்பிடாவிட்டாலும் அந்த பீஜம் சும்மாயிராது. முக்கண்ணனது நெற்றியிலிருந்து புறப்பட்ட ரேதஸ்ஸானது அக்கினியையும் தகித்து, கங்கையையும் கதறவடித்துப் பிறகும் ரக்த சம்பந்தமில்லாமலே நாணற்காட்டில் சர்வதேஜஸ்களையு மவதிக்கும்படியான காந்தியோடு குமாரனைப் ஜனித்தது போல் ரக்தசம்பந்த மில்லாமலே மகாவீரியவான்களாய் லோகோபகாரியாய் ஆவார்கள். இதற்கு உதாரணம் உங்களநுபவிடதத்திலேயே கௌசிகரையும் அகஸ்தியரையும் பாருங்கள். கௌசிகர்க்ரத சம்பந்தமின்றிக் குசத்தினுதித்தார். அதுபோல் அகஸ்தியரும் குடத்திலுண்டானார். இதனால் அவர்களது பீஜம் எத்தகையதென்று பாருங்கள்.

வசிஷ்டர் வேசிவயிற்றுப் பிள்ளை யென்பதும் இப்படிப்பட்ட

து தான். இவர் அவள் வயிற்றிலிருந்து பிறக்கவில்லை. மித்திரா வருணர்களுக்கு ஊர்வசியைப் பார்த்து உண்டான ரேதஸ் ரக்தசம் பந்தமின்றி உண்டான தென்றறியுங்கள். இப்படியே ஒவ்வொரு வருடைய மூலமும் நினைக்க நினைக்க ஆச்சரியத்தைத்தரும். ரிஷிமூலம் நதிமூலம் விசாரிக்கத்தக்கதல்ல வென்று 'அம்மையார் வசனமி ங்குவேண்டாம்.நன்குவிசாரித்தாலவர்களது மான்மியம் விளங்கும். இதனால் வஜ்ஜிரசூசியில் "ஜாத்யந்தரஜந்துஷ்வநேகஜாதிஸம்பவா:" என்றவாக்கியம் முழுமையும் 20வது கேள்வியும் உத்தரம் செய்யப் பட்டன.

இனி 19வதில் காசியாத்திரைபோகும் காலையில் சங்கர பகவத்பாதர் சண்டாளனை நமஸ்கரித்ததாய்ச் சொன்னீர்களே? அதைக் கவனிப்பாம்.

இவர் நமஸ்கரித்த, சண்டாளன் சண்டாளனன்று. மாயையாய் வந்த ஈசன். மற்றும் அவனிடத்தில் ஸ்திரமான ஆன்ம ஞானம் இருப்பதாயும் கண்டார். ஏதோ அவன் "அந்நமயாத்" என்று சொன்ன ஒரு சுலோகத்தினாலேயே அவனை குருவென்று நம்பி விட்டதாய்க் கூறினீர்களே? அப்படியாயின் "ஜாக்ரத்ஸ்வப்நஸுஷுப்திஷு" என்றெல்லாம் சொல்வானேன். "கிம்கங்காம்பஸி" என்றும் சொல்வானேன்! நல்லது இதிலும் ஒன்று பாருங்கள். கங்கை ஜலத்தில் பிரதிபலிக்கும் சூரியனுக்கும் சண்டாளன் குளத்தில் பிரதிபலிக்கும் சூரியனுக்கும் பேதமுண்டா! தங்கக்குடத்திலிருக்கும் ஆகாயத்திற்கும் மட்குடத்திலிருக்கும் ஆகாயத்திற்கும் பேதமுண்டா வென்றீர்களே. இதில் உங்களுக்கு சாதகமே கிடையாது. இரண்டு ஜலத்திலும் பிரதிபலிக்கும் சூரியனுக்கு வித்தியாசமில்லை. இரண்டிடத்திலுமிருக்கிற ஆகாயத்திற்கும் வித்தியாசமில்லை; ஆனால் கங்கை ஜலம் மேலென்றும் சண்டாளன் தண்ணீர் கீழென்றும் சொன்னதாய் ஆகவில்லையா. இது போல் கீழ் ஜாதி மேல் ஜாதியென்பவர்களுடைய ஆன்மா ஒன்றாக இருக்கலாம். அவர்களுடைய சரீரம்ஏற்றத்தாழ்ச்சியுள்ளதுதான். இதுவேபோது மானது. இதனால் இத்தேகவியவகார முள்ளவரை இரண்டும் போஜ

ஹதி வியவகாரங்களில் சேர்ந்து என்பது திண்ணம். கடைசியில் “ஜ்ஞானௌஷதஸ்தவிஜோஷ்டா” என்று ஏற்றத் தாழ்ச்சி உண்மையாய் உண்டென்பதையும் மறையாமற் காட்டியிருக்கிறார். ஆனால் இதிலும் பயனில்லை.

இனி 17வதில் கீதையில் “சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம்”, என்பதற்கு அழகாய் அர்த்தம் சொன்னீர்கள். அதைக் கவனிப்போம்.

அந்த சுலோகத்தில் இவ்விதம் அர்த்தம் சொல்வதனாலேயே குருபரம்பரையான உபதேசம் இல்லையென்பதைக்காட்டுகின்றது. இந்த சுலோகத்தின் அர்த்தம் கீழ்வருமாறு.

என்னால் நான்குவருணங்கள் சிருஷ்டிக்கப்பட்டன என்று ஒரு வாக்கியம். அடுத்தவாக்கியம் இதற்குக்காரணமாய் நிற்கிறதாய் அறியவேண்டும். அதாவது “ஸ்ருஷ்டம்” என்னால்சிருஷ்டிக்கப்பட்டது. என்று இறந்தகாலத்தால் சொன்னார். பிறகு இதில் ஓர் ஆசங்கை ஏற்பட்டது. நான்கு வருணங்கள் சிருஷ்டிக்கப்பட்டன என்று எண்ணிக்கையாய்ச் சொன்னதினாலேயே வித்தியாச முள்ளன. அதாவது ஏற்றத்தாழ்ச்சி என்று ஏற்படுகிறது. இப்படியாகும்போது கருணை மூர்த்தியான ஈசனுக்கு பக்ஷபாதம் தயவின்மையென்பது ஏற்பட்டுவிடுமோ வென்றுஆசங்கைநிகழ அதைமாற்றுவதற்கு‘குணகர்மவிபாகச:’என்றவாக்கியம்கிளம்பியது. அப்பா? நான் தயவின்மையால் அப்படி சிருஷ்டிக்கவில்லை. மற்று அவர்களது முன்பிறவியிலுள்ள குணவிபாகத்தையும்கன்மவிபாகத்தையும்ஒட்டி இவ்விதம் சிருஷ்டிக்கப்பட்டன என்று சொன்னார். இப்படி அர்த்தம் ஏற்படும் போது உங்களுடைய ஆசங்கை இதிலேயாது. அவனுடைய அனாதி சித்தமான கன்மத்தை ஒட்டிசிருஷ்டிக்கிறேனென்று சொல்லி விட்டபடியால் பிறந்த பிற்பாடு ஞானம் முதலிய தொழிலாலங்ஙனமாகிறதில்லை யென்றேற்பட்டுவிட்டது. இனி இதன் சாங்கரபாஷ்யத்தையும் பாருங்கள். அதிலும் உங்களுக்கு அனுகூலம் கிடையாது.

சாதுர்வர்ண்யமென்றால் நான்கு வர்ணங்கள். அது ஈசவரனால் என்னால்-சிருஷ்டிக்கப்பட்டது. எப்படி யென்றால் “ப்ராஹ்மணா

ஸ்ய ஃவாவிஃ"என்பது போன்ற சுருதி சொல்லுகிறபடி. குண கன்ம விபாக மென்றால் சத்வ ரஜஸ் தமோ குணங்களின்படியும் கீழ் கூறப்படும் கன்மங்களின் படியும். அதாவது சாத்விக குணத்தையே பிரதானமாய்க்கொண்ட பிராமணனுக்கு சமம், தமம், தபஸ், செளசம் முதலியவைகள். சத்வ குணத்தைக் கொஞ்சம் வைத்து ரஜோகுணத்தைப் பிரதானமாய் வைத்த க்ஷத்திரியனுக்கு செளரியம் தேஜஸ் முதலிய தொழில்கள். தமோகுணத்தைக் கொஞ்சம் வைத்து ரஜோ குணத்தைப் பிரதானமாய் உடைய வைசியனுக்குக் கிருஷி முதலிய தொழில்கள். ரஜோகுணத்தைக் கொஞ்சம் வைத்துத் தமோகுணத்தைப் பிரதான்மாய் இட்ட சூத்திரனுக்குச் சுச்ரூஷை செய்வதே தொழில். இவ்விதம் குண கன்ம விபாகமாய் சிருஷ்டிக்கப்பட்டதென்றார். இதில் "ப்ராஹ்மணோஸ்ய ஃவாவிஃ" என்றபடி ஜனித்த பிராமணன் இன்னகுணமுள்ளவனென்றும் இன்ன கன்ம முள்ளவனென்றும் சொன்னதினால் பிராமணன் முதலியவர்கள் அந்த குணத்தையும் அந்த கன்மத்தையுமே விருத்தி செய்யவேண்டு மென்றும் ஏற்பட்டது. இம் மகான் சுருதிப்படி சிருஷ்டிக்கப் பட்டவர்களுக்கும் இக்குணமும் இக்கன்மமு மென்றாரே தவிர இதை அடைந்தவனின்னனென்றாரில்லை. இதில் "ப்ராஹ்மணோஸ்ய ஃவாவிஃ"என்ற சுருதியைப் பிரமாணமாய்க் காட்டி இருக்கிறார். இவ்வாக்கியமும் பொய் யென்று தள்ளப்பட்ட புருஷசூக்தத்தைத்தவிர வேறிடத்திலில்லை. நீங்கள் புருஷசூக்தம்கல்பிதமென்று ஊஹித்தபடி பகவத் பாதருக்குத் தோன்றாமற்போய்விட்டதே. இதை வேதத்தின்நடுவிற் சேர்த்தவைதிகன் ஆசாரியருடைய காலத்திற்கும் வெகுகாலம் முந்தியவனாய்த் தெரிகிறபடியால்? இக்காலத்திய வைதிகன் சேர்த்தானென்ற சொல் ஏறாது. இதனால் 27-வது கேள்வி விரட்டப்பட்டது.

இன்னு 16-வது கேள்வி யானகீதையில் "ஶமோ தமஸ்தப ஶௌசம்,"என்று சொன்ன சுலோகங்களும் இந்தபாஷியத்திலேயே விவரிக்கப்பட்டுவிட்டது. தவிர இந்த சுலோகங்களுக்கு முன்னே இருக்கிற வாக்கியத்தை மறைத்துச் சொல்லி விட்டீர்கள். அதைத்

சொல்லுகிறேன். "ப்ராஹ்மண க்ஷத்ரிய விஶாம் ஶூத்ராணாஞ்ச பரந்தப | கர்மாணி ப்ரவிபக்தானி ஸ்வபாவப்ரபவைர் குணை:" பிராமணன் க்ஷத்திரியன் வைசியன் சூத்திரன் ஆகிய இவர்களுக்குஇயற்கையாய் உண்டான கன்மங்களே வகுக்கப்பட்டிருக்கின்றனவென்றார். இயற்கையாய் உண்டானதென்றால் அனாதிசித்தமென்பது பொருள்.

உலகத்தில் 'ஏகமேவாத்விதீயம்' எல்லாம் ஒன்றுதான் என்று அத்வைதத்தையே பிரதிஷ்டை செய்ய அவதரித்த சங்கர பகவத்பாதர் கன்ம காலத்தில் வர்ணாசிரம விபாக முண்டென்று நிரம்ப அபிப்பிராயப் பட்டிருக்கிறாரென்பதற்கு சூத்திர பாஷ்யம் 1வது அத்தியாயம் 3வது பாதம் 4வது அதிகரணமான "அபஶூத்ராதிகரணம்" என்பதைப் பாருங்கள். அதில் சூத்திரன் ஞான சாஸ்திரத்தில் பிரவர்த்திக்கலாமாவென்று ஆசங்கித்து அவனுக்கு அத்தியயனம் நிஷேதிக்கப்பட்டிருப்பதால் ஞான சாஸ்திரமும் கூடாதென்பதற்கு எவ்வளவு பிரமாணம் காட்டியிருக்கிறாரென்பதை இப்போ துரைப்போமென்றால் விரியுமென்று விடுகிறேன். ஆதலால் அதை அங்கு கண்டு தெளியுங்கள். ஆனதால் இதிலும் பிரயோசனமில்லை.

இனி 21வது கேள்வியைக் கவனிப்போம். இங்கு ஒரே ஜன்மத்திலென்று சொல்லியிருக்கிறது. இவ்விதமிருந்தால் மறு ஜன்மங்களில் மேல் ஜாதியை அடையலாமென்று சொன்னதாய் இங்கு சொல்லவேண்டியது நியாயம். ஏனெனில் கீழ்கூறிய பிரமாணங்களின் படி.

இனி 30வதான விதுரனின் விஷயத்தைக் கவனிப்போம். இவர் ஞானியாய் இருந்தாரே தவிர மேற்சாதியானுக்கு உபதேசம் செய்யவேயில்லை. ஒரு சமயம் விதுரன் திருதராஷ்டிரனுக்கு யுத்தவிஷயமாய் ஏற்பட்ட மனக்கவலையை நீக்க அநேக நியாயங்கள் சொல்லிக்கொண்டிருந்தார். அப்போது திருதராஷ்டிரர் விதுரனைப்பார்த்து சில வார்த்தைகள் பேசி இதற்கு பதில் சொல்ல

வேண்டும். இன்னும் இதற்கு மேலும் சொல்லவேண்டுமென்று கேட்கும்போது சில வற்றிற்குக் கூறிப் பிறகு மற்றவைகளுக்கு நான் சொல்லயோக்கியனில்லை. சனத்குமாரரைக் கேட்கவேண்டும் ஏனெனில் 'ஶூத்ரயோனாவஹம்ஜாதோ நாதோ ந்யத்வக்துமுத்ஸஹே' நான் சூத்திரயோனியிற் பிறந்தவனாதல் பற்றி இதற்குமேற்கூற எனக்கு அதிகாரமில்லை யென்று சொல்லி மேலேயும் பிராமண னிடத்தில் எவ்விதமும் கேட்கலாம். அவர்களே உரியவர்களென் றும் அழகாய்ச் சொல்லிவிட்டார். இதனால் சூத்திரரே தவிர ஒரு போதும் பிராமணனில்லை யென்பதற்கு இவரது வசனமே பிரமா ணம்.

ஆனால் சூத்திரனுக்கு ஞான சாஸ்திரத்தில் அதிகாரம் கிடையாதென்று முன் நிரூபித்தீர். இவர் மட்டிலும் எவ்விதம் அறிந்தார் எனலாம். இவா இந்த ஜன்மத்தில் அறிந்தாரில்லை. இவர் யமனுடைய அவதார மானதால் அந்த ஜன்ம ஞானம் குன்றாதிருக்கிறது. அப்படியே ஆசாரியர் அபசூத்திராதி கரண முடிவில் சூத்திரனுக்கு அதிகார மில்லாமலிருக்கும்பொழுது விது ரன் தர்மவியாதன் இவர்கள் எவ்வித மறிந்தாரென்று கேட்டுக் கொண்டு இவர்களுக்கு ஜன்மாந்தரத்தின் ஞானம் தடங்கலற் றது என்றே முடித்திருக்கிறார். ஆதலால் இதிலும் பயனில்லை.

மற்றும் ஆதிபர்வா ஆஸ்திகபர்வம் 30வது அத்தியாயத்தில் வேடஜாதியோடு சேர்ந்து மகா நீசனாய்க்கெட்டுப்போன ஓர் பிரா மணனைதமனைக்கருடன் விழுங்கஅவன் உள்ளே நிரம்பவேதனை உண்டு பண்ணினான் என்றும் பின்பு அவன் பிராமணனென்று தெரிந்து வெளியில் கக்கினானென்றும் சொல்லியிருக்கிறது. இதை நன்குக வனியுங்கள்.

இனி 14 வதில் சுருதிப் பிரமாணமில்லை. சுருதி முழுமையும் மூலையெல்லாம் தேடிப் பார்த்தோமென்றீர்கள். அதிற் சற்று இற ங்குவோம்.

முதலில் ஞானகாண்ட உபநிஷதத்திலேயே ஒரு வாக்கியம் சொல்லுகிறேன்.

'தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி,' அப்படிப்பட்ட இந்த பரமாத்மாவை வேதானுவசனங்களால் பிராமணர்களறிய விரும்புகிறார்கள் என்கிறதே. பரமாத்மாவை அறிந்தவனல்லவா பிராமணனாகிறான். அப்படியிருக்க முதலில் இப்பெயர் எப்படிக் கிடைத்ததென்று ஆலோசியுங்கள். புருஷ ஸூக்தம் உங்களுடைய ஆதார கோடியில் சேராததால் அதை விட்டு வேறு கோடி வசனங்களுள் என் கண்ணிற்கும் காதிற்கும் புலப்பட்டதை மட்டும் எடுத்துரைக்கிறேன்.

2வது அஷ்டகம் 6வது பிரச்னம் "ப்ரஹ்ம க்ஷத்ரம் பவதே தேஜ இந்த்ரியம்" இதற்கு சாயணாசாரிய பாஷ்யம். ப்ரஹ்ம ப்ராஹ்மணஜாதி: க்ஷத்ரம் க்ஷத்ரியஜாதிஸ்ச | தேஜ: காரணம் இந்த்ரியம் இந்த்ரியவ்யக்திகாரணம் வேதம் த்ரவ்யம் பவதே ப்ராப்நோதி. இந்தவிடத்தில் பிராமணஜாதி க்ஷத்திரியஜாதி என்கிறது. மற்றும்-

"ஸர்வாணி வாக் பரிமிதா பதாநி தாநி விதுர் ப்ராஹ்மணா யே மநீஷிண:" என்ற ஆருணவாக்கியத்தின் பாஷ்யத்தில் ப்ராஹ்மணா: ப்ராஹ்மணஜாதீயா: பிராமண ஜாதியிற் பிறந்த எந்த வித்வான்களோ என்கிறார்.

"யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரம் ச உபே பவத ஓதந:" என்ற உபநிஷதத்தில் பிராமணஜாதியும் க்ஷத்திரியஜாதியும் யாதொரு பரமாத்மாவுக்கு அன்னமாக ஆகிறதோ என்று சொல்லி இது உபலக்ஷணம். சிரேஷ்டமான இந்த ஜாதியே சாப்பிடப்படுகிறதென்றால் மற்றவைகளின் கதியைக் கேட்பானேன் என்று அர்த்தம் விவரிக்கப் பட்டிருக்கிறது.

இன்னும் 2வது அஷ்டகம் 8வது பிரச்னம் 8வது அனுவாகத்தில் 'ப்ரஹ்ம தேவாநஜநயத் | ப்ரஹ்ம ப்ராஹ்மண ஆத்மநா' பிர்மம் தேவர்களை உண்டுபண்ணியது. பிர்மனிடத்திலிருந்து க்ஷத்திரியஜாதி உண்டு பண்ணப்பட்டது. பிர்மம்தானே பிராமணனைப் பரிணமித்ததென்கிறார். இதில் பிராமணஜாதியின் மகிமை எவ்வளவு மேலாகக் காட்டப்பட்டதென்பதைப் பாருங்கள்.

"ஆ ப்ரஹ்மந் ப்ராஹ்மணோ ப்ரஹ்மவர்சஸீ ஜாயதா மாராஷ்ட்ரே ராஜந்ய இஷவ்ய: ஶூரோ மஹாரதோ ஜாயதாம்" பிராமணன் பிர்மதேஜஸ் உள்ளவனாக ஆகட்டும் இந்த ராஜ்யத்தில் க்ஷத்திரியன் அஸ்திரவித்தை கற்றவனையும் சூரனையும் மகாரதனையும் ஆகட்டும். என்று சிராத்தத்தில் பிதிருதேவதைகள் ஸ்வரூபமான பிராமணர்களின் முன்னிலையில் பிரார்த்திப்பது தெரியவில்லையோ. இது 7வது காண்டம் 5வதுபிரச்னம் 18வது அனுவாகத்திலிருக்கிறது.

ஆனால் இவ்வளவு வாக்கியங்களால் இரண்டு ஜாதிதான் சொல்லப்பட்டுவருகின்றன. மற்றது இல்லையோ வென்று நினைக்கவேண்டாம். இந்த மந்திரத்திலேயே "தோக்த்ரீ தேநு: ஆஶு: ஸப்தி:", என்ற இரண்டு வாக்கியங்களும் வைசியனையும் சூத்திரனையும்குறிக்கின்றது. எப்படியெனில் பசுக்கள் கறவையுள்ளதாய் ஆகட்டுமென்றதால் பசுபாலனவிருத்தியுள்ள வைசியனைக்குறிக்கிறதென்றும் "ஆஶு: ஸப்தி:" என்றதனால் பாதஜீவனம் செய்யும் சூத்திரனைப்போல் குதிரையும் அந்த ஜீவனமுள்ளதென்றும் அவனைப்போல் அவனுடனேயே காலிலிருந்து உண்டானதென்றும் வேறொரு மந்திரம் கூறுவதாலுமென்க.

ஆனால் புருஷ சூக்த ஆனு பூர்விபோல் வேறிடத்திலில்லையென்றதற்குத் தகுந்த உத்தரம் கூறாமல், ஆ ப்ரஹ்மந் என்ற விடத்தில் நீராய் அனுமானம் செய்கிறீரே என்பீர்கள். இனி இதற்குத் தகுந்த காரணவாக்கியங்களைத் தேடுவோம்.

1வது அஷ்டகம் 1வது பிரச்னம் "ப்ருகூணாம் த்வாங்கிரஸாம் வ்ரதபதே வ்ரதேநாததாமீதி ப்ராஹ்மணஸ்யாதத்யாத் | ஆதித்யாநாம் த்வா தேவாநாம் வ்ரதபதே வ்ரதேநாததாமீதி ஹ்ருஸ்வஸர்வாதத்யாத் | ஶூத்ராநாம் ஸா தேவாநாம் வ்ரதபதே வ்ரதேநாததாமீத்யந்யாஸாம் ப்ராஹ்மணீநாம் ப்ரஜாநாம் | வருணஸ்ய த்வா ராஜ்ஞோ வ்ரதபதே வ்ரதேநாததாமீதி ராஜ்ஞ: | இந்த்ரஸ்ய த்வேந்த்ரியேண வ்ரதபதே வ்ரதேநாததாமீதி ராஜந்யஸ்ய | மநோஸ்த்வா க்ராமண்யோ வ்ரதபதே வ்ரதேநாததாமீதி

वैश्यस्य। ब्राह्मणं वै देवानां व्रतवते व्रतेना- ध्यायीति राजन्यस्य। यथा देवतेभ्यो न व्रीयते। न देवतास्य शुश्रूष्येत। वैश्यानुमति இந்தமந்திரத்தில்யாகாதிகாரியங்களை குறிப்பிடவந்து வரிசையாய் மேலிலிருந்து சொல்லிவிட்டது. தவிர இதில் राजन्यः राजन्यः என்ற இரண்டு பதங்களின் பாஷியத்தில் राजन्यः என்பவன் பட்டாபிஷேகம் செய்யப்பட்டவனென்றும் राजन्यः என்றால் சாதாரண க்ஷத்திரியனென்றும் சொல்லியிருக்கிறது. இதை கவனிக்க வேண்டும். மற்றும்—

2வது காண்டம் 5வது பிரச்னம் 10வது அனுவாகத்தில் "त्रिष्टुभमनुब्रूयाद्राजन्यस्य । ओजो वै राजन्यः । ओज एवैनं स्तोमे प्रतिष्ठापयति । त्रिष्टुभा परिदध्यात् । इन्द्रियं वै त्रिष्टुगिन्द्रियकामः खलु वै राजन्यो यजते त्रिष्टुभैवास्मा इन्द्रियं परिगृह्णाति" என்று சொல்லிபிறகு "जगतीमनुब्रूयाद्वैश्यस्य जागतो वै वैश्यः । जगत्यामेवैनं स्तोमे प्रतिष्ठापयति। இந்த மந்திரத்தின் பாஷ்யதில் प्रजापतेः उरसो बाहुभ्यां च पञ्चदशस्तोमो राजन्यश्च उदपद्येतां अतः स्तोमो राजन्यस्य स्वकीयः। பிர்மாவின் மார்பிலிருந்தும் கைகளிலிருந்தும் கிரமமாய்ப் பஞ்சதச ஸ்தோமமும் ராஜன்யனும் உண்டானபடியால் இந்த ஸ்தோமம் ராஜன்யனுடையது. இது போலவே सप्तदशं निरमिमीत என்கிற வாக்கியத்திலும் பாஷ்யத்திலும் प्रजापतेर्मध्यदेशात् सप्तदशस्तोमो वैश्यश्च उदपद्येतां सप्तदशस्तोमो वैश्यस्य" பிர்மாவின் மத்திய தேசத்திலிருந்து சப்ததசஸ்தோமமும் வைசியனுமுண்டானது பற்றி இந்த ஸ்தோமம் வைசியனுடையது என்று சொல்லியிருக்கிறது. ஆனல் பாஷ்யத்தில், இப்படிச் சொல்ல ஆதாரமெங்கே. பாஷ்யகாரரும் நம்மைப் போல் ஒருவர் தானென்பீர்கள். அதனுடைய மூலப்பிரமாணங்களை இங்கு காட்டுகிறேன்.

7வது காண்டம் 1வது பிரசனம் 1வது அனுவாகம் 4வது பஞ்சாதி "प्रजापतिरकामयत प्रजायेयेति" என்ற மந்திரக்

தில் "தமக்நிர்தேவதா அந்வஸ்ருஜ்யத காயத்ரீச்சந்தோ ரதம்தரம்
ஸாம ப்ராஹ்மணோ மநுஷ்யாணாமஜ: பஶூநாம் தஸ்மாத்தே
முக்யா முகதோ ஹ்யஸ்ருஜ்யந்த। உரஸோ பாஹுப்யாம் பஞ்சத
ஶம் நிரமிமீத தமிந்த்ரோ தேவதா அந்வஸ்ருஜ்யத த்ரிஷ்டுப்சந்தோ
ப்ருஹத் ஸாம ராஜந்யோ மநுஷ்யாணாமவி: பஶூநாம் தஸ்மாத்தே
வீர்யாவந்தோ வீர்யாத்த்யஸ்ருஜ்யந்த மத்யத: ஸப்ததஶம் நிரமிமீத தம்
விஶ்வேதேவா தேவதா அந்வஸ்ருஜ்யந்த ஜகதீச்சந்தோ வைரூபம்
ஸாம வைஶ்யோ மநுஷ்யாணாம் காவ: பஶூநாம் தஸ்மாத்த
ஆத்யா அந்நதாநாத்த்யஸ்ருஜ்யந்த தஸ்மாத்பூயாம்ஸோ அந்யே
ப்யோ பூயிஷ்டா ஹி தேவதா அந்வஸ்ருஜ்யந்த பத்த ஏக
விம்ஶம் நிரமிமீத தமநுஷ்டுப்சந்தோ அந்வஸ்ருஜ்யத வை
ராஜம் ஸாம ஶூத்ரோ மநுஷ்யாணாமஶ்வ: பஶூநாம்
தஸ்மாத்தௌ பூதஸங்க்ராமிணாவஶ்வஶ்ச ஶூத்ரஶ்ச தஸ்மா
ச்சூத்ரோ யஜ்ஞேநவக்லுப்த:। நஹி தேவதா அந்வஸ்ருஜ்யத
தஸ்மாத்பாதாவுபஜீவத: பத்தோ ஹ்யஸ்ருஜ்யேதாம்॥

பிர்மா வானவர் பிரஜைகளை சிருஷ்டிக்க ஆரம்பித்த காலத்தில் தேவதைகளுக்குள் அக்னியையும், காயத்ரீ சந்தஸ்ஸையும் சாமவேதத்திற்குள் ரதந்தர ஸாமாவையும், மனுஷ்யர்களுக்குள் பிராமணர்களேயும், பசுக்களுக்குள் அஜம் என்ற ஆட்டையும் சிருஷ்டித்தார். இவர்கள் முக்கியர்களாகையால் முகத்திலிருந்து சிருஷ்டிக்கப்பட்டார்கள். மார்பிலிருந்தும் கையிலிருந்தும் பஞ்சதசம் என்பதையும், தேவர்களுக்குள் இந்திரனையும் திருஷ்டுப் சந்தஸ்ஸையும்,பிருகத்ஸாமாவையும் மனுஷ்யர்களுக்குள் க்ஷத்திரியர்களே யும்,பசுக்களுக்குள் அவியென்றஆட்டையும் சிருஷ்டித்தார். அவைகள் வீரியத்தோடு கூடின ஸ்தானத்திலிருந்து உண்டானதால் வீரியத்துடன் சிருஷ்டிக்கப் பட்டன. மத்தியிலிருந்து ஸப்ததசம் சிருஷ்டிக்கப்பட்டது. அதை அனுசரித்து விசுவே தேவர்களென்ற தேவர்களும் உண்டானார்கள். ஜகதீ சந்தஸ்ஸும் வைரூபஸாமாவும் மனுஷ்யர்களுக்குள் வைசியர்களும் பசுக்களுக்குள் மாடுகளும்சிருஷ்டிக்கப்பட்டன. இவைகள் தான் எல்லாவற்றிற்கும் ஆதாரமாயும்,

அன்னத்தைக் கொடுப்பவைகளாயும் சிருஷ்டிக்கப்பட்டபடியால் இதில் அநேக தேவதைகள் சிருஷ்டிக்கப்பட்டார்கள். காலிலிருந்து ஏகவிம்சமென்பது சிருஷ்டிக்கப்பட்டது. அனுஷ்டுப் சந்தஸ்ஸூம் வைராஜ்சாமாவும், மனுஷ்யர்களுக்குள் சூத்திரர்களும், பசுக்களுக்குள் குதிரையும் சிருஷ்டிக்கப்பட்டன. ஆகையால் இச்சூத்திரனும் குதிரையும் பூதசங்கிராமிகளெனவும் படும். அதாவது பிராணிகளை அண்டிப்பிழைப்பது என்று பொருள். ஆகையால் சூத்திரனுக்கு யக்ஞத்திலதிகாரமில்லை. ஏனெனில் இவர்களுடன் தேவதைகள் உண்டாகவில்லை. ஆகையால் இவர்கள் பாதத்தையே அண்டிப் பிழைக்கவேண்டும். ஏனெனில் காலிலிருந்தல்லவா உண்டானர்கள். இந்த மந்திரத்தில் வெளிப்படையாய்ப் பிராமணர்களை முக்கியமென்றும் மற்றவர்களைக் கீழ் என்றும் காண்பித்திருக்கிறது. மற்றும்.

முதல் அஷ்டகம் முதல் பிரச்னத்தில் "𑌵𑌸𑌨𑍍𑌤𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌮𑌾𑌦𑌧𑍀𑌤। 𑌵𑌸𑌨𑍍𑌤𑍋 𑌵𑍈 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯𑌰𑍍𑌤𑍁𑌃। 𑌸𑍍𑌵 𑌏𑌵𑍈𑌨𑌮𑍃𑌤𑌾𑌵𑌾𑌧𑌾𑌯। 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌰𑍍𑌚𑌸𑍀 𑌭𑌵𑌤𑌿। 𑌮𑍁𑌖𑌂 𑌵𑌾 𑌏𑌤𑌦𑍃𑌤𑍂𑌨𑌾𑌂। 𑌯𑌦𑍍𑌵𑌸𑌨𑍍𑌤𑌃। 𑌯𑍋 𑌵𑌸𑌨𑍍𑌤𑌾𑌗𑍍𑌨𑌿𑌮𑌾𑌧𑌤𑍍𑌤𑍇। 𑌮𑍁𑌖𑍍𑌯 𑌏𑌵 𑌭𑌵𑌤𑌿। 𑌅𑌥𑍋 𑌯𑍋𑌨𑌿𑌮𑌨𑍍𑌤𑌮𑍇𑌵𑍈𑌨𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌤𑌮𑌾𑌧𑌤𑍍𑌤𑍇। 𑌗𑍍𑌰𑍀𑌷𑍍𑌮𑍇 𑌰𑌾𑌜𑌨𑍍𑌯 𑌆𑌦𑌧𑍀𑌤। 𑌗𑍍𑌰𑍀𑌷𑍍𑌮𑍋 𑌵𑍈 𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌰𑍍𑌤𑍁𑌃। 𑌸𑍍𑌵 𑌏𑌵𑍈𑌨𑌮𑍃𑌤𑌾𑌵𑌾𑌧𑌾𑌯। 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑍀 𑌭𑌵𑌤𑌿। 𑌶𑌰𑌦𑌿 𑌵𑍈𑌶𑍍𑌯 𑌆𑌦𑌧𑍀𑌤। 𑌶𑌰𑌦𑍍𑌵𑍈 𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌯𑌰𑍍𑌤𑍁𑌃। 𑌸𑍍𑌵 𑌏𑌵𑍈𑌨𑌮𑍃𑌤𑌾𑌵𑌾𑌧𑌾𑌯। 𑌪𑌶𑍁𑌮𑌾𑌨𑍍𑌭𑌵𑌤𑌿" இதற்குபாஷ்யம். 𑌵𑌸𑌨𑍍𑌤𑌃 𑌵𑌸𑌨𑍍𑌤𑌰𑍍𑌤𑍁𑌃 𑌤𑌸𑍍𑌯 𑌚 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯 𑌚 𑌪𑍍𑌰𑌾𑌥𑌮𑍍𑌯𑌸𑌾𑌮𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌭𑌾𑌵𑌾𑌚𑍍𑌸𑍍𑌵𑌕𑍀𑌯𑌰𑍍𑌤𑍍𑌵𑌾𑌯𑌾𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑍋𑌚𑌿𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌰𑍍𑌚𑌸𑌮𑍇𑌵 𑌫𑌲𑌮𑍍॥ வர்ணங்களுக்குள் பிராமணன்முதல்மையானவன் போல் ருதுக்களுக்குள் வசந்த ருதுவும் முந்தியதால் அது பிராமணனுக்கு சொந்தமானது. அதில் ஆதானம் செய்வதால் அவனுக்கு ஏற்படவேண்டிய பிர்மவர்ச்சஸ் உண்டாகும். அப்படியே க்ஷத்திரியன் தன் ருதுவிற் செய்வதால் அவனுக்குச் சொந்தமான வீரியத்தையும், வைசியனுக்குப் பசுசமிருத்தியையும் காண்பித்திருக்கிறது. இதில் ஏற்பட்டிருக்கும் வேற்று

மையை கவனியுங்கள். இன்னும் இந்த மந்திரத்தின் பாஷ்யத்தில் ஓர் உபமானம் சொல்கிறார். அதாவது எப்படி ஓர் புருஷன் தனது ஸ்திரீயின் ருதுகாலத்தில் சாஸ்திரோக்தரீதியாய்ப் பிரவேசித்து வீரியவானும் சிரேஷ்டமாயும் தீர்க்காயுளை உடையவனுமான குழந்தையை அடைவானோ அது போல் அவனவன் தனக்கேற்பட்ட ருதுகாலங்களில் ஆதானம் செய்வதால் தனக்கேற்படவேண்டிய பிர்மவர்ச்சஸ் முதலிய தேற்படுமென்றிருக்கிறார்.. இந்த மந்திரம் ([illegible]) என்ற சுலோகத்திற்கு பலமாய் நிற்கிறது. மற்றும்-

சூத்திரனென்பவன் வேத சப்தத்தையே கேட்கலாகாது. விரும்பிக் கேட்டால் அவன் காதில் அரக்கையும் ஈயத்தையும் காய்ச்சி ஊற்றவேண்டும். உச்சரிப்பானேயாயின் நாக்கை யறுக்கவேண்டும் என்று கௌதம தர்மத்திற் கூறியுளது.

இன்னும் 3வது அஷ்டகம் 2வது பிரச்னத்தில் அக்னிஹோத்திரத்திற்காகக் கறக்கும் பாலை சூத்திரன் கறக்கக்கூடாதென்று "[illegible]" என்று விஸ்தாரமாய்ச் சொல்லியிருக்கிறது. "[illegible]" என்றும் இன்னோரிடத்தில் இன்னும் இதைப்போல் சுருதிகள் ஏராளமாய்க் கூறலாமாயினும் புத்திசாலிகளுக்கு இம்மட்டே போதுமென்றுமட்டிலும் நிறுத்துகிறேன். இனி வேதப்பிராமணமில்லையென்று கூறவேண்டாம். இதில்லாததுபற்றி ஸ்மிருதி தள்ளுபடி என்பதும்வேண்டாம். இதனால் 27 பதிலளிக்கப்பட்டது. இனி1-முதல் கக முடியக்கேட்ட.விஷயங்களைக்கவனிப்பாம். இச்சாதி யென்பது மனுஷ்யர்களது அங்கத்தில்தானிருக்கிறது. காணப்படலாம் , எவ்விதமெனின் அநேகமாய் இவன் இச்சாதியோனென்று ஊகிக்க முகக்குறி இருக்கும்.

இப்பெயர் தேகத்திற்கா ஜீவனுக்கா வென்பதற்கு பதில் முன்னமே கூறப்பட்டுவிட்டது. ஆனால் பயனை அடைந்தபிறகுவிட்டுவிட

லாமாவென்றொரு கேள்வி கேட்டீர்கள். இது முடியாது. ஏனெனில் இச்சாதியென்பதை நாம் சங்கேதத்தினமேற்றுக் கொள்ளவில்லை வேதம் முதலியவைகளின் ஆணைக் குட்பட்டு வருகிறது. ஆதைவிட நம்மாலாகாது "ஶ்ருதிஸ்ம்ருதீ மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே | ஆஜ்ஞாச்சேதீ மமத்வேஷீ மத்பக்தோபி ந ஜாயதே" சுருதியும் ஸ்மிருதியும் எனது கட்டளை. எவனொருவன் அதை மீறுகிறானோ அப்படிப்பட்டவன் எனக்குச் சத்துரு. யான் அவனைக்கொல்வேன் என்றபடி அதை மீறினல் ஈசனது தண்டனைக்கு ஆளாவோம்.

அந்தந்த ஜாதியிலிருந்து அதன் பலனை அடைந்த பிறகு விடலாமோவென்கிறீர்கள். அப்போது அவன் அதை விடுவதற்காகக்கிழக்குமுகமாய் உட்கார்ந்து சங்கல்பம் செய்யவேண்டாம். மற்று அது இயற்கையாய் விலகிவிடுமென்று முன்னரே தெரிவித்தேன். அவனவன் கன்மபலனுக்குத் தக்கபடி தேவத்தன்மையையோ மனுஷ்யத்தன்மையையோ அதினும் கீழ் ஜன்மத்தையோ அந்தந்த ஜன்மத்தை அவன் வேண்டாதவனு யிருந்தாலும் அடைந்தே தீருவான். இதில் 13வது விஷயத்தைச் சற்று நன்கு கவனிப்போம்.

இப்போ திருக்கும் பிராமணர்கள் சூத்திரர்களை, த்வேஷம் செய்கிறார்களென்றும் பஞ்சமஜாதியனைக் கண்டால் சமீபத்தில் நெருங்காதே என்று சொல்கிறார்களென்றும்அதனல்இப்படி ஒற்றுமையில்லாததனலேயே நமது நாடு கெட்டுவிட்டதென்றும்சிலர்என்னுகிறார்கள். இது முற்றிலும் பிசகு. சமீபத்தில் வராதே என்றும் தொடாதே யென்றும் சொன்னதினல் என்ன நஷ்டம். இதனல் அவனுக்குத் தான் என்னகுறைவு. நமது தேகமும் அவனது தேகமும் ஒரே இலையில் சாப்பிட்டு ஒரே படுக்கையிற் படுத்தால் தானு சிநேகம் பெருகும். இவைகளால் அவனை யாம் த்வேஷிப்பதாய் ஆகாது. அவர்களிடத்தில் பரமகருணையை வைத்து நமது முன்னேர்கள் செய்திருக்கும் காரிய மென்னவென்றல் இன்னான் மரவேலை செய்யவேண்டும். இன்னான் விவசாயத்தொழில் செய்யவேண்டும். இன்னான் வீடுகட்டவேண்டும் என்று ஒவ்வொன்றுக்கும் வரம் பேற் படுத்தி ஒருவனது தொழிலை ஒருவன், புரிந்தால் அவன் பதிதனுவானென்றும் கூறி ஒருவனே

டொருவனுக்கு விரோதமேற் படாமலிருக்கும்படி அவ்வளவு கருணையோடு ஒவ்வொரு சாஸ்திரமும் எழுதிவைத்த மகான்கள் பிராமணகுலத்திலுதித்த நமது முன்னோர்கள் தான். எல்லாம் ஒன்றென்று முன்னே வைத்திருந்தால் இன்னான் இன்ன செய்கிறதென்ற நியமமற்றுப் போய் விடுமானதால் வியவஸ்தையில்லாமல் ஒருவரோடொருவருக்குக் கலகமேற்பட்டு அலைந்து குலைந்திருக்குமென்பதைத் திண்ணமாய் நம்புங்கள். இதை யெல்லாம் நிஷ்யாமல் கேவலம் முன்னோர்களையே தூஷிப்பதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டு திரியும் சிலருக்காக மீண்டும் இதனை இவிடம் விரித்துச் சொல்கிறேன்.

நீங்கள் சூத்திரர்கள் சுச்ரூஷை செய்வதென்றால் ஏதோ அடிமை வேலை ஈனமாய்ச் செய்வதென்று எண்ணியிருக்கிறீர்கள். இது பிசகு. ஏதோ முன்னோர்கள் தங்கள் வம்சத்திற்காக மட்டிலும் அநேக காரியம் செய்து வைத்துவிட்டார்களென்றும் நினைக்கிறீர்கள். அதுவு மல்ல. அவர்கள் எப்படித் தன் ஜாதி நற்கதிபெறும் பொருட்டும் அவர்கள் விருத்தியை உத்தேசித்தும் பிர்ம வித்யா விஷயமான கிரந்தங்களை எழுதி வைத்தார்களோ? அப்படியே க்ஷத்திரியர்களினிமித்தம் அநேக நீதிக்கிரந்தங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இவர்களினிமித்தம் தண்டநீதிக் கிரந்தங்களை எழுதிவைத்த பகவான் வியாஸர், நாரதர், காமந்தகர், சுக்கிரன், கடகர்ப்பான், சாணக்கியன்முதலியவர்கள் பிராமணர்களல்லவா. யுத்தவித்தியையை உபதேசித்தவர்களுமான சுக்கிரன் முதலானவர்களும் பிராமணர்கள் தான். வைசியர்களினின் நிமித்தம் பசுபாலன முறையை இயற்றிய மகான்கள் தங்களுக்காகவா ஏற்படுத்திக் கொண்டார்கள். இல்லை இல்லை. வைசியர்களுக்காகவே இயற்றி பிருகத்ரதனென்பவனுக்கு உபதேசித்த பகவான் பராசரர் பிராமணோத்தமர் தான். அப்படியே அசுவலக்ஷணங்களை எழுதிவைத்தமகான் சாலிஹோத்ரரென்பவர் வேதியன். யானைக்காக ஆயுர்வேத சாஸ்திரமெழுதி வைத்த மகான் பாலகாப்யரென்பவர் பிராமணோத்தமர். இந்த வைத்தியத்தை இவர் பார்த்தாரா! அல்லது பிராமணனுக்கே இது என்று சொன்னாரோ!

இரண்டுமில்லை. கிருஷிக்கு உபயுக்தமாய் பூபரிக்ஷை வழி காண்பித்தவர்கள் சாம்ஹதிகர்களெனப்படுவார்களாம். இவர்களும் பிராமண குலத்திலுதித்தவர்கள்தான். பிராமணர்கள்தான் விருக்ஷாயுர்வேதமெழுதினர்கள். அதில் ஓரிடத்தில் முளைத்திருக்கும் கன்களை மற்றோரிடத்திற்குக் கொண்டுபோகும் கிரமம், பூமியின் ரோகலக்ஷணங்கள், அதற்குச் செய்யவேண்டிய சிகித்ஸை, விருக்ஷங்களின் ரோகவிசேஷங்கள், அதற்கு மாற்றல், புஷ்பம் அதிகமாய் உண்டாகச்செய்தல், அகாலத்திலும் பலிக்கச்செய்தல், கன்களை நடுவதற்கு வேண்டிய இடைவெளி பதிகம்போடவேண்டிய கிரமம், விதைகளைமுதலில் சம்ஸ்காரம் செய்யும் முறை ஆகிய இன்னும் அநேகவிதங்கள் வெகு விஸ்தாரமாய் அக்கிரந்தத்தில் செய்யப்பட்டுள்ளதாய் யான் கேள்வியுற்றிருக்கிறேன். ஐயோ! அப்படிப்பட்ட கிரந்த ரத்தினங்களை யெல்லாம் பறிகொடுத்தது மன்றி விசாரமற்றிருக்கிறதோடு நில்லாமல் இவைகளுக்கெல்லாம்முன்னோர்கள் என்ன சொன்னார்கள். ஒன்றும் கூறவேஇல்லை என்று ஏதோ சிலபோலிநவீனபரிஷ்காரங்களைக்கண்ணுற்றுமனமகிழ்ந்து அப்படிப்பட்டவர்களுக்கு நற்பட்டமும் நமது முன்னோர்களுக்கு அசட்டுப்பட்டமும்கட்டுகின்றோம் இதுநிற்கட்டும் சூத்திரர்களுக்காகச்செய்திருக்கும் விஷயங்களைப் பாருங்கள். ஈனத்தொழிலேற்படுத்திஇருக்கிறார்களா வென்றும் கவனியுங்கள். நாட்டியத்தில் ஜீவிக்கவேண்டியவர்கள் சிலசூத்திரர்களென்று பாரத நாட்டியசாஸ்திர மெழுதிவைத்த பாதாசாரியர் பிராமணன், தன் பெண்நாட்டியமாடிப்பிழைக்கட்டுமென்று சிரமப்பட்டு எழுதிவைத்தார். வாசனைத்திரவியம் சேர்ப்பதினால் சிலர்ஜீவிக்கட்டு மென்று கந்தசாஸ்திரமெழுதிவைத்தவர் அத்ரியென்ற பிராமணோத்தம மகரிஷி. ஸ்ரீராமர் இவரது ஆசிரமம் போகவும் அனசூயை சீதைக்குவிசேஷமாய்வாசனைத் திரவியங்களால் உபசரித்தாளென்று ராமாயணத்தில்கூறப்பட்டுளது. அப்படியே காளிதாஸனும் ரகுவம்சத்தில் "[illegible] [illegible]" அனசூயையால் சீதைக்குக்கொடுக்கப்பட்ட திவ்ய வாசனைத்திரவியத்தின் வாசனையானது அந்தக்காட்டில் புஷ்பங்களில் உட்கார்ந்திருந்த எல்லா வண்டுகளையும் இழுத்ததென்றார். இவர் தனக்காகவா செய்துகொண்டார். வஸ்திரம் நெய்

யும் சூக்ஷ்மவிதியைக் கண்டவர்கள் பிராமணர்களே.ரதம் முதலான வைசெய்யவும் வாஸ்து நிர்மாணம் செய்யவும் சாஸ்திரம்எழுதிவைத்தவர் யார்! சித்திரசாஸ்திர வழி கண்டவர் யார். வீணில் வளர்ப்பானேன். பிராமணர்கள் சொல்லாமல் புதிதாய்ஒன்று இருக்கிறதென்று முக்காலத்திலும் சொல்லத் துணிவீர்களா.நல்லது. இவ்வளவெல்லாம் எழுதிவைத்த மகான்கள் யாராவதுஒருவர் இவைகளை அனுஷ்டித்திருக்கிறார்களா! இல்லை. இவர்களுக்குவேதங்களும்தர்மசாஸ்திரங்களுமே கதி. பிராமணர்களும் மற்றவர்களும் எந்த விருத்தியையேனும் ஆபத்காலம் நேருமாயின் அப்போது மட்டிலும் இஷ்டம்போல் ஸ்வீகரிக்கலாமே தவிர மற்ற காலங்களில் தொடவே கூடாது என்று சபித்திருக்கிறார்.

அதிலும் பிராமணன் சூத்திரவிருத்தியை மட்டிலும் தொடவே கூடாது என்று “ வைவ ஶூயாஜ வூத்திரஸைவெ௱ ஞ”என்று கௌதமர் தடுத்திருக்கிறார். பிராமணர்கள் சஸ்திரமெடுத்து ஜீவிக்கவில்லை. ஒருவராவது வைசியவிருத்தியிலாவது சூத்திர விருத்தியிலாவது பிரவேசிக்கவில்லை. நமது முன்னோர்களது கருணையைப்பாருங்கள்.எந்த மகான் வாஸ்துசாஸ்திரமெழுதி வைத்தாரோ அம்மகானுக்குக் குடிசை தான் அரண்மனை.எவர் வாசனைத்திரவியவழி சொன்னாரோ அவர் பூசிக்கொண்டது பஸ்மம். எவர் ஆபரண நிர்மாணவழி சொன்னாரோ அவரது ஆபரணம் ருத்திராக்ஷம் முதலியவை. எவர் வஸ்திரநிர்மாண சாஸ்திரக்காரரோ அவருக்கு வஸ்திரம்மரப்பட்டை. எவர் கிருஷிசாஸ்திர மெழுதினரோ அவரது ஆகாரம் சறகு கிழங்குகள். பிராமணர்கள் செய்த காரியம் ஒவ்வொன்றும் பிறனுக்கே தவிர தனக்காக ஒன்றுமில்லை. சாணக்கியனென்ற ஓர் பிராமணன் நந்தகுலத்தை நாசம் செய்து சந்திரகுப்தனுக்குப் பட்டம் கட்டி அவனை விருஷளப்பயலே என்று அழைத்துக்கொண்டிருந்தார். அப்படிப்பட்ட மகானுடைய வீட்டை வர்ணிக்கும் காலையில் அமியும் முட்டையும் சாணியும் இருந்ததென்று சொல்லி யிருக்கிறது. இவருக்கு வேறொன்றும் கிடைக்கவில்லையா பாருங்கள்?

ஆரியர்களே?இவ்வளவுதூரம் சொன்னது எதற்காகவென்றால் சூத்திரர்களை ஈனமாய்த்தொழில் செய்யச் சொன்னார்களென்று

அவர்களை இகழ்ந்ததற்கு அது வேண்டாமென்று மட்டிலும் காட்டவந்தேனே தவிர வேறல்ல. நகைகள் செய்வதும் வீடுகட்டுவதும் ரதம் முதலியது செய்வதும் சித்திரிப்பதும் முதலியன் ஈனத்தொழிலா! இவைகளெல்லாம்மற்ற மூவருணங்களின்சுச்ருஷையில்லையா? இன்னும் கணக்குப்பிள்ளை வேலை பார்ப்பதுசூத்திரனுடையது. அவர்களைக் காயஸ்தர்களென்று சொல்வது வழக்கம். ஆகவே ஏதோசூத்திரர்களை த்வேஷிக்கிறார்களென்றதற்காக இவ்வளவு சொல்ல நேர்ந்தது. த்வேஷமென்பது முன்னுமில்லை பின்னுமில்லை. சூத்திரர்களைத்தொடாமலும் பறையன் முதலியவர்களைச்சமீபத்திலழைக்காமலுமே அவர்களிடத்தில கருணையைச் செலுத்தி சகோதரர்கள் போல பாவிக்க வழி யுண்டு. தொட்டும் நெருங்கியும் நேசிப்பது அனர்த்தமாய் முடியும் என்பதை நன்கு அறிந்து கொள்ளுங்கள். இதுமட்டுமா அவ்விதம் செய்த முன்னோர்கள் ஈனஜாதி வரை வைத்திருந்ததையும் அவர்கள்மேற் சாதியினிடத்தில் வைத்திருந்த பக்தி விசுவாசமும் முன்னோர்களது மகிமையைத் தியானிப்பவனுக்கே விளங்கும். இப்போது செய்யும் புதுச்சீர்திருத்தகாரர்களுக்கு அவர்களிடத்தில் ஒரு நாளும் சகோதரபாவம் ஏற்படாது. மற்று விசேஷமாய் அவமானமும் கஷ்டமுமே நேருமென்பதை இனி அனுபவத்திலறியலாம். இது இத்துடன் நிற்கட்டும்.

இனி 18வது கேள்வியை விசாரிப்பாம். இது வாஸ்தவம் தான். எல்லாரும் பிறப்பால் சூத்திரனாகத்தான் ஜனிக்கிறார்கள், பிறகு "ஸம்ஸ்காராஜ்ஜாயதே த்விஜ:" என்றபடி கன்மத்தினால் த்விஜனாகிறானென்பதும் மெய். இதில் உங்களுக்கு யாதொரு அனுகூலமுமில்லை. நீங்கள் கன்மத்தினால் த்விஜனாகிறானென்றால் எல்லாரும் ஆவரென்று நினைக்கிறீர்கள். அது பிசகு. த்விஜன் என்றால் இரண்டு பிறப்புள்ளவன் என்று பொருள். ஆகவே பிராமணன் க்ஷத்திரியன் வைசியன் இம்மூவர்களே த்விஜத்தன்மைபெறுவார்களே தவிர சூத்திரனடையமாட்டான். ஏனெனில், "ஶூத்ரஸ்சதுர்த்தோ வர்ண ஏகஜாதி:।" சூத்திரன் நான்காம் வருணத்தவன் ஒரே ஜாதியென்று வேதம் முதலியன கூறுகின்றன. ஆனால் சஸ்கார

ம்பெறுகிறவரை இம்மூவர்களும் சூத்திரர்களோவென்றால் அதல்ல, “ப்ராகுபநயநாத் காமசாரகாமவாதகாமபக்ஷா” உபநயனத்திற்குமுன் இஷ்டப்படி சஞ்சாரம், பேசுதல் புசித்தல், என்றசூத்திரப்படி வரம் பேற்படாததால் சூத்திரனென்றுஉபசரித்ததே தவிர உண்மையல்ல. இது எதுபோலென்றால் நமது சாஸ்திரங்களில் ஸ்திரீயையும் சூத்திரனையும் சமமாய் பாவித்து சாஸ்திரம் விதித்திருந்தாலும் எல்லா விஷயங்களிலும் எப்படி நினைக்கவில்லையோ அதுபோல். ஆனதால் இது உபயோகமில்லை.

இனி இவ்வளவுக்குப் பிறகு யான் ஒரு ஆசங்கையை உண்டு பண்ணுகின்றேன். அதாவது அகண்டமான இப்பூமண்டலத்தைப்பரமேசன் பக்ஷமின்றி சிருஷ்டித்தார் அதில் மிகவும் ஸ்வல்பமான பாகம் இப்பரதகண்டமென்பது. இதில்தான் நீங்கள் சொல்கிறபடி சாதுர்வர்ண்ய வியவஸ்தை. உத்தம ஜாதிக்குப் பூஜ்யதை மோக்ஷமடையவேண்டிய வழி சாஸ்திரங்கள் என்கிறீர்களே? இவ்விதம் ஈசன் சிருஷ்டித்திருப்பாரா? எல்லாரும் அவருடையபிள்ளைகளில்லையா? ஒருபிள்ளைக்குப் பாலும் மற்றொரு பிள்ளைக்கு விஷத்தையும் ஒரு பெற்றதாய் மனதோடு ஊட்டுவாளா! அநேக பிள்ளைகள் கடைத்தேற வழியில்லை யென்று செய்துவிட்டு கையகல பூமியில் தானா இவ்விதம் சிருஷ்டிப்பார்- இது உண்மையாயிருப்பின் ஈசன் வைஷம்ய நைர்க்கிருண்யமுள்ளவனென்று ஏன் சொல்லலாகாது. ஈசன் கருணாமூர்த்தி என்பது உண்மையாய் இருப்பின் எல்லாரையும் ஒன்றுபோல் சிருஷ்டித்திருப்பாராதல் பற்றி ஜாதிபேதம் வைத்து மேல்கீழ் என்று புகழ்ந்துகொள்வது ஒருபோதும் ஏற்றதன்று விடுங்களெனலாம்.

இதற்குச்சமாதானம் யான் நன்கு உரைக்கவேண்டியதுதான். ஆயினும் இங்கு சொல்லித்தான் தீரவேண்டுமென்பதற்குக் கட்டுப்பட்டவனில்லை. ஏனெனில் இவ்வளவு தூரம் இங்கு சொல்லிவந்ததெல்லாம் யாருக்காகவெனில் வேதங்களிலும் ஸ்மிருதிகளிலும் கட்டுப்பட்டு அதன்படி வழுவாமல் நடக்கிறோம் என்று கூறிக்கொண்டு வேதங்கள் ரீதியாய் ஜாதியென்பது கிடையாது என்று துணிந்து கூற வந்தவர்களுக்குத் தான். இனி இவ்விதம் கேட்பவர்கள் மிகப் பெரியோர்களாகையால் இது ஒன்றும் பிரயோஜன

ப்படாததாலும் பற்றி இப்போது அந்தப் பிரஸ்தாபத்தை எடுக்க வில்லை. அதுவும் அவசியமாயின் லோக சிருஷ்டியின் வித்தியாசம் என் என்று மகுடம் பூட்டி ஓர் விஷயம் வரைந்தால் அதற்குச் சமாதானம் எதிரியும் ஒப்புக்கொள்ளும்படி சொல்ல குரு கிருபை இருக்குமென்று இதை இங்கு பிரஸ்தாபிக்கவில்லை.

ஆரியர்களே ? இவைகளை யெல்லாம் யோசிக்கும்போது நமது முன்னோர்களின் கருணையைப் பெருகவிடும் பவிஷ்யத் புராணத்தின் ஒரு சுலோகத்தை நினைவு மூட்டுகிறது. அதாவது-

‘𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌃 𑌕𑌲𑌿𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 | 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑍇𑌵 𑌬𑌾𑌧𑌨𑍍𑌤𑍇 𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌨𑍍 𑌕𑍃𑌶𑌾𑌨𑍍 ‖ “ராக்ஷஸர் கலியுகத்தில் பிராமணயோனியிற் பிறந்து பிராமணர்களையே துன்பப்படுத்துவார்கள். அதிலும் வேதமார்க்கத்தினின்றும் வழுவாதிருப்பவர்களை மிகவும் துன்பப் படுத்துவார்கள்என்கிறார்.” இதுவும் இப்போது நமது அனுஷ்டானத்திலிருப்பதால் இவ்விஷயத்தில் விசேஷ சிரமம் எடுத்துக் கொள்வதும் பயன் பெருமோவென்று சந்தேகிக்கிறேன்.

இனிப் பெரியோர்களது சந்தோஷத்திற்காகவும் என் மனதின் ஆருதலுக்காகவும் சில பவிஷ்யத் புராண சுலோகங்களைக் கூறி இவ்வுபன்யாஸத்தை இன்று முடித்துக்கொள்கிறேன். அவைகள் நமக்கு எவ்வளவு சாதகமாய் இருக்கிறதென்பதை கவனமாய்க் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

விஷ்ணு புராணம் ஆருவது அம்சத்தில் முதல் அத்தியாயத்திலும் மற்றதிலும்

𑌪𑌰𑌾𑌶𑌰 𑌉𑌵𑌾𑌚 | 𑌕𑌲𑍇𑌸𑍍𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌮𑍈𑌤𑍍𑌰𑍇𑌯 𑌯𑌦𑍍𑌭𑌵𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑌿 | 𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑍂𑌯𑌤𑌾𑌂 𑌸𑌮𑌾𑌸𑍇𑌨 𑌵𑌰𑍍𑌤𑍍𑌤𑌤𑍇 𑌯𑌨𑍍𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑍇 ‖ 𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌚𑌾𑌰𑌵𑌤𑍀 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌨 𑌕𑌲𑍌 𑌨𑍃𑌣𑌾𑌮𑍍 | 𑌨 𑌸𑌾𑌮𑌰𑍍𑌗𑍍𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣 𑌵𑌿𑌨𑌿𑌷𑍍𑌪𑌾𑌦𑌨𑌹𑍇𑌤𑍁𑌕𑌾 | 𑌵𑌿𑌵𑌾𑌹𑌾 𑌨 𑌕𑌲𑍌 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾 𑌨 𑌶𑌿𑌷𑍍𑌯𑌗𑍁𑌰𑍁𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 | 𑌨 𑌦𑌾𑌮𑍍𑌪𑌤𑍍𑌯𑌕𑍍𑌰𑌮𑍋 𑌨𑍈𑌵 𑌵𑌹𑍍𑌨𑌿𑌦𑍇𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌃 𑌕𑍍𑌰𑌮𑌃 ‖ 𑌯𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌕𑍁𑌲𑍇 𑌜𑌾𑌤𑍋 𑌬𑌲𑍀 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 𑌕𑌲𑍌 | 𑌸𑌰𑍍𑌵𑍇𑌭𑍍𑌯 𑌏𑌵 𑌵𑌰𑍍𑌣𑍇𑌭𑍍𑌯𑍋 𑌯𑍋𑌗𑍍𑌯𑌃

[illegible]

[illegible]

பராசரர் மைத்திரேயரைப்பார்த்துச் சொல்கிறார். கலியின் ஸ்வரூபத்தை நீ முழுமையையும் அறிய விரும்புகிறாய். அதைச் சொல்லுகிறேன் கேள். கலியுகத்தில் வர்ணாசிரமாசார சம்பந்தமான பிரவர்த்தி இராது. ருக், யஜுஸ், சாமம், அதர்வணம்

இவைகளின் பிரயோஜனத்தை அறியுமாட்டார்கள். கலியில் விவாகம் தர்மப்படி நடவாது. குரு சிஷ்யர்களின் வரம்பு காணப்படாது. தம்பதிகளின் கிரமம் காணப்படாது. அக்னி, தேவன் இவர்களது உபாஸனை இராது. எவனெவனுக்கு எதெது வார்த்தையோ அதெல்லாம் சாஸ்திரம் தான். உயர்ந்த குலத்திலுதித்த போதிலும் கலியில் பலிஷ்டன் தான் ஸர்வேசுவரன். எல்லா வருணங்களிலிருந்தும் பணங்கொடுப்பவன் பெண்ணுக்கு வரனுவான். கலியில் பிராமணன் எதாவது ஒரு யோகத்தை அடைந்து தீக்ஷைபெருவான். கலியில் பிராயச் சித்தம் இஷ்டம்போலெல்லாம் நடக்கும். கலியில் இஷ்டப்பட்டதெல்லாம் தெய்வம் தான். இஷ்டப்பட்ட ஆசிரமத்தை யெல்லாமடைவார்கள். உபவாஸம் முதலியது கிடையாது. தர்மமென்பது தன் இஷ்டப்படி நடத்துவதெல்லாம்தான். கலியில் அல்ப திரவியத்தினுலேயே பணக்காரனென்ற மதமடைவான். தங்கம் ரத்தினம் முதலியவைகள் அழிந்து விடும். அதனுல் ஸ்திரீகளுக்குக் கேசங்களாலேயே ரூபவதி யென்ற மதமுண்டாகும். பணம் சேர்ப்ப தெல்லாம் வீட்டிற்குத்தான். பணம் சேர்ப்பது மட்டுக்குந்தான் புத்தியேற்படும். அந்தப் பணமும் தன் வயிற்றின் பிரயோஜனம் மட்டில்தான் முடியும். இவ்விதம் கலியுகத்தில் முடியும். மழையில்லாததாலும் பலவிதமான பயத்தாலும், பசியினுலும் வருந்திக்கொண்டு ஆகாயத்தையே பார்க்கும்படி ஆகப் போகிறது. மனிதர்கள் கிழங்குகளைத் தின்றுகொண்டு வேறு கதியில்லாமல் பிராணனை விடுவார்கள். மழையில்லாததால் துக்கத்தையே அடைவார்கள். எப்போதும்பஞ்சமேற்படுமானதால்ஜனங்கள் எப்போதும் துக்கத்தையே அடைந்துகொண்டுசுகம்சந்தோஷமென்பது இல்லாமலே போய் விடுவார்கள். கலியில் ஸ்னனம் செய்யாமலே சாப்பிடுவார்கள். தேவதை அதிதி இவர்களைப் பூசிக்க மாட்டார்கள். பிதிருக்களுக்கு தர்ப்பணம் செய்வதையும் விட்டுவிடுவார்கள். ஸ்திரீகள் எப்போதும் ஆசைமேலிட்டவர்களாயும், குறுகிய தேகமுடையவர்களாயும், அதிகத்தீனி உடையவர்களாயும், அதிகப் பிரஸவ முடைவர்களாயும், அல்பபாக்கியமுள்ளவர்களாயும், ஆவார்கள். ஜனங்கள் க்ராம்யமான ஆகாரத்தையே ஸ்வீகரித்துக்கொண்டு வனவாஸம் செய்வார்கள். சன்னியாசிகளும் ஸ்நேகி

தர் முதலியவர்களுடைய சம்பந்தத்தில் கட்டுப்பட்டிருப்பார்கள். அரசர்கள் ரக்ஷிக்காமலே வரி என்கிறகபடத்தினால் ஜனங்களுடைய பணங்களை அபகரிப்பார்கள். வேத மார்க்கம் குலைந்துபோய் ஜனங்கள் பாஷண்டர்களாய் ஆகும் போது அதர்மம் விருத்தியாவதால் லோகங்களுக்கு அல்பாயுள் ஏற்படும். சாஸ்திர சம்மதமில்லாமல் ஜனங்கள் கோரமாய் தபஸ்செய்யும் போது ராஜ தோஷத்தினால் பாலமிருத்யு ஏற்படும். ஸ்திரீகள் 5—6—வயதிலேயே பிரஸவிப்பார்கள். 7—8 வயதுள்ள புருஷன் ஏற்படுவான் 12வயதிலேயே தலை நரைக்கும். ஒருவனும் 20வயது பரியந்தமும் ஜீவிக்கமாட்டான். எப்போதெப்போது பாஷண்டர்களது விருத்திமேலிடுகிறதோ அப்போதப்போது கலியின் விருத்தியென்றறி. எப்போதெப்போது வேத மார்க்கத்தை அனுசரித்தவர்கள் அழிகிறார்களோ, தர்மிஷ்டர்களது காரியங்களெல்லாம் எப்போது கெடுகின்றனவோ அப்போதப்போது கலியின்விருத்தியென்றறிவேத வாதத்தில் எப்போது பிராமாண்யம் குறையுமோ அப்போது கலியென்றறி. மேகம் அல்பமாய் வர்ஷிக்கும். பயிர்கள் அல்ப பலனைக் கொடுக்கும். பலனும் அல்ப ஸாரமுள்ளதாய் இருக்கும். கலியுகத்தில் மனிதர்களுக்கு மாமனார் மாமியாரே குருவாய் இருப்பார்கள். மச்சினன் முதலானவர்கள் தான் ஸ்னேகிதர்களாவார்கள். மாமனார் முதலியவர்களையே அடைந்துகொண்டு யாருக்குத்தாய் தகப்பன் யாருக்கு புருஷன் கன்ம பந்தத்தினால் ஜனிக்கிறான் என்று வேதாந்தம் பேசுவார்கள். அல்ப புத்தியுள்ளவர்களான மனிதர்கள் வாக்கு, மனது, காயம் இவைகளால் ஏற்பட்ட பாபங்களால் அடிக்கடி பாபத்தையே செய்வார்கள். பல மற்றவர்களாயும் அழகற்றவர்களாயும், சம்பத்தற்றவர்களாயுமிருக்கிற மனிதர்களுக்கு உலகத்தில் துக்க மென்பது எவ்வளவு உண்டோ அவ்வளவும் ஏற்படும். ஸ்வாத்தியாயம் வஷட்காரம் ஸ்வதா, ஸ்வாஹா முதலிவைகளில்லாத அந்தகாலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக தர்மமானது எங்கேயாவது ஒழிந்திருக்கும். அந்தக்காலத்தில் அல்பமான முயற்சியினாலேயே கிருதயுகத்தில் ஒரு மனிதன் நீண்ட கொடிய தவத்தினால் எவ்வளவு புண்ணியத்தைப் பெறுவானோ அதையே இவனுமடைந்து விடுவானென்றார்.

ஆரியர்களே! இவ்விடங்களில் யான் சுருக்கிச்சொன்னே தவிற முழுமையும் சொல்லவில்லே. இன்னும் இவைகளை விசேஷமாய் அறியவேண்டுமேயாயின் இதுமட்டிலுமல்ல. மற்று மத்ஸிய கூர்மம், காருடம்; லிங்கம், பாத்மம் கிரியாயோகசாரத்தில் பாகவதம், மகாபாரதம் வனபர்வா இவ்வளவிலுமறியலாம். இவ்வளவு தூரம் இதைச்சொன்னது எதற்காகவென்றால் இப்படிப்பட்ட கலியின் மகிமையைக் கொஞ்சம் சிந்தித்தாவது நல்வழிப்பட நேருமென்பதற்காகவே சொன்னதாயிற்று.

சிலபெரியோர்கள் இங்கும் ஒரு சமாதானம் சொல்லக்கூடும். அதாவது? இந்த பவிஷ்யத் புராணம் நமது முன்னேர்களது வாக்கானதால் அதைப்பயன் செய்யவேண்டாமா. நாம்தான் அதை மீறமுடியுமா. அப்படியேமீறினும் அவர்களுக்குத்துரோகம்செய்தவர்களாய் ஆகமாட்டோமா வென்கிறார்கள். இது மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. இவ்விடங்களில் அப்படி நடக்கவேண்டுமென்று விதிவாக்கியமாகவா ஏற்பட்டிருக்கிறது. இவைகளைச் சொன்னதால் இதனுல் மனதுக்கு ஒரு பயமேற்பட்டு அதிலிருந்து கூடியமட்டிலும் ஆஸ்திகனுயிருப்பவன் தர்மங்களைச் செய்யட்டுமென்பதற்காக மட்டிலும் புகழ்ந்தார். ஆனதால் தான் முடிவில் கிருதயுகத்தில் அனேக ஆயிரவருடங்கள் தபஸ் செய்து அடையும் பலனே இந்தக்காலத்தில் அல்பகாலத்திலேயே சிரமமின்றி அடையலாம் என்று முடித்தார். இது எதுபோலென்பதற்கு திருஷ்டாந்தமாய் இந்த கதையை கவனித்துப்பாருங்கள். இருவர் நேசர்கள் ஒருநாள் பேசிக்கொண்டிக்கும்போது அன்று ஏற்பட்டிருந்த அமாவாசை இருட்டைப்பார்த்து அப்பா இந்த இருட்டிற்கு அவசியம் திருடன் வந்தே தீருவான் என்று சொன்னவார்த்தையைக்கேட்டு மற்றொருவன் உடனே வீடு வந்து வாசற்கதவுகளைத் திறந்துப் போட்டுநிர்பயமாய்த் தூங்கினன். பிறகு திருடன் சாமான்களைக்கொண்டு போய் விட்டானென்று தெரிந்து ஏனர் ஜனங்கள் களவு கொடுத்து விட்டாயாமே என்று கேட்டார்கள். அதற்கு அவன் ஆம் என் ஸ்னேகிதன் நேற்றிரவில்நிச்சயமாய்த் திருடன் வருவானென்றான். அதன்படியே அவன்வாக்கைவீண்

செய்யாமலிருக்க வாசற் கதவுகளைத் திறந்து போட்டேனென்று சொல்லவேண்டும் இது நியாயமா? அவன் சொன்னவார்த்தைதன் ஜாக்கிரதையாயிருவென்று சொன்னது போல் பிரகிருதத்திலு மேன்றெண்ணுங்கள்.

ஆரியர்களே? இவ்விஷயங்களை யெல்லாம் யாம் ஆழ்ந்தாலோசிக்கு மிடத்தில் இது நம்முடைய யத்னத்தினல் நடக்கும் காரியமல்ல. கலியின் ஆக்ஞையே இதற்கு முதற்காரணமாய் நின்றுலும் அதனல் வர்ணாசிரம தர்மங்களை ஒரு போதும் விலக்கமுடியாதென்றும் அது ஈசனது கட்டளைதானென்றும் எண்ணி நாம் அம்மட்டிற்கும் முயன்றவளவு மரியாதை கொடுத்து நற்காரியங்களையே கூடியமட்டிலும் நடத்த முயலவேண்டு மென்பது தான் எனது கோரிக்கையே தவிற வேறொருவர்களைத் தூஷிக்கப் பிரவர்த்தித்ததல்ல. '[illegible]' [illegible] ஒவ்வொரு யுகத்திலும் எவ்வளவு தர்மமோ அதில் எப்படிப்பட்ட பிராமணர்களோ அவர்களை நாம் நிந்திக்கலாகாது. ஏனெனில் அந்த பிராமணர்கள் யுகரூபர்களல்லவா. அதாவது கிருத யுகத்திலிருந்த பூர்ணம்ச தர்மங்களை அனுஷ்டிக்க அத்தகைய வேதியர்கள். பிறகு மூன்றுபாகத்திற்குத்தக்க பிராமணர்கள். பிறகு இரண்டு பாகத்திற்குப்பிறகு கடைசி கலியில் கால் பாக தர்மத்திற்கு அந்த சக்திபொருந்திய பிராமணர்களென்றபடி நாம் அவர்களை நிந்திப்பது நியாயமே இல்லை என்று அதை விடவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். பெரியோர்களே? இம்மட்டில் எனக்கு இன்று கொடுத்த வர்ணாசிரமதர்ம மென்ற விஷயத்தில் வர்ணம் என்பதை மட்டிலும் என் சிற்றறிவுக் கெட்டியவரைசொன்னேன். இதில் என்பால்யத்தன்மையினலும் அறியாத தன்மையினலும் அநேக தவறுதல்களான வார்த்தைகள் ஏற்பட்டிருக்கலாம். அவைகளை மூர்க்கத்தன்மையாற் சொல்லப்பட்டவைகளென்று விலக்கி குணங்களைமட்டும் கிரகித்துக்கொண்டு என்னைக் கிருதார்த்தனைச் செய்யவேண்டுமென்றும் மிகுந்த வணக்கத்துடன் தாழ்ந்து அடிபணிந்து கேட்டுக் கொள்கிறேன். சுபம். சுபம்.

[illegible]

[illegible]

இங்ஙனம்.

பெரியோர்களது சேவகன்

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.